என்னுயிர்த் தோழி



செவ்வந்தி

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: என்னுயிர்த் தோழியே
ஆசிரியர்	: செவ்வந்தி
உரிமை	: ஆசிரியருக்கு
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	: மார்ச், 2016
தாள்	: 11.6 kg. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	: 1 x 8 கிரவுன்
அச்சு எழுத்து	: 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	: 220
பைண்டிங்	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: சசி நிலையம் A-9, இரண்டாவது மாடி, ரோஹிஸ் அஸ்வத் பிளாட்ஸ், 61, முத்து தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

விலை: ரூ.100.00

கணினி அச்சு	: வேலன் லேசர் - 94441-01753
அச்சிட்டோர்	: கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-14.



என்னுயிர்த் தோழியே

என்னுரை!

ஒரு பெண்ணுக்கு ஆண் நண்பன் என்பவன், அவன் உண்மையான நண்பன் எனில் அவன் பேசும் வார்த்தைகள் அவளுக்கு வெட்கத்தையோ, அருவருப்பையோ தராது. அவனின் பார்வை அவளின் கழுத்துக்குக் கீழ் செல்லாது.

அப்படிச் சென்றாலும் கூட அவனின் பார்வையில் சலனங்கள் தோன்றாது. அவன் தரும் முத்தம் அவளின் மனதுக்குள் குறுகுறுப்பையோ, ஆபாச எண்ணங்களையோ தோற்றுவிக்காது. அவனைப் பார்க்கையில் அவன் ஒரு ஆண் என்ற எண்ணத்தை விட அவன் என் நண்பன் என்ற எண்ணமே அவளுக்கு முதலில் தோன்றும்.

இப்படி ஒரு நண்பன் அனைத்துப் பெண்களுக்கும் அமைந்துவிட மாட்டான். ஆனால் நூற்றில் அல்லது ஆயிரத்தில் இருவர் இப்படி உண்மையான நண்பர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு இந்த நாவல் சமர்ப்பணம்!

- **செவ்வந்தி**

என்னுயிர்த் தோழியே

1

சரியாக மணி நள்ளிரவு 12.01.

ஆழ்ந்த உறக்கத்தில் அற்புதமான கனவு ஒன்றில் சுகமாக மூழ்கியிருந்தாள் மகிஷா.

அவளின் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் அவன். அவன் அந்த அறையில் உள்ள விளக்கைப் போட்ட பொழுதும் மகிஷா விழிக்கவில்லை.

மெல்ல அவள் அருகே சென்றவன், குழந்தைத் தனம் மாறாத அவளின் முகத்தைக் கூர்ந்து பார்த்து மென்மையாகப் புன்னகைத்தான்.

பின்னர் அவளின் காதோரம் குனிந்தவன்,

''ஹேப்பி பர்த்டே மகி!'' என்றான் மெல்லிய குரலில்.

லேசாக புரண்டவள்,

''தேங்க்ஸ் மது!'' என தூக்கத்திலேயே முனகி விட்டு, மீண்டும் தன் கனவினைத் தொடர்ந்தாள்.

மீண்டும் மெல்லியப் புன்னகை ஒன்றை உதிர்த் தவன், அவளின் தலைக் கேசத்தை லேசாக வருடி விட்டான்.

அவள் தூக்கத்தில் உதைத்துக் கீழே தள்ளிய போர்வையை எடுத்து உதறியவன், அதை அவளின் கழுத்து வரை போர்த்தி விட்டான்.

அந்த அறையின் ஜன்னல் திறந்தே இருப்பதைக் கண்டவன், உறங்கிக் கொண்டிருந்தவளை 'சோம் பேறி' என மனதுக்குள் கடிந்தபடி, ஜன்னலை இழுத்துச் சாத்தினான்.

பின்னர் அந்த அறையில் இருந்த விளக்கை அணைத்தவன், அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டான்.

* * *

காலை ஆறு மணிக்கு அலாரம் அடிக்க... சோம்பல் தெளியாமல் எழுந்தமர்ந்தாள் மகிஷா.

இரு கைகளாலும் கண்களைக் கசக்கியபடி கண் விழித்தவளின் பார்வைக்கு முதலில் தென்பட்டது...

அவளது வலது கையில் இருந்த வெள்ளியாலான ப்ரேஸ்லெட்.

அதை உற்றுப் பார்த்தவளுக்கு அதில் பொறிக்கப் பட்டு இருந்த M.M. கண்ணில் பட்டது.

அதைக் கண்டதும் அழகாக முகம் மலர்ந்தவள், எழுந்து சென்று குளித்துவிட்டு, புத்தாடை அணிந்து கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

அறையின் வெளியே அவளின் வருகைக்காகக் காத்திருந்த சாந்தசீலனும், மாதரசியும் ஒரே குரலில்,

''ஹேப்பி பர்த்டே மகிஷா...!'' என்றனர்.

''தேங்க்ஸ் மா... தேங்க்ஸ்பா'' என்றவள், அவர்கள் இருவரின் காலிலும் விழுந்து வணங்கினாள்.

''மகராசியாய் இரும்மா!'' என்றவர்கள் அவளை ஒருசேரத் தூக்கி நிறுத்தினர்.

மாதரசியின் கையில் வைத்திருந்த சாக்லெட் பாக்ஸை வாங்கிய மகிஷா, அதில் இரண்டு சாக்லெட்டு களை எடுத்துப் பிரித்து, அதை அவர்கள் இருவர் வாயிலும் ஊட்டி விட்டாள்.

பின்னர் அந்த வீட்டில் இருந்து கிளம்பியவள், பக்கத்து வீட்டிற்குச் சென்றாள். வீட்டின் கதவு திறந்தே இருக்க... உள்ளே நுழைந்தாள்.

''ஹே... மகிம்மா! என்ன காலையிலேயே?'' என ஆச்சரியமாகக் கேட்ட ஹேமாவதி, அவளின் கையில் இருந்த சாக்லெட் பாக்ஸை கவனித்துவிட்டு,

''ஸாரிடா.. மறந்துட்டேன்'' என்றாள் சிறிது வருத்தத்துடன்.

''பரவாயில்லை ஆன்ட்டி! ஆசீர்வாதம் பண்ணுங்க!'' என்றவள்,

அவளின் காலில் விழுந்தெழுந்து, அவளின் முன் சாக்லெட் பாக்ஸை நீட்டினாள்.

''தீர்க்காயுசா இரும்மா!'' என்றவள், சாக்லெட் ஒன்றை எடுத்துக் கொண்டாள்.

சோமநாதனையும் தேடிச் சென்று சாக்லெட் தந்தவள், கடைசியாக மதுபாலனின் அறைக்குச் சென்றாள்.

மதுபாலன் குளித்து முடித்து, நீல நிறச் சட்டையும், அதே நிற ஜீன்ஸையும் அணிந்து கொண்டு, கண்ணாடியின் முன் ஒயிலாக நின்றபடி தலையை வாரிக் கொண்டு இருந்தான்.

''மது'' என மகிஷா அழைக்கவும், வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

''ஹேய் மகி! என்ன காலையிலேயே எந்திரிச்சிட்ட? எப்போதும் மணி பத்து, பத்தரைக்குதானே எந்திரிப்ப? இன்னைக்கு என்ன ஆச்சு? கனவில் ஏதாவது பேய், பிசாசைக் கண்டு பயந்து போய் எழுந்து விட்டாயா?'' என கேலியாகக் கேட்டுச் சிரித்தான்.

மகிஷா முறைப்பதைக் கண்டு தன் சிரிப்பை நிறுத்தியவன்,

''ஹேப்பி பர்த்டே மகிஷா!'' என்றான்.

''இது எதற்கு செகண்ட் விஷ்ஷஸ்?''

''செகண்ட் விஷ்ஷஸா? நான் இப்போதுதானே விஷ் பண்றேன்.''

அவனின் முன்பு தன் வலது கையைத் தூக்கிக் காட்டினாள்.

பிரேஸ்லெட்டைக் கண்டவன், பின்னந்தலையில் தட்டிக் கொண்டு அசடு வழியப் புன்னகைத்தான்.

பின்னர் அருகிலிருந்த அலமாரியைத் திறந்தவன்... ஒரு சின்ன விநாயகர் சிலையினை எடுத்து அவளிடம் தந்தான்.

''இதென்ன செகண்ட் கிப்டா?''

கேட்டவளின் நெற்றியில் மென்மையாக ஒரு முத்தமிட்டான்.

''இது தேர்ட் கிப்ட்.''

''தேங்க்ஸ் மது'' என்றவள் அவனை மேலும் கீழுமாகப் பார்த்தாள்.

''இதென்ன டிரெஸ்? இப்படி ப்ளூ அண்ட் ப்ளூ? நீயென்ன பஸ் கண்டக்டரா? இல்லை காலேஜ் ப்ரொபசரா?''

''இந்த ட்ரெஸ்க்கு என்ன குறைச்சல் மகி? நான் இதைப் போட்டுக் கொண்டு போனாலே காலேஜில் பாதி பிகர் என்னை லுக் விடும் தெரியுமா? எல்லாம் ஐயாவோட முகராசி அப்படி!''

சட்டைக் காலரைத் தூக்கி விட்டபடி பேசிய வனின் காதைப் பிடித்துத் திருகினாள் மகிஷா.

''அத்தனை பொண்ணுங்க லுக் விட்டும் ஏன்டா ஒருத்தியையும் கரெக்ட் பண்ண மாட்டேங்குற?''

''ஐயோ! காதை விடு... வலிக்குது!''

அவன் கத்தவும் காதை விட்டாள்.

''மகி சைட் அடிக்கறது அவங்க உரிமை! லவ்ல விழாமத் தப்பிக்கிறது என்னோட திறமை!''

''திறமைன்னு சொல்லி ஏன்டா எஸ்கேப் ஆகுற? உன் மூஞ்சிய எவளும் திரும்பிப் பார்க்கலைன்னு சொல்லு!''

''அப்படியா? சரி நீ அழகாத்தானே இருக்க..! நீ ஏன் யாரையும் லவ் பண்ணல?''

''ம். கண்டிப்பா நானும் ஒரு நாள் லவ் பண்ணு வேன்டா! எனக்காகப் பிறந்தவன் கண்டிப்பா ஒரு நாள் என்னைத் தேடி வருவான். அன்னைக்கு நான் அவன்கிட்ட என் லவ்வச் சொல்லும் முன்னாடி நிச்சயமா உன்கிட்டதான் முதலில் சொல்வேன்!''

கூறியபடி தன் கையிலிருந்த சாக்லெட் பாக்ஸை அவனிடம் நீட்டினாள். அதில் ஒன்றை எடுத்துப் பிரித்த மதுபாலன் அதை மகிஷாவிற்கு ஊட்டி விட்டான். பின்னர் தானும் ஒரு சாக்லெட்டை எடுத்துப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டான்.

மதுபாலன் - சோமநாதன், ஹேமாவதியின் ஒரே புதல்வன்.

மகிஷா - சாந்தசீலன், மாதரசியின் ஒரே புதல்வி.

சாந்தசீலனும், சோமநாதனும் சிறு வயது முதல் நண்பர்கள். இருவரும் ஒரே பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிபவர்கள்.

மதுபாலன் மகிஷாவை விட நான்கு வயது பெரியவன். அருகிலிருக்கும் கல்லூரி ஒன்றில் பேராசிரியனாக பணி புரிபவன். ஆனாலும் மகிஷாவால் வாடா, போடா என அழைக்கப்படுபவன்.

மகிஷா முழு நேர சோம்பேறியின் ஜெராக்ஸ் பிரதி. கடமைக்காக பள்ளிப் படிப்பையும், கல்லூரிப் படிப்பையும் முடித்தவள். கடந்த இரண்டு ஆண்டுகளாக வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாள்.

ஓய்வு எதற்கு எனக் கேட்கிறீர்களா?

இத்தனை வருடங்களாக படித்ததற்குதான்!

வீட்டில் இவளின் செல்லப்பெயர்.. 'சோம்பேறி ப்ரொபசர்.'

மதுபாலனும், மகிஷாவும் சிறு வயது முதல் நண்பர்கள்.

மதுபாலன் மகிஷாவின் மெய் நண்பன்.

மகிஷா மதுபாலனின் மெய் தோழி.

இருவருக்கும் இடையில் உள்ள நட்பு கலப்படம் இல்லாத தாய்ப்பாலைப் போன்றது.

ஒரே ஒரு மழைத்துளியில் உருவாகும் வெண் முத்தைப் போலத் தூய்மையானது.

இவர்களின் நட்பை சமுதாயத்தில் சிலர் சந்தேகக் கண்களுடன் பார்த்தாலும், வீட்டில் உள்ள பெற்றோர்க்கு தெரியும் இவர்களின் நட்பு எத்தனை புனிதம் என்று!

கல்லூரி முடிந்து வீடு திரும்பிய மதுபாலனின் முன் மூச்சிரைக்க ஓடிப் போய் நின்றாள் மகிஷா.

''என்ன மகி பிறந்த நாளும் அதுவுமா இப்படி டென்சனா இருக்க?'' அக்கறையுடன் வினவினான் மதுபாலன்.

''மது... அப்பா எனக்கு மாப்பிள்ளை பார்த்துள்ளாராம். அவர்கள் நாளை மாலை என்னைப் பெண் பார்க்க வருகிறார்களாம்.''

அவள் கூறியதைக் கேட்டு கலகலவென நகைத்தான்.

''உன்னையும் பெண் என நினைத்து ஒருவன் பார்க்க வருகிறான் என்றால்.. நிச்சயம் அவன் கண் போன குருடனாகத்தான் இருப்பான்.''

கூறிவிட்டு மீண்டும் தொடர்ந்து சிரித்தான்.

''ஜோக் சகிக்கல மது!''

காட்டமாகக் கூறினாள். அவளின் கோபத்தைக் கண்டவன் சிரிப்பை நிறுத்திக் கொண்டான்.

''இதற்காக ஏன் இவ்வளவு டென்சன் மகி?''

''டென்சன் ஆகாமல் எப்படி இருக்க முடியும்? நாளைக்கு என்னைப் பெண் பார்க்க வரப் போகிறார்கள்.''

''அதற்கென்ன பிரச்சனை? வருகின்ற மாப்பிள்ளையைப் பிடித்து இருந்தால் கல்யாணம் செய்து கொள்! அவ்வளவுதானே.''

''அவ்வளவுதானா? ஏன்டா உனக்கு நம்முடைய டீல் மறந்து போச்சா? நம்மிருவருக்கும் ஒரே நாளில் ஒரே மேடையில்தான் திருமணம் நடக்க வேண்டும் என்று சிறு வயதிலேயே ஒப்பந்தம் போட்டுக் கொண்டோமே மறந்து விட்டாயா?

ஆனால் நீயோ லவ்வும் பண்ண மாட்டேன்கிற! ஆன்ட்டி காட்டுற பொண்ணையும் பிடிக்குதுன்னு சொல்ல மாட்டேங்கிற!

இப்போது வரப் போகிற மாப்பிள்ளைக்கு என்னை பிடிச்சிப் போய்... உடனே கல்யாணத்தை நடத்தணும்ன்னு சொல்லிட்டா.. பிறகு நம்ம டீல் என்ன ஆகும்?''

கவலையோடு கேட்டவளை சில கணம் கண் சிமிட்டாமல் பார்த்தான்.

''இதற்காகக் கவலைப்படாதே மகி! நாளைக்கு வரப் போகிற மாப்பிள்ளைக்கு உன்னைப் பிடித்து, உனக்கு அவனைப் பிடித்தால்... நானும் அம்மா சொல்ற பொண்ணை ஓகே பண்றேன். சரியா?

அப்புறம் நாம இரண்டு பேரும் அவங்கவங்க ஜோடியோட ஒரே மேடையில் ஒரே நேரத்தில் கல்யாணம் பண்ணிக்கலாம்... சரியா?'' என மதுபாலன் தலையாட்டிக் கேட்டான்.

''சரி'' என்றவள் மகிழ்ச்சியோடு தன் வீட்டிற்கு ஓடினாள்.

* * *

மறுநாள் மாலை மகிஷாவைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டிலிருந்து வரப் போவதால் நேரத் தோடு வீடு வந்து சேர்ந்தான் மதுபாலன்.

பெண் பார்க்கிறவர்கள் இன்னும் வரவில்லைனு தெரிந்து கொண்ட மதுபாலன் மகிஷாவின் அறைக்குச் சென்றான்.

அங்கே நாற்காலி ஒன்றில் அமர்ந்த வண்ணம் நெளிந்து கொண்டிருந்த மகிஷாவைக் கண்டதும் மதுபாலனுக்குச் சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது.

சிரித்தவனை முறைத்துப் பார்த்தாள் மகிஷா.

''என் நிலமையைப் பார்த்தால் உனக்குச் சிரிப்பு வருகிறதா மது? இந்தப் புடவை எனக்கு எவ்வளவு அன்னீஸியா இருக்கு தெரியுமா?''

''கூல் மகி! வாழ்நாளிலேயே இன்றைக்குதான் முதன் முதலாக புடவை கட்டியுள்ளாய். அதனால் அப்படிதான் இருக்கும். வரவங்க உன்னைப் பார்த்து முடிக்கும் வரை கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்'' என சமாதானப்படுத்தினான்.

''பொண்ணு பார்க்க வரவங்க பொண்ணை சுடிதாரில் பார்க்க மாட்டாங்களா?''

பொதுவாக கேட்டு எரிந்து விழுந்தாள். அவள் பேசியதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் மாதரசி.

''எதுக்கு இப்போ இவ்ளோ கோபப்படுற? விசேஷ நாட்களில் புடவை கட்டச் சொன்னால் 'மாட்டேன்' எனக் கூறி விட்டு ஓடி விடுவாய்... புதிதாகப் புடவை கட்டினால் அப்படிதான் இருக்கும். கொஞ்சம் பொறுத்துக் கொள்!''

மகிஷாவிடம் கூறிவிட்டு மதுபாலனிடம் திரும்பினாள் மாதரசி.

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க! அவளைக் கூட்டிக் கொண்டு ஹாலுக்கு வாப்பா! நீ அருகில் இருந்தால்தான் அவளுக்குத் தைரியமே!'' என்றவள் ஹாலுக்குச் சென்றாள்.

மகிஷா, மதுபாலன் இருவரின் பெற்றோர்களும் பெண் பார்க்க வந்திருந்த ராகவ்வையும், அவனது பெற்றோரையும் வரவேற்று உபசரித்தனர்.

ராகவ் பார்க்க அழகாக இருந்தான்.

மகிஷாவின் பெற்றோர்க்கும், மதுபாலனின் பெற்றோர்க்கும் ராகவ்வைப் பார்த்தவுடன் பிடித்து விட்டது.

மாதரசி கொண்டு வந்து தந்த சிற்றுண்டியை உண்டு முடித்ததும் ராகவ்வின் தாய்,

''நல்ல நேரம் முடியறதுக்குள்ள பொண்ணை வரச் சொன்னீங்கன்னா'' என்று இழுக்க,

அதைப் புரிந்து கொண்ட மாதரசி உள்பக்கம் பார்த்து,

''மது.. மகிஷாவைக் கூட்டிட்டு வா...'' என்றாள்.

மகிஷா புடவை காலைத் தடுக்கிறது என்பதற்காக ஒரு கையால் புடவையைச் சிறிது தூக்கிப் பிடித்தபடி மறுகையால் மதுபாலனின் தோளைப் பற்றியபடி நடந்து வந்தாள்.

ஹாலுக்கு வந்ததும் புடவையை விட்டவள் மதுபாலனின் தோளை விடவில்லை.

இதைக் கண்டு ராகவ்விற்கு லேசாக சந்தேகம் தோன்றியது. ஆனாலும் மகிஷாவின் அழகு அவனைக் கட்டிப் போட்டதால் அமைதியாக இருந் தான்.

சிறிது நேரம் கழிந்ததும் மகிஷா மதுபாலனிடம்,

''டேய் மது! சத்தியமாக என்னால் இதற்கும் மேல் இந்தப் புடவையை கட்டியபடி இருக்க முடியாதுடா!'' என்றாள் மெல்லிய குரலில்.

அவளின் அவஸ்தையை உணர்ந்தவன் மாதரசியை அழைத்து விசயத்தைச் சொன்னான்.

மாதரசிக்கு மகிஷாவின் மேல் கோபம் வந்தாலும், கொஞ்சம் பரிதாபமும் வந்தது.

''சரி. நீ சென்று புடவையை மாற்றிக் கொள்!'' என்றாள்.

ஜெயிலிலிருந்து விடுதலையான சிறைக் கைதியைப் போல மகிழ்ச்சியுடன் தலையாட்டியவள் தன் அறைக்குச் சென்றாள். மதுபாலனும் அவளுடன் சென்றான்.

மகிஷா தன் அறைக்கு வந்ததும், அவசரமாக பாத் ரூமிற்குள் நுழைந்து, தான் கட்டியிருந்த பட்டுச் சேலையை அவிழ்த்து விட்டு சுடிதாருக்கு மாறினாள்.

பின்னர் பாத்ரூமிலிருந்து வெளியே வந்தவள், அங்கே கட்டிலில் அமர்ந்திருந்த மதுபாலனிடம்,

''இப்போதுதான் மூச்சு விடவே முடிகிறது'' என் றாள்.

அதை காதில் வாங்காதவன்,

''உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா?'' என்று ஆர்வமாகக் கேட்டான்.

அவன் ஆர்வத்தைக் கண்டு அதிசயித்தவள்,

''உனக்குப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டு புருவம் உயர்த்தினாள்.

''ம். பிடிச்சிருக்கு! ரொம்ப அழகா இருக்கார். நல்லா படிச்சிருக்கார்! மெடிக்கல் ரெப்பாக வேலை செய் கிறார்! வீட்டிற்கு ஒரே பையன்!''

''ம் அவன் அழகாதான் இருக்கான். அதை நானும் ஒத்துக்கிறேன். ஆனால் அவனைப் பார்க்கும் போது எந்த பீலிங்கும் வரலப்பா. இருந்தாலும் உனக்குப் பிடிச்சிருக்கு என்பதால் எனக்கும் பிடிச்சிருக்கு!'' என்றாள் மகிஷா.

அப்போது அங்கே வந்த மாதரசி,

''அவங்க கிளம்பறாங்க! உன்னிடம் சொல்லி விட்டுப் போகணும்னு ஆசைப் படுறாங்க. அதனால

ஹாலுக்கு வா!'' எனக் கூறி விட்டு முன்னால் சென்றாள்.

மாதரசியைத் தொடர்ந்து மதுபாலனும், மகிஷாவும் வந்தனர்.

முன்பு இருவரும் ஒன்றாக அறைக்குள் சென்றதையும், இப்போது திரும்பி வருகையில் மகிஷா சுடிதாரில் வருவதையும் கண்ட ராகவ்விற்கு சந்தேகம் மீண்டும் அதிகரித்தது. ஆனாலும் மகிஷாவின் அசரடிக்கும் அழகு அவன் கண்களின் ஆசையைத் தூண்டிவிட்டது.

அதனால்,

''பெண்ணைப் பிடித்துள்ளது!'' எனச் சொல்லி விட்டுக் கிளம்பினார்கள்.

* * *

அடுத்து வந்த இரண்டு நாட்களில் மகிஷா அந்த ஊரில் இருந்த திருமண தரகர்களிடமிருந்து அனைத்து பெண்களின் போட்டோவையும் குத்தகைக்கு எடுத்தது போல் வாங்கி விட்டாள்.

2

கல்லூரி முடிந்து வந்த மதுபாலன் மகிஷாவிற்கு குட் ஈவினிங் சொல்வதற்காக அவளது அறைக்கு வந்தான்.

அங்கே மகிஷா எக்கச்சக்கமான பெண்களின் போட்டோக்களை கட்டிலின் மேல் கடை பரப்பி வைத்திருப்பதைக் கண்டவன்,

''மகி... இதெல்லாம் என்ன?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டான்.

''மது... உனக்கு இதில் எந்தப் பெண்ணைப் பிடித்துள்ளது என நீயே செலக்ட் பண்ணுடா! எனக்கு இந்தப் பெண்களை வெறும் போட்டோக்களில் மட்டும் பார்த்து உனக்குப் பொருத்தமான பெண்ணை செலக்ட் பண்ணத் தெரியல!'' என்றாள் வருத்தத்துடன்.

அவளின் வருத்தத்தைக் கண்டவன், அதை நீக்க எண்ணி, அங்கிருந்த போட்டோக்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான்.

அனைத்தையும் பார்த்து முடித்தவன், சலிப்புடன்,

''எனக்கு இதில் ஒரு பொண்ணைக் கூட பிடிக்கல. இப்ப என்ன பண்றது மகி?'' என்றான் கவலையாக.

அவனின் கவலையை அறிந்தவள்,

''கவலைப்படாதே மது! உனக்கு ஏத்த மாதிரி ஒரு பொண்ணு கிடைக்கிற வரைக்கும் நான் வெயிட் பண்றேன்!'' என்றாள்.

''நீ வெயிட் பண்ணுவ! ஆனால் அந்த ராகவ் வெயிட் பண்ணுவாரா?''

''அவனுக்கு என்னை நிஜமாகவே பிடிச்சிருந்தா வெயிட் பண்ணட்டும்! இல்லைன்னா வேறு எவளையாவது கட்டிக்கட்டும்!''

வெகு சாதாரணமாகச் சொன்னவளை அதிர்ச்சி யுடன் பார்த்தவன்,

''மகி உனக்கு அவரைப் பிடிக்கவில்லையா?'' என வினவினான்.

''ம்ப்ச்... பிடிக்கவேயில்லை! ஆனால் உனக்குப் பிடிச்சிருக்கே! அதனால்தான் நானும் ஓகே சொன் னேன். விடு பரவாயில்லை.

எனக்கு யார்ன்னு தலையில எழுதியிருக்கோ அவன்தான் நிச்சயமாக என் கழுத்தில் தாலி கட்டு வான்'' என்றாள் நம்பிக்கையுடன்.

* * *

மறுநாள் ராகவ்விற்கு போன் செய்த மகிஷா அவனை ஒரு குறிப்பிட்ட ரெஸ்டாரண்ட் ஒன்றிற்கு வரச் சொன்னாள்.

சிறிது நேரத்தில் ராகவ் ரெஸ்டாரண்டிற்கு வந்து விட, இருவரும் அங்கிருந்த டேபிள் ஒன்றில் எதி ரெதிரே அமர்ந்தனர்.

இருவருக்கும் காபி வரவழைத்த ராகவ், அவ ளிடம்,

''சொல்லு மகிஷா!'' என்றான் தோரணையுடன்.

மகிஷா சிறிது தயக்கத்துடன் தானும், மதுவும் சின்ன வயதில் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தைப் பற்றிச் சொன்னாள். அதனால் அவனுக்குப் பெண் கிடைக்கும் வரை வெயிட் பண்ண முடியுமா?' என்று கேட்டாள்.

சிறிது நொடிகள் யோசனையில் ஆழ்ந்தவன் அவளது அழகு முகத்தைப் பார்த்துவிட்டு சரி எனத் தலையாட்டினான்.

உடனே மகிஷாவின் முகம் மகிழ்ச்சியால் மேலும் அழகாகியது. அதைக் கண்டவன்,

''உன் கண்டிசனுக்கு நான் ஒத்துக் கொண்டேன். அதே போல எனக்கும் ஒரு கண்டிசன் உண்டு. அதற்கு நீயும் ஒத்துக் கொள்ள வேண்டும்!'' என் றான்.

''என்ன கண்டிசன்?''

புரியாமல் கேட்டாள் மகிஷா.

''அதைப் பிறகு சொல்கிறேன்'' என்றவன் அவ ளிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டுப் புறப்பட்டான்.

மகிஷா வீட்டிற்கு வந்ததும் மதுபாலனிடம் ராகவ் தன் கண்டிசனிற்கு ஒத்துக் கொண்டதைப் பற்றிச் சொன்னாள்.

* * *

இரண்டு நாட்கள் கழித்து மகிஷாவிற்கு போன் செய்த ராகவ் மகிஷாவை அருகே இருக்கும் தனியார் மருத்துவமனை ஒன்றிற்கு வரச் சொன்னான். மகிஷா காரணம் கேட்டதற்குச் சொல்லாமலேயே போனை வைத்து விட்டான்.

மகிஷாவிற்கு ஹாஸ்பிட்டல் என்றாலும், ஊசி என்றாலும் பயம். அதனால் அங்கே தனியாகச் செல்லப்

பயந்து கொண்டு, மதுபாலனுக்கு போன் செய்து விசயத்தைச் சொன்னவள், அவனையும் துணைக்கு வரச் சொன்னாள்.

மதுபாலனும் கல்லூரியில் அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு மகிஷாவுடன் ஹாஸ்பிட்டலுக்குச் சென்றான்.

ஹாஸ்பிட்டலுக்கு ஒன்று சேர்ந்து வந்த இரு வரையும் எரிச்சலுடன் பார்த்தான் ராகவ்.

''மகிஷா நான் உன்னை மட்டும்தானே வரச் சொன்னேன்?'' என்றான் அதிகாரமாக.

அவனின் அதிகாரம் மகிஷாவிற்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

''என்ன மது உங்களுக்குக்கூடப் புரியவில்லையா? நான் இவளிடம் தனியாகப் பேச வேண்டும் என்று தான் வரச் சொன்னேன்! நீங்களும் ஏன் விவஸ் தையே இல்லாமல் உடன் வந்துள்ளீர்கள்?'' என்றான் எரிச்சலுடன்.

மதுபாலனிடம் ராகவ் கேள்வி கேட்பது மகிஷா விற்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவள் எதையோ பேச வாய் திறக்கும் முன் மதுபாலன்,

''ஸாரி ராகவ்! இவளுக்கு ஹாஸ்பிட்டல் என்றால் சிறு வயதில் இருந்தே பயம்! அதனால்தான்...'' என்றான்.

''ஓ! அப்படியென்றால் பர்ஸ்ட் நைட் அன்றைக்கு பயம் என்றால்... அப்போதும் துணைக்கு வருவீர் களோ?'' என்றான் நக்கலாக ராகவ்.

அவனின் விரசமான பேச்சில் ஆவேசமடைந்த மகிஷா தன் கோபத்தை அவனிடம் காட்டத் தொடங்கும் முன் அவளின் கரம் பற்றி அழுத்திய மதுபாலன்,

''மகிஷா நான் ஹாஸ்பிட்டலுக்கு வெளியே வெயிட் பண்றேன். நீங்க பேசிட்டு வாங்க!'' என்ற வன் உடனே வெளியே கிளம்பிச் சென்றான்.

மதுபாலன் முகம் கறுத்து வெளியே செல்வதைக் கண்ட மகிஷா ராகவ்விடம்,

''என்ன பேசணும்?'' என்றாள் கோபமாக.

''உன் கண்டிசனுக்கு நான் ஒத்துக் கொண்டேன். அதேபோல நீயும் என் கண்டிசனுக்கு ஒத்துக் கொள்!'' என்றவன், அங்கிருந்த பெண் மருத்துவர் அறை ஒன்றைக் காட்டினான்.

''இந்த டாக்டர்கிட்ட உனக்கு அப்பாயின்மென்ட் வாங்கியிருக்கேன்!''

''எதற்கு?'' புரியாமல் கேட்டாள்.

''நீ வெர்ஜினா என டெஸ்ட் செய்வதற்கு... ஏனென்றால் எனக்கு உன்னையும், மதுவையும் பார்த்தால் ப்ரெண்ட்ஸ் மாதிரி தெரியல! எனக்கு பயங் கர சந்தேகமாக இருக்கு! நான் ஒரு கற்பிழந்தவளைக் கட்டிக் கொள்கிற அளவுக்கு தர்ம சிந்தனை உள்ள வன் அல்ல! அதனால் இந்த டெஸ்டில் நீ கன்னி எனத் தெரிந்தால் உன்னை நான் நம்புகிறேன்! உன் கண்டிசனிற்கும் ஒத்துக் கொள்கிறேன்!''

அவனை எரித்து விடுவது போல் பார்த்தவள்,

''உன்னிடம் என்னை நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. உன் சந்தேக புத்தி இப்பவே தெரிந்ததே! நீ நன்றாகவே இரு!'' என்றவள் அங்கிருந்து வெளியேற முயன்றாள்.

சட்டென அவளின் கரம் பற்றி நிறுத்தினான் ராகவ்.

அவன் புறம் திரும்பி அவனை முறைத்தவள்,

''என் கையை விடு!'' என்றாள் கோபமாக.

''முடியாது மகிஷா! ஏனென்றால் உன் அசரடிக்கும் அழகு என்னை உன் அடிமையாக்கி விட்டது. ப்ளீஸ் இந்த ஒரு டெஸ்ட்டுக்கு மட்டும் ஒத்துக் கொள். அதன் பிறகு நீ என் இதய தேவதை. உன் மேல் ஒரு தூசி கூடப் படாத மாதிரி பார்த்துக் கொள்வேன். என்னை நம்பு!'' என்றான்.

''உங்களை இதற்கு மேலும் நம்புகிற அளவுக்கு நான் ஒன்றும் அவ்வளவு முட்டாளில்லை!'' என்றவள், தன் கையை உருவிக் கொண்டு வெளியேறினாள்.

வெளியே நின்றிருந்த மதுபாலனின் அருகே சென்றவள்,

''போலாம் மது!'' என்றாள்.

அவளின் பின்னால் ஓடி வந்த ராகவ்,

''மகிஷா ஒரு நிமிஷம் நில்லு! ப்ளீஸ்... இந்த ஒரு முறை மட்டும் என் கண்டிசனுக்கு ஒத்துக் கொள்!'' என்றான்.

''என்ன ராகவ் ஆச்சு?''

கேள்வி கேட்ட மதுபாலனை எரிச்சலாகப் பார்த்த ராகவ் உள்ளே நடந்ததை சிறிதும் குற்ற உணர்வின்றி சொல்லி முடித்தான்.

அதைக் கேட்டதும் மதுபாலனின் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. ''மனைவியாக வரப் போகிறவளை திருமணத்திற்கு முன்பே சந்தேகப்படுகிறாயே! நீயெல்லாம் என்ன மனுசன்?'' என்றான் கோபத்தோடு.

''சந்தேகப்படாமல் வேறு என்ன செய்யச் சொல்கிறாய்? உங்களின் நட்பு நம்புகிற மாதிரியா இருக்கு? அன்னைக்கு பெண் பார்க்க வந்தபோது இரண்டு பேரும் ஜோடி சேர்ந்து ரூமுக்குள் போனிங்க! வரும்போது அவள் ட்ரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வரா. இதிலயே தெரியலயா, உங்க நட்பு எந்த மாதிரின்னு?''

''இல்ல ராகவ் நீ தவறாகப் புரிந்து கொண்டாய்! அவள் அந்த அறையிலிருந்த அட்டாச்ட் பாத்ரூமில் தான் ட்ரெஸ் சேஞ்ச் பண்ணினாள்!'' என அவசரமாக விளக்கினான் மதுபாலன்.

''சரி. அப்படி உங்களுக்குள் இருப்பது வெறும் நட்புதானென்றால் இந்த டெஸ்ட் எடுப்பதில் என்ன தயக்கம் இவளுக்கு?''

அவனின் நம்பிக்கையில்லா தனத்தைக் கண்ட மகிஷா ஆவேசத்துடன்,

"நீ என்ன என்னை டெஸ்ட் பண்றது? உன்னை எனக்கு முதலில் இருந்தே பிடிக்கல! மதுவுக்குப் பிடிச்சிருக்கு என்றதால்தான் நானும் சரின்னு சொன்னேன். இப்போது சொல்றேன், சந்தேக புத்தி உள்ள உன்னை எனக்குச் சுத்தமாகப் பிடிக்கல!" என்றவள், மதுபாலனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அவனது பைக் நிறுத்தியிருந்த இடத்திற்குச் சென்றாள்.

மதுபாலன் மனபாரத்துடனேயே வண்டியை வீட்டிற்குச் செலுத்தினான்.

* * *

அதன் பிறகு வந்த நாட்களில் மதுபாலன் மகிஷாவிடம் சரியாக முகம் கொடுத்துப் பேசாமல் இருந்தான்.

மகிஷா தன் பெற்றோரிடம் ராகவ்வை தனக்குப் பிடிக்கவில்லை எனக் கூறிவிட்டதால் திருமண சம்பந்தமும் நின்றுவிட்டது.

மதுபாலன் மகிஷாவிடம் சரியாகப் பேசாததைக் கண்ட சாந்தசீலன் தன் மகளிடம் விவரத்தைக் கேட்டார்.

மகிஷாவும் நடந்தது அனைத்தையும் அவரிடம் கூறினாள்.

அவளின் மனம் அந்த நேரத்தில் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை உணர்ந்த சாந்தசீலன்.

"அவனின் சந்தேக குணம் பற்றி இப்போதே தெரிந்ததே! அதுவே போதும்!" என்றவர் அவளின் தலைக் கேசத்தை வருடி விட்டார்.

அவரைச் சந்தேகமாகப் பார்த்த மகிஷா,

"அப்பா உங்களுக்கு எங்கள் நட்பின் மேல் சந்தேகமில்லையா?" என்றாள்.

"என்னிடம் நீ இப்படி ஒரு கேள்வியைக் கேட்கலாமா மகிஷா? நீயும் மதுவும் எனக்கு இரு கண்களைப் போல! நான் உங்களைச் சந்தேகித்தால் என் கண்களில் தெரியும் காட்சிகள் அனைத்தையும் சந்தேகிப்பது போல!

இதுவே நீ மதுவை அண்ணா என்று அழைத்திருந்தால் உங்களை யாரும் சந்தேகப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் ஒரு நல்ல நண்பனை அண்ணா என அழைப்பது அவ்வளவு சரியென எனக்குத் தோன்றவில்லை.

உங்களுக்குள் இருப்பது புனிதமான நட்பு. மஞ்சள் காமாலைக்காரனுக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சளாகத் தெரியுமாம். அதுபோலத்தான் சந்தேகப் பிராணிகளுக்கு உங்களின் நட்பும் தவறாகத் தெரிகிறது. அதற்காக அவர்களைப் போல நானும் சந்தேகப்பட முடியுமா? எனக்கு என் மகிஷா மேலும் மது மேலும் நிறைய நம்பிக்கை உள்ளது!"

சாந்தசீலனின் வார்த்தைகளால் மகிஷாவின் கலங்கிய உள்ளம் தெளிந்தது. அவளின் மனதில் தெம்பு பிறந்தது.

அன்று மாலை மதுபாலனைத் தேடி அவனது அறைக்குச் சென்றாள் மகிஷா.

அங்கே கட்டிலில் படுத்துக் கொண்டு விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தான் மதுபாலன்.

அவன் அருகே சென்று கட்டிலில் அமர்ந்தவள்,

''நீ ஏன் கொஞ்ச நாளாக என்னுடன் சரியாகப் பேச மாட்டேன்கிற மது?'' என்றாள்.

சட்டெனக் கட்டிலிலிருந்து இறங்கியவன்,

''எனக்கு ஸ்டடி ரூமில் கொஞ்சம் வேலை இருக்கு மகி!'' என்றவன் ரூமை விட்டு வெளியேறினான்.

அவன் பின்னாலேயே விரைந்த மகிஷா அவனின் கையைப் பிடித்து நிறுத்தினாள்.

அவளின் கையைச் சட்டென உதறியவன்,

''இனிமேல் என்னைத் தொட்டுப் பேசாதே!'' என்றான் அழுத்தமாக.

உடலில் தீ பட்டதைப் போல் உணர்ந்த மகிஷா,

''நீ இப்போது இதை எந்த அர்த்தத்தில் சொன்னாய்?'' என்றாள் கண்களில் அனல் பறக்க.

'அதட்டி உறங்க வைக்க வேண்டிய குழந்தையை முட்டாள் தனமாக அடித்தது போல் இவளிடம் இப்படிப் பேசி விட்டோமே!' என வருந்தியவன், 'இதுவும் இவளின் நல்லதற்குதானே' என எண்ணியபடி அவளிடம்,

''நீ நினைக்கிற அதே அர்த்தத்தில்தான் சொன்னேன்!'' என்றான் மனதைக் கல்லாக்கிக் கொண்டே.

அவனின் சட்டையைப் பிடித்துக் கன்னத்தில் பளீரென ஒரு அறை விட்டவள்,

''ஏதோ ஒரு தெரு பொறுக்கி சொன்னான் என்பதற்காக என்னிடமே நீ இப்படிப் பேசுகிறாயா? நீ மனதில் இருந்து பேசுவது எது? வெறும் வார்த்தைக்காகப் பேசுவது எது? என்று கூட எனக்குத் தெரியாது என நினைத்தாயா?'' என்று உறுமினாள்.

அவள் போட்ட சத்தத்தில் அங்கு வந்த சோமநாதனும், ஹேமாவதியும் அவளிடம் என்னவென விசாரித்தனர்.

மதுபாலனை ஒரு பார்வை பார்த்தவள், அவர்களிடம் ராகவ் ஹாஸ்பிட்டலில் நடந்து கொண்டதையும், மதுபாலன் அதற்காக தன்னிடம் சில நாட்களாகப் பேசாமல் இருப்பதையும் கூறினாள்.

''ச்சே! அந்த ராகவ் அவ்வளவு மோசமானவனா? கடவுளே! எப்படியோ நம்ம பொண்ணு தப்பிச்சா!'' என ஆறுதல் அடைந்தாள் ஹேமாவதி.

''நீ ஏன்மா இதை அன்னைக்கே சொல்லவில்லை? நீ மட்டும் அப்போதே சொல்லியிருந்தால் நான் அவன் பல்லை உடைத்திருப்பேன்!'' என ஆவேசமடைந்தார் சோமநாதன்.

''நீங்க இப்படிச் சொல்றீங்க? ஆனால் இவன் நான் அந்த ஒழுக்க சீலனை வேண்டாம் என்றதற்காக.. அந்தப் பரதேசி எங்களின் நட்பை சந்தேகப்பட்டது என்றதற்காகவும் என்னோடு பேச மாட்டேன்கிறான்!

இவன் நடந்து கொள்வதைப் பார்த்தால் அவனின் சந்தேகத்திற்கு இவனும் துணை நிற்பது போல் இருக்கு அங்கிள்!'' எனக் கண் கலங்கக் கூறியவள், தன் கண்களில் கண்ணீர் கரை புரண்டு ஓடக் காத்திருக்கிறது என உணர்ந்து அங்கிருந்து வேகமாக வெளியேறினாள்.

தன் வீட்டின் தோட்டத்திற்கு வந்தவள், அங்கிருந்த புல்வெளியில் அமர்ந்து சத்தமின்றி அழுதாள்.

அவள் அழுவாள் எனத் தெரிந்தே இருந்த மதுபாலன் அவளைப் பின் தொடர்ந்து வந்து அவள் அருகே அமர்ந்தான்.

சட்டென அவனை விட்டு விலகி அமர்ந்தவள்,

''என் அருகே அமராதே! அமர்ந்தால் நீயும்... நான்.. நானும்'' என்றவள் மேற்கொண்டு சொல்லத் தெரியாமல் திணறியபடி முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

அவளை நெருங்கி அமர்ந்தான், அவளின் முகத்தை தன் புறம் திருப்பி அவளின் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''ஸாரி மகி! அன்றைக்கு அவன் அப்படிச் சொல்லியதும் எனக்கு மனதிற்கு ரொம்ப கஷ்டமாகி விட்டது. இவனைப் போல இனிமேலும் யாரும் நம்மை சந்தேகப்படக்கூடாது என்றுதான் நான் அப்படி நடந்து கொண்டேன். ஸாரி மகி!'' என்று கெஞ்சினான்.

''யாரோ சந்தேகப்படட்டும்! அதனால் நமக்கென்ன வந்தது?''

''என்ன மகி புரியாமல் பேசுற? எல்லோருமே சந்தேகப்பட்டால் உன்னை யார் கல்யாணம் பண்ணிப்பாங்க?''

''ஏன்டா மது இப்படிக் கேட்கிற? நம்ம நட்பைப் புரிந்து கொண்ட ஒருவன் நிச்சயம் எனக்குக் கிடைப்பான்டா'' என நம்பிக்கையோடு கூறினாள் மகிஷா.

''ஆனாலும் உனக்கு புருசனா வரப் போகிறவன் ரொம்ப பாவம் மகி!''

சிணுங்கலாகச் சொன்னவனைப் புரியாமல் பார்த்தாள்.

''ஒரு அறைக்கே என் கன்னம் வீங்கி விட்டது. நண்பனுக்கே இந்த அடி என்றால் கணவனுக்குச் சொல்லவா வேண்டும்?'' என கேலியாகக் கூறிச் சிரித்தான்.

''ஸாரிடா...'' என்றாள் வருத்தத்தோடு.

''ம்ப்ச்... பரவாயில்லை விடு மகி. இதற்காக நீ ஸாரி கேட்கத் தேவையில்லை! என்னை அடிக்க உனக்கு முழு உரிமையும் உண்டு!''

அவனைக் கண்டு அழகாகப் புன்னகைத்தவள்,

''இதுதான் உள்ளத்திலிருந்து வரும் வார்த்தை!'' எனக் கூறியபடி அவனை அடிக்கக் கை ஓங்கினாள்.

சட்டென விலகி எழுந்தவன்,

''உன் கைதான் குச்சி போல் இருக்கின்றது என்றால் நீ அடிக்கின்ற அடியும் குச்சியால் அடிப்பது போலவே இருக்கிறது. இனிமேலும் உன்கிட்ட அடி வாங்குற அளவுக்கு என்கிட்ட சக்தி இல்லம்மா'' என்றான் முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு.

''ஓவரா சீன் போடாதடா!'' என்றவள் அவன் கரம் பற்றி எழுந்து நின்றாள்.

3

மகிஷாவின் தோளில் கைபோட்டபடி நடந்தவன்,

''நான்கைந்து நாட்களாக உன்னிடம் பேசாமல் என் நாட்கள் எல்லாம் வெறுமையாகப் போய் விட்டது போல இருக்கு மகி!'' என்றான்.

அவனின் தோளில் தலை சாய்த்தவள்,

''எனக்கும்தான்டா! இனிமேலும் கூட யார் என்ன சொன்னாலும் சரிடா! நீ என் மெய் நண்பன் என்பது மட்டும் நான் சாகும் வரையிலும் மாறாதுடா!'' என்றாள் கண்கள் பனிக்க.

''எனக்கும்தான் மகி! மகி உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? நேற்று காலேஜில் ஒரு ஸ்டூடண்ட் எனக்கு லவ் லெட்டர் கொடுத்தாள்!'' என்றான் பெருமிதமாக.

''அப்படியா? நீ என்ன சொன்ன?'' ஆர்வத்துடன் வினவினாள்.

''என்ன சொல்வேன்?'' ''பாரும்மா. ஒரு ஸ்டூடண்ட் ஆசிரியரைக் காதலிப்பது தவறு என சொன்னேன்.''

அவனை முறைத்துப் பார்த்தவள்,

''இந்த ஜென்மத்தில் நீ யாரையும் லவ் பண்ணப் போறது இல்ல! நாங்க காட்டுகிற பெண்ணையும் பிடிக்குது எனச் சொல்லப் போறது இல்ல. உன்னோடு சேர்ந்து நானும் கல்யாணம் ஆகாமலேயே கிழவி ஆகப் போறேன்!'' என்றாள்.

''இல்ல மகி. நீ நினைக்கிற மாதிரி லவ் என்பது சாதாரணம் இல்ல! ஒரு பொண்ணைப் பார்த்ததும் இவள் நமக்காகப் பிறந்தவள் என்று தோன்ற வேண்டும். இவளுக்காக நாம் எந்த ரிஸ்க் வேண்டுமானாலும் எடுக்கலாம்ன்னு தோன்ற வேண்டும். இவளுக்காக நாம் எதை வேண்டுமானாலும் தியாகம் செய்யலாம்ன்னு தோன்ற வேண்டும்.''

''அப்படி ஒரு பெண் கிடைத்தால் என் நட்பையும் தியாகம் செய்வாயா?''

அடிபட்டது போல் வலியுடன் அவளைப் பார்த்தவன்,

''நட்பா? காதலா? என வந்தால் நான் நிச்சயம் காதலைதான் தியாகம் செய்வேன் மகி!'' என்றான்.

அவனின் சீரியஸ்னெஸ்ஸைக் கண்டவள்,

''நான் விளையாட்டுக்காகக் கேட்டேன் மது. இதற்காக நீ ஏன் இவ்வளவு சீரியஸ் ஆகின்றாய்?'' என்றாள்.

''நீ விளையாட்டாகக் கேட்டாலும் நான் சீரிய ஸாகத்தான் பதில் சொன்னேன்!''

''சரி. இந்த டாபிக்கை விட்டு விடலாம்! வேறு ஏதாவது பேசலாம். உன் காலேஜில் ஒரு புது லெக்சரர் சேர்ந்திருப்பதாகச் சொன்னாயே! அவன் எப்படி? அழகாக இருப்பானா? அட்லீஸ்ட் நான் சைட் அடிக்கிற அளவுக்காவது இருப்பானா?''

''ம்ப்ச்... அவன் இங்கேயே பக்கத்தூர்தான் மகி. அதுவுமில்லாமல் அவன் எனக்கு சின்ன வயசி லிருந்தே ப்ரெண்ட்தான்! ரொம்ப டீப்பால்லாம் இல்ல. எங்கேயாவது பார்த்தால் பேசிக் கொள்வோம் அவ்வளவுதான்.

இப்போது அவன் காலேஜ சேர்ந்த பிறகு கொஞ்சம் அதிகமாகப் பேசிக் கொள்கிறோம்!

நானாவது என்னை எந்தெந்தப் பொண்ணுங்க சைட் அடிக்கிறாங்கன்னாவது தெரிந்து வைத்துள் ளேன். ஆனால் அவன் ஹண்ட்ரட் பர்ஸண்ட் விஸ்வாமித்திரன்!''

''அப்படியா? சரி அந்த விஸ்வாமித்திரனை ஒரு நாளைக்கு வீட்டுக்கு வரச் சொல்... அவனுக்கு

நான் மார்க் போடுகிறேன்!'' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

இவளின் சிரிப்பை எப்படி அழிப்பது என தன் வீட்டில் தீவிரமாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந் தான் ராகவ்.

மகிஷாவின் அழகு அவனைத் தூங்க விட வில்லை. இருபத்து நான்கு மணி நேரமும் அவளின் அழகு முகம் அவனின் மனக் கண் முன் தோன்றி அவனை வெறியேற்றிக் கொண்டிருந்தது.

அவன் அவளை மறைக்க நினைத்தும் முடிய வில்லை. அவளின் முகத்தைத் தன் நினைவிலிருந்து அழிக்க நினைத்தும் முடியவில்லை.

* * *

அன்று காலையில் சீக்கிரமாகவே ரெடியாகி மகிஷா வின் அறைக்கு வந்தான் மதுபாலன்.

கும்பகர்ணனின் கொள்ளுப் பேத்தியைப் போல இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கிக் கொண் டிருந்தாள் மகிஷா. அவளைக் கண்டு 'சோம்பேறி' எனத் திட்டியவன், அருகிலிருந்த வாட்டர் பாட்டிலை திறந்து தண்ணீரை அவளின் காதில் ஊற்றினான்.

பதறியபடி எழுந்தவள் மதுபாலனைக் கண்டு விட்டு ஆக்ரோஷத்துடன் பார்த்து,

''ஏன்டா பன்னாட?'' எனக் கேட்டபடி அவன் கையிலிருந்த வாட்டர் பாட்டிலைப் பிடுங்கித் தண் ணீரை அவன் மேல் ஊற்ற முயற்சித்தாள்.

சற்று சுதாரித்து அவளைத் தடுத்த மதுபாலன்,

''என்மேல் தண்ணீரை ஊற்றி விடாதே! நான் காலேஜ்க்குப் போக வேண்டும் ப்ளீஸ்!'' எனக் கெஞ்சினான்.

சற்றுக் கோபம் தெளிந்தவள்,

''எதற்காக என்னை இப்படி காலங்காத்தால வந்து எழுப்பி விட்ட?'' என்றாள்.

''தினமும் தான் பத்து மணி வரையிலும் தூங்கற இல்ல. இன்னைக்கு ஒரு நாள் சீக்கிரமாக எழுந்ததில் ஒன்றும் குறைந்து விடமாட்டாய். இன்னைக்கு ஈவினிங் எங்க காலேஜில் கல்ச்சுரல் ப்ரோகிராம்... ஈவினிங் நாலு மணிக்கு ரெடியாக இரு! நான் வந்து உன்னைக் கூட்டிச் செல்கிறேன். சரியா?''

அவள் 'சரி' எனத் தலையசைக்கவும் மதுபாலன் கிளம்பிச் சென்று விட்டான்.

* * *

மதுபாலன் சொல்லிச் சென்றது போலவே மகிஷா நான்கு மணிக்கெல்லாம் ரெடியாகிக் காத்திருந்தாள்.

ஐந்து மணி ஆன பின்னரும் மதுபாலன் வராமல் இருக்க, பொறுமையிழந்தவள், அவனின் செல் போனிற்குத் தொடர்பு கொண்டாள்.

பலமுறை ரிங் அடித்தும் கூட மறுமுனையில் அழைப்பு எடுக்கப்படவில்லை.

'ஒரு கிலோ மீட்டரில் தானே காலேஜ் இருக்கு. ஏதாவது ஒரு ஆட்டோ பிடித்துச் சென்று விடலாம்'

என எண்ணியவள் வீட்டில் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

அவள் மெயின் ரோட்டிற்கு வந்து பத்து நிமிடங்கள் கடந்த பிறகும் ஒரு ஆட்டோ கூட அவளுக்குக் கிடைக்கவில்லை. மதுபாலனின் செல் போனுக்கும் தொடர்ந்து அழைத்துக் கொண்டுதான் இருந்தாள்.

மேலும் சில நிமிடங்கள் கடந்து செல்ல.. வீட்டிற்குத் திரும்பி விடலாமா என அவள் நினைக்கையில் அவள் அருகே வந்து நின்றது ஒரு பைக்.

அவள் அருகே வந்து வண்டியை நிறுத்தியவன், தன் ஹெல்மெட்டைக் கழட்டினான். அதன் பிறகே தெரிந்தது அவன் ராகவ் என்று!

மகிஷா அவனைக் கண்டதும் தன் முகத்தை வேறுபுறம் திருப்பினாள். அருகில் வீடுகள் எதுவும் இல்லாததைக் கண்டவளுக்கு நெஞ்சுக்குள் புதிதாக பயம் ஒன்று சூழ்ந்தது.

''மகிஷா அப்படி நான் என்ன தவறு செய்தேன் என்று என்னைப் பிடிக்கவில்லை என சொன்னாய்? எல்லா ஆண்களும் எதிர்பார்ப்பதைப் போலத்தானே நானும் ஒரு கற்புள்ள பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என விரும்பினேன். அது தவறா?''

அவனின் கேள்வி காதிலேயே விழாதது போல இருந்தாள் மகிஷா.

''மகிஷா எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''இல்லை என் அழகைப் பிடிச்சிருக்கு!''

''உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் நீ சொல்வது சரிதான். எனக்கு உன் அழகைப் பிடிச்சிருக்கு. உன் அடி முதல் நுனி வரை பிடிச்சிருக்கு. உன்னை எனக்கு மட்டும் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என ஆசையாக இருக்கு! உன் அழகை நான் மட்டும் ஆட்சி புரிய வேண்டும் என வெறியாக இருக்கு!''

''ச்சீ! இப்படியெல்லாம் ஆபாசமாக பேச வெட்கமா இல்ல?''

''உன்கிட்ட இதைப் பத்திப் பேச நான் ஏன் வெட்கப்படணும்? உன்னை நான்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். உன் மீது எனக்கு சிறு சந்தேகம்தான். அதை நீக்கிக் கொண்டு உன்னை எனக்குச் சொந்தமாக்கிக் கொள்வேன்! அதன் பிறகு உன்னை நான் தினம் தினம் ஆளப் போகிறேன். வேண்டுமானால் அதற்கு ஒரு முன்னோட்டத்தை இப்போதே பார்த்து விடலாமா?'' என்றவன் சட்டென அவளின் கையைப் பற்றி தன்னருகே இழுத்தான்.

அவனின் அந்த திடீர் செய்கையை எதிர்பார்க்காதவள் அவனிடமிருந்து விடுபட முயற்சித்தாள். ஆனாலும் அவனின் இறுகியப் பிடியிலிருந்து அவளால் தன் கையை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

அவளை தன்னருகே இழுத்தவன் அவளின் இதழ் நோக்கிச் செல்கையில் அங்கே மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து நின்றது மதுபாலனின் பைக்.

மதுபாலனைக் கண்டதும் மகிஷாவின் கையை விடுவித்த ராகவ் தன் வண்டியை ஸ்டார்ட் செய்து வேகமாகக் கிளம்பிச் சென்று விட்டான்.

மகிஷாவிற்கு என்ன நடந்தது? என்ன நடக்க இருந்தது? எனப் புரிவதற்கே சில நொடிகள் தேவைப்பட்டன.

வண்டியை விட்டு இறங்கி வந்த மதுபாலன் அதிர்ந்து நின்றிருந்த மகிஷாவின் தோளில் தட்டினான். சிந்தனை கலைந்து அவனைப் பார்த்தவள்,

''மது... அ... அவன்.. எ.. என்னை...'' என சொல்லத் தெரியாமல் திக்கித் திணறினாள்.

அவள் பயந்து போயிருப்பது மதுபாலனுக்குப் புரிந்தது.

''டோன்ட் வொரி மகி! அதுதான் எதுவும் நடக்கலையே! அப்படியே ஏதாவது நடந்திருந்தாலும் ஆபத்து அவனுக்குத்தானே! ஏனென்றால் நீதான் ரத்தக் காட்டேரி ஆயிற்றே! உன்னை பொண்ணுன்னு அவன் தெரியாம நம்பிட்டான் போல.''

அவளின் பயத்தைத் தெளிவிப்பதற்காக வேண்டுமென்றே அவளைச் சீண்டினான். அவனின் நினைப்பு வீண் போகவில்லை. அவளின் முகத்தில் புன்முறுவல் ஒன்று தோன்றியது.

''நான் ரத்தக் காட்டேரி என்றால் நீ குட்டிச்சாத் தான்தானே!''

''ஓ! அப்படியா? இருந்தாலும் குட்டிச் சாத்தானை விட பயங்கரம் ரத்தக் காட்டேரிதான்! அதனால் நீதான் பேயுலகில் பயங்கரம்.''

அவன் கூறியதைக் கேட்டுச் சிரித்தவள் நினைவு வந்தவளாக,

''நான் அத்தனை முறை போன் செய்தும் நீ ஏன்டா எடுக்கவேயில்லை'' என்றாள் கோபத்துடன்.

''ஸாரி மகி! செல்போன் சைலண்டில் இருந்தது. அங்கே புரோகிராமில் வேலையும் அதிகமாக இருந்தது. அதனால் வேலை பிஸியில் உன்னைப் பற்றி நினைக் கவே மறந்து விட்டேன்.

அதன் பிறகு சில நிமிடங்களுக்கு முன்தான் உன்னைப் பற்றி நினைவு வந்தது. செல்போனை எடுத்துப் பார்த்தேன். ஏகப்பட்ட மிஸ்டு கால் உன் னிடமிருந்து வந்திருப்பது தெரிந்தது. போன் செய் வதற்கு பதில் நேரில் வந்தே உன்னைக் கூட்டிச் சென்று விடலாம் என எண்ணிப் புறப்பட்டு வந் தேன். ஆனால் நீயோ இங்கு இப்படி ஒரு பிரச்சனை யில் மாட்டிக் கொண்டு இருந்திருக்கிறாய்! சரி வா! நாம் வீட்டிற்காவது புறப்படலாம்!''

''ஏன்? காலேஜிற்குச் செல்ல வேண்டாமா?''

''வேண்டாம். ஏற்கனவே நீ நிறைய பயந்திருக் கிறாய்! அதனால் வீட்டிற்கே செல்லலாம்!'' என்றவன்

தன் செல்போனை எடுத்து யாருக்கோ டயல் செய்தான்.

''என்னால் புரோக்ராமுக்கு வர முடியாது. ஒரு சின்ன ப்ராப்ளம்! மேனேஜ்மென்டில் நீயே ஏதாவது சொல்லிச் சமாளித்து விடு! தேங்க்ஸ்...'' என்றவன் காலை கட் செய்து போனை பாக்கெட்டில் போட் டான்.

''வீட்டுக்குப் போகலாம் மகி'' என்றவன் வண்டி யில் ஏறி பைக்கை ஸ்டார்ட் செய்தான்.

பில்லியனில் ஏறி அமர்ந்தவள்,

''யாரிடம் போன் பேசினாய் மது?'' என்றாள்.

''ம். அந்த விஸ்வாமித்திரனிடம்தான்!''

''அவன் நிஜ பேரே விஸ்வாமித்திரன்தானா?''

''ச்சே! ச்சே! அது சும்மாக் கூப்பிடுவது! அவன் பெயர் கலையமுதன்!''

''ம். நைஸ் நேம்!''

* * *

சிறிது நாட்களில் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் கோடை விடுமுறை விடப்பட்டது.

சாந்தசீலனும், சோமநாதனும் தம்தம் மனைவி மாருடன் கோடை வாழிடத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினர்.

மகிஷாவிற்கு டூர் செல்வது பிடிக்காது என்பதால் வீட்டிலேயே இருந்து விட்டாள். அவளுக்குத்

துணையாக மதுபாலனும் வீட்டிலேயே தங்கிக் கொண்டான்.

பெற்றோர்கள் புறப்பட்டுச் சென்றபிறகு தனிமையை உணர்ந்தவள் வீட்டைப் பூட்டிக் கொண்டு மதுபாலனைத் தேடிச் சென்றாள்.

ஹாலை ஒட்டியிருந்த ஸ்டடி ரூமில் அமர்ந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தான் மதுபாலன்!

அவன் அருகே சென்று ஒரு நாற்காலியில் அமர்ந்த மகிஷா, ''என்ன பண்ணிட்டு இருக்க மது?'' என்றாள்.

அவளைத் திரும்பிப் பார்த்தவன்,

''போரடிக்குதா மகி? பேசாமல் நீயும் அவர்களோடு டூர் போயிருக்கலாம்!'' என்றான்.

''அட போடா! அவர்களைப் பார்த்தால் டூர் போகிற மாதிரி தெரியல! அங்கேயும் போய் செடி, கொடிகளுக்குப் பாடம் நடத்துகிற மாதிரிதான் தெரியுது!''

''சரி. சாப்பிட்டு விட்டாயா?''

''ம் சாப்பிட்டேன். உனக்கு ஒரு தோசையைக் கூட ரவுண்டா சுடத் தெரியல.''

அவளைச் செல்லமாக முறைத்தவன்,

''எனக்கு நல்லா வேணும்! காலையிலேயே எழுந்து பிரிட்ஜிலிருந்த மாவை எடுத்து தோசை சுட்டு, அதற்கு தொட்டுக்க புதினா சட்னி அரைச்சு, நீ தூங்கி எழுவதற்கு முன்பே உன் வீட்டில் அதைக் கொண்டு வந்து வைத்து விட்டு வந்தேனே! அதற்கு நீ ஒரு தேங்க்ஸ் சொல்லவில்லை என்றாலும் பரவாயில்லை. ஆனால்..'' என்றவனை, இடையில் நிறுத்தியவள்,

''என்னிடம் லெக்சர் எடுக்காதே மது! உன் தோசை நல்லா இருந்தது! போதுமா?'' என்றாள்.

''ம். நீ ஒண்ணும் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டாம். கொஞ்ச நேரம் என்னை டிஸ்டர்ப் பண்ணாமல் இரு! நான் நோட்ஸ் எடுக்கணும்!''

''நோட்ஸ் எடுத்துட்டு இருக்கியா? நான் வேணா ஹெல்ப் பண்ணட்டுமா? அழகா சுருக்கமா எழுதித் தரேன்!''

''நீ சுருக்கமா எழுதுவதைப் பற்றி எனக்குத் தெரியாதா? கோடை வாழிடத்தைக் கோவா என்றும், கோத்தகிரி வைத்தியரை கோவை என்றும் எழுதியவள் ஆச்சே!'' எனக் கூறியவன் அடக்க மாட்டாமல் சிரித்தான்.

''டேய்! சிரிக்காதடா! எனக்குப் போரடிக்குது. வா நாம இரண்டு பேரும் கேரம் விளையாடலாம்!''

''விளையாடவா? அட போ மகி! இன்னும் நாலு புக்ஸ் இருக்கு. எல்லாவற்றையும் ரெஃபர் பண்ணணும்!'' என்றவன், சட்டென எதையோ யோசித்து,

''மகி, உன்கிட்ட ரப்பர் பேண்ட் இருக்கா?'' என்றான்.

''இருக்கு!'' என்றவள், தன் கூந்தலில் இருந்த ரப்பர் பேண்டைக் கழட்டித் தந்தாள்.

''இது இல்ல மகி! சாதாரணமானது!''

''அது என்னிடம் இல்லையே!'

ஒரு நொடி யோசித்தவன் அருகிலிருந்த மேஜை டிராயரைத் திறந்து அதிலிருந்து ஒரு ரப்பர் பேண்டை எடுத்தான்.

''இது எதற்கு?'' எனக் கேட்டவளிடம்,

''மகி... இப்போது நான் செய்வதைக் கவனமாகப் பாரு!'' என்றவன், ரப்பர் பேண்டை இரு கைகளிலும் மாட்டி, ஐந்து, ஐந்து விரல்களிலும் குறுக்கும், நெடுக்குமாக நுழைத்து எடுத்தான்.

அவனின் கைகளுக்கு நடுவே அந்த ரப்பர் பேண்டு ஒரு அழகான உருவத்தை எடுத்திருந்தது.

''வாவ்!'' என்று ஆச்சரியப்பட்டாள் மகிஷா.

தன் விரல்களிலிருந்து ரப்பர் பேண்டை கழட்டி யவன், அவளிடம் நீட்டினான்.

''நான் செய்ததை நீயும் ட்ரை பண்ணு! அப் போதுதான் உன் டிஸ்டர்பன்ஸ் எனக்கு இருக் காது!''

''இதை நான் ஈசியாகவே செய்வேன்!'' என்றவள், அதை அவனிடம் இருந்து வாங்கி, தன் கைகளில் மாட்டி முயற்சி செய்தாள்.

அவளின் துப்பட்டா இடையில் புகுந்து டிஸ்டர்ப் செய்ய அதைக் கழட்டி அங்கிருந்த ஹேங்கரில்

மாட்டினாள். பின்னர் மீண்டும் நாற்காலியில் அமர்ந்து அதையே திரும்பத் திரும்ப முயற்சி செய்தாள்.

அப்போது யாரோ வீட்டின் காலிங்பெல்லை அடித் தனர்.

''மகி.. யாரோ காலிங்பெல்லை அடிக்கிறாங்க. யார்ன்னு பாரு!'' என்றான் மதுபாலன் தன் வேலை யில் கவனம் செலுத்தியபடியே!

''வீடு திறந்துதான் இருக்கு மது!'' என்றவள், தன் கரங்களிலேயே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந் தாள். சட்டென அவளைத் திரும்பிப் பார்த்து முறைத் தவன்,

''வீட்டுக் கதவைத் திறந்து போட்டு விட்டு வந் துள்ளாயே! உனக்குக் கொஞ்சம்கூட அறிவென்பதே கிடையாதா? யார் வந்திருக்காங்கன்னு முதல்ல போய்ப் பாரு... போ'' என விரட்டினான்.

''ஏன் மது எனக்கு இப்படி வேலை வைக்கிற?'' என்று சலித்துக் கொண்டே எழுந்தாள் மகிஷா.

4

தன் விரல்களிலேயே கவனத்தை வைத்தபடி கதவருகே வந்தாள் மகிஷா.

விரல்களை ரப்பர் பேண்டில் நுழைத்தபடியே,

''யார் வேண்டும்?'' எனக் கேட்டாள்.

வாசலில் நின்றிருந்தவன் அவளை வித்தியாச மாகப் பார்த்து விட்டு,

''இது பாலா வீடுதானே?'' என்றான்.

''பாலான்னு இங்கே யாரும் கிடையாது!'' என்றவள் திரும்பிச் செல்ல முயல,

''இல்லை! இந்த அட்ரஸ்தான்... புல்நேம் மது பாலன்'' என்றான் அவன் அவசர அவசரமாக.

சட்டென நின்றவள் இப்போதும் விரல்களிலேயே கவனத்தைச் செலுத்தியபடி, அவனைப் பார்க்காம லேயே,

''இந்த வீடுதான்! பாலான்னு கூப்பிடுறீங்களே! அவன் என்ன உங்க வீட்டு வேலைக்காரனா? ஒரு காலேஜில் ப்ரொபசராக இருப்பவனை மரியாதையா கூப்பிடத் தெரியாதா?'' எனப் பொரிந்து தள்ளினாள்.

''அப்படியென்றால் நீங்கள் மட்டும் அவனை 'அவன், இவன்' எனக் கூப்பிடலாமா?''

நக்கலாக ஒலித்தது அவன் குரல்.

''அவன் என் ப்ரெண்ட்! அவனை நான் எப்படி வேண்டுமானாலும் கூப்பிடுவேன்!'' என்றவள், அப்போதும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை.

அவன் போட்டிருந்த பெர்ப்யூம் மணம் அவளின் நாசியில் புகுந்தது.

''உலகத்திலேயே இயற்கையில் கலந்த ஒரு அற் புதமான நறுமணம். மனிதனின் வியர்வை வாசம் தான்! ஆனால் அது தெரியாமல் எல்லோரும் பெர்ப் யூம் யூஸ் பண்ணி தங்களின் இயற்கை வாசத்தை மறைக்கிறார்கள். ஆனாலும் இந்த வாசமும் நல்லா தான் இருக்கு'' என மெல்லியக் குரலில் கூறியவள், மூச்சை நன்றாக இழுத்து விட்டாள்.

மகிஷா இதை மெல்லிய குரலில் கூறியிருந்தாலும் அது வந்தவனின் காதில் விழுந்து விட்டது. அவனை வியப்பிலும் ஆழ்த்தியது.

''சரி நீங்க ஏன் மதுவைப் பார்க்க வேண்டும்?'' எனக் கேட்டவளிடம்,

''என் முகத்தைப் பார்த்து எதையும் பேச மாட்டீர் களா? இல்லை ஆண்களின் முகத்தையே பார்க்கக் கூடாது என விரதம் பூண்டுள்ளீர்களா?'' எனக் கேட்டான் கேலியாக அவன்.

அவன் விரதம் எனக் கூறியதும் அவளுக்கு அந்த விஸ்வாமித்திரனின் நினைவுதான் வந்தது. அவனின் நினைவில் அவளது முகம் அனிச்சையாகப் புன்முறு வல் பூத்தது.

அவளின் முகத்தில் திடீரெனத் தோன்றிய புன்னகை யின் காரணத்தை அவன் யோசித்துக் கொண்டிருக் கும்போதே,

''அப்படி ஒரு விரதமிருக்க நான் என்ன மது காலேஜில் விஸ்வாமித்திரன் என பெயர் வாங்கிய அந்த கலையமுதனா?'' என்றாள்.

அவள் இப்படிச் சொன்னதும் அதிர்ச்சியடைந்த அவன் அப்போதுதான் அவளின் விரல்களைக் கவனித்தான்.

இன்னும் ஒன்றிரண்டு ஸ்டெப்களில் அவளது விரல்கள் ரப்பர் பேண்டில் சிக்கிக் கொள்ளும் அளவுக்கு அவள் தப்புத் தப்பாக விரல்களை நுழைத்துக் கொண்டிருந்தாள்.

அதைக் கண்டவன் அவளை எச்சரிக்க வாய் திறக்கும் முன், அவளது விரல்கள் ரப்பர் பேண்டில் நன்றாக சிக்கிக் கொண்டது. அது அவளது விரல்களையும் இறுக்கத் தொடங்கியது.

விடுவிக்கும் வழி தெரியாமல் விரல்களின் வலியை உணர்ந்தவள்,

''டேய் மது! என் விரல்கள் ரப்பர் பேண்டில் சிக்கிக் கொண்டது. வலிக்குதுடா! வந்து ஹெல்ப் பண்ணுடா!'' எனக் கத்தினாள்.

வாசலில் நின்றிருந்தவனும் அவளின் வலியை உணர்ந்தான். வேகமாக வீட்டுக்குள் நுழைந்தவன் அவளது விரல்களில் இருந்த ரப்பர் பேண்டின் சிக்கல்களைக் கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்தான். அவள் தன் விரல்களை எப்படி எப்படியோ நுழைத்து வைத்திருந்ததால் சிறிது முயற்சிக்குப் பிறகே அவளது கையிலிருந்த ரப்பர் பேண்டை உருவ முடிந்தது.

''ஹப்பா! இப்போதுதான் நிம்மதியா இருக்கு!'' எனக் கூறியபடி தன் நெஞ்சில் கை வைத்தவள்,

''இன்னும் ஒரு செகண்ட் விட்டிருந்தால் கூட என் விரல்கள் அத்தனையும் கட்டே ஆகியிருக்கும்! ரொம்ப தேங்க்ஸ்ங்க!'' என்றவள், அப்போதுதான் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவளுக்கு மிக மிக அருகில் நின்று கொண்டிருந்தான் அவன். அவனது மலர்ந்த முகம் அவளைப் பேச்சிழக்க வைத்தது.

மெல்லிய புன்னகையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவளும் இமைக்க மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மகி ஏன் கத்தினாய்?''

கேட்டுக் கொண்டே அங்கு வந்தான் மதுபாலன்.

புதிதாக வந்திருந்தவனைக் கண்டதும் முகம் மலர்ந்த மதுபாலன்,

''ஹேய்... கலையமுதா! எப்போதுடா வந்தாய்?'' என வினவினான்.

'என்ன? இவன்தான் கலையமுதா?' என அதிர்ந்தவள், அப்போதுதான் தான் அவனுக்கு மிக அருகாமையில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தாள். சட்டெனப் பின்புறமாக ஓரடி எட்டி வைத்து விலகி நின்றாள்.

அவளின் முக மாற்றத்தையும், அவளின் செய்கைகளையும் பார்த்துக் கொண்டிருந்த கலையமுதன் அவளைப் பார்வையால் உச்சி முதல் அடி வரை அளந்தான்.

அவனின் பார்வையை அவளும் கண்டாள். அவனது பார்வை முகத்திலிருந்து படிப்படியாகக் கீழிறங்க, அப்போதுதான் மகிஷாவிற்கு தான் துப் பட்டா அணியாமல் இருப்பது உரைத்தது.

சட்டென தலை குனிந்தவள், அவசர அவசரமாக ஸ்டடி ரூமிற்குள் சென்று விட்டாள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த கலையமுதன் மதுபாலனின் கேள்வி காதில் விழவும் அவன் புறம் திரும்பினான்.

''என்ன கேட்ட பாலா?''

''என்னப்பா அதிசயமாக என் வீட்டிற்கு வந்திருக் கிறாய்?''

''ஒரு வேலையாக இந்தப் பக்கம் வந்தேன். அப்படியே உன்னையும் பார்த்துவிட்டுப் போக லாம்ன்னு!''

''அதுதானே பார்த்தேன், நீயாவது என்னைப் பார்க்க வருவதாவது!''

''இனிமேல் கண்டிப்பாக உன்னை பார்ப்பதற் காகவே வருகிறேன். போதுமா?''

'உன்னை' என்பதில் அழுத்தம் கொடுத்துச் சொன்னவனை வியப்போடு பார்த்த மதுபாலன்,

''வா.. உட்கார்ந்து பேசலாம்!'' எனக் கூறி அவனை ஸ்டடி ரூமிற்கு அழைத்துச் சென்றான்.

* * *

ஸ்டடி ரூமிற்குள் அவசரமாக நுழைந்த மகிஷா முதற்காரியமாக ஹேங்கரில் மாட்டியிருந்த தன் துப்பட்டாவினை எடுத்து கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டாள்.

அவளுக்கு இதயம் 'படபட'வென அடித்துக் கொண்டது.

'அவனைப் பற்றி அவனிடமே கமெண்ட் அடித்து விட்டோமே!' என நினைத்தவளுக்கு உள்ளங்கை வியர்த்தது. நிற்க முடியாத அளவிற்கு படபடப்பு கூடிக் கொண்டே சென்றது.

அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தவள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

அப்போது அந்த அறைக்குள் பேசியபடியே கலை யமுதனும், மதுபாலனும் நுழைந்தனர்.

கலையமுதனை கண்டதும் மகிஷா சட்டென எழுந்து நின்றாள்.

அவள் எழுந்து நின்றதை வியப்போடு பார்த்த மதுபாலன்,

''மகி எங்க இரண்டு பேருக்கும் காபி போட்டு எடுத்துட்டு வரயா?'' என்றான்.

''ம்'' என தரையைப் பார்த்தபடியே தலையாட் டியவள், வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

''உட்கார் அமுதா!'' என்ற மதுபாலன் தானும் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

அவன் சுட்டிக் காட்டிய நாற்காலியில் அமர்ந்த கலையமுதன், ''யார் இந்த பெண்?'' என்றான்.

அவனின் குரலில் அவனையும் மீறி கேள்விக்கான ஆர்வம் தோன்றியிருந்தது.

''இவள்தான் என் ப்ரெண்ட் மகிஷா! உன்னிடம் கூட நிறைய முறை சொல்லியுள்ளேனே!''

''ம்.. ம்... ஞாபகம் இருக்கு!'' என்றவன், அந்த அறையைத் தன் கண்களால் ஒரு முறை சுழற்றி னான்.

சுவரில் ஓரிடத்தில் குறுக்காகக் கோடு கிழிக்கப் பட்டு இருந்தது. அதில் ஒரு புறம் மகிஷா எனவும் மறுபுறம் மதுபாலன் எனவும் எழுதியிருந்தது.

அதைச் சுட்டிக் காட்டிய கலையமுதன்,

''பாலா என்ன இது?'' என வினவினான்.

''அதுவா? மகிக்கும் இதுதான் ஸ்டடி ரூம்! அப்போது அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வோம். அதனால் இப்படி குறுக்குக் கோடு கிழித்து இருவரும் அறையை ஷேர் செய்து கொண்டோம்!''

''அப்படியென்றால் அவர்கள் வீட்டில் ஸ்டடி ரூம் இல்லையா?''

''இருக்கு! அதை எங்க அப்பாக்கள் இருவரும் யூஸ் பண்ணுவார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து ஒர்க் பண்ணுவதால் அவர்களுக்கு நேரம் மிச்சம். நான்தான் இந்த பிசாசிடம் மாட்டிக் கொண்டு

அடிக்கடி அவதிப் படுவேன்! ஆனால் இப்போது பிரச்சனையில்லை. இந்த ரூம் முழுக்க எனக்கே சொந்தம்! இப்போது நான் சொன்னது மட்டும் அவளின் காதில் விழுந்தால் அவ்வளவுதான்! அறையை இரண்டாகப் பிரித்து குறுக்குச் சுவர் கூடக் கட்டி விடுவாள்!'' என அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே காபியுடன் உள்ளே நுழைந் தாள் மகிஷா.

முதலில் கலையமுதனிடம் சென்று காபியை நீட்டினாள்.

மகிஷாவின் நடுங்கிய கரங்களை ஆச்சரியமாகப் பார்த்தவன், நிமிர்ந்து அவளது முகத்தினையும் பார்த் தான்.

அவளின் பார்வை தரையை நோக்கி இருந்தது. அவளது கன்னங்கள் காரணமின்றிச் சிவந்து இருந்தது. அவளது நெற்றியில் பயத்தின் காரணமாய் வியர்வை பூத்திருந்தது. துடித்துக் கொண்டிருந்த கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு நின் றிருந்தாள்.

அவளின் அந்த சங்கடமான நிலைமை அவனுக்கு மிகுந்த சுவாரசியத்தைத் தந்தது.

காபி கப்பை எடுத்துக் கொண்டவன், அதில் ஒரு விழுங்கு குடித்து விட்டு மதுபாலனிடம்,

''மிஸ்டர் மதுபாலன் உங்க வீட்டுக் காபி சூப்பர்!'' என்றான்.

''என்னடா திடீர் மரியாதை?'' எனக் கேட்டுக் கொண்டே மதுபாலன். மகிஷா தன்னிடம் நீட்டிய காபியை எடுக்க கைகளை நீட்டினான்.

அவளது நடுங்கும் கரங்களை விசித்திரமாகப் பார்த்தவன், அவளின் முகத்தைப் பார்த்தான்.

''உனக்கு மரியாதை கொடுக்க வேண்டுமாம்! இது உன் ப்ரெண்டின் உத்தரவு!'' என கலையமுதன் கூறியதும், ஏற்கனவே நடுங்கிக் கொண்டிருந்த மகிஷாவின் கரங்கள் மேலும் அதிகமாக நடுங்க, கையில் வைத்திருந்த காபி டிரேயைக் கீழே தவற விட்டாள்.

இதை கவனித்துக் கொண்டிருந்த மதுபாலன் சட்டென எழுந்து, ''மகி உனக்கு என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரியா இருக்க? உடம்பு சரியில்லையா?'' என அவசர அவசரமாக வினவினான்.

கலையமுதனும் தன்னைப் பார்த்துக் கொண் டிருப்பதை உணர்ந்த மகிஷாவிற்கு வார்த்தைகள் வெளியே வர மறுத்தன.

அவள் பதில் கூறாமல் இருப்பதைக் கண்டு பயந்து போன மதுபாலன், அவளின் நெற்றியிலும், கழுத்திலும் கை வைத்துப் பரிசோதித்தான்.

''காய்ச்சல் ஏதும் அடிக்கறதா மகி? இல்லையே காய்ச்சல் கூட இல்லையே! பிறகு ஏன் மகி ஒரு மாதிரியா இருக்க?'' என பரபரப்புடன் கேட்டான்.

''ஒ... ஒ... ஒண்ணும்... இ... இல்லை... மது... லே... லேசாக.. த.. தலைவலி!'' என திக்கித் திணறி னாள்.

அவளின் திணறலைக் கண்டு மேலும் பயந்து போன மதுபாலன்,

''சரி, நீ மாத்திரை போட்டுக் கொண்டு என் ரூமில் சென்று படுத்துறங்கு!'' எனக் கூறி அவளை அனுப்பி வைத்தான்.

அவள் சென்றபின் கீழே கொட்டியிருந்த காபியைச் சுத்தம் செய்தான். அதன் பிறகும் அவனுக்கு மகி ஷாவை நினைத்துக் கவலையாகவே இருந்தது.

''இதோ வந்து விடுகிறேன்!''

கலையமுதனிடம் கூறிக் கொண்டு மகிஷாவை தேடி தன் அறைக்குச் சென்றான். அவள் நிம்மதியாக உறங்குவதைக் கண்டு அமைதியடைந்தவன், ஸ்டடி ரூமிற்குத் திரும்பி வந்தான்.

கலையமுதனைக் கண்டு புன்னகைத்தபடியே நாற்காலியில் அமர்ந்தான்.

''இன்னைக்கு என்னவோ மகி ரொம்ப வித்தி யாசமாக நடந்து கொண்டாள். வாயைத் திறந்தால் நிறுத்தவே மாட்டாள். ஆனால் இன்னைக்கு இப்படி திக்கித் திணறவும் கொஞ்சம் பயந்து விட்டேன்'' என நண்பனிடம் தன்னிலை விளக்கம் தந்தான்.

''பிரெண்ட் மேல் ரொம்ப பாசமோ?''

''என் உயிர்த் தோழி அவள்! அவள் மேல் நான் வைத்திருப்பதைப் பாசம் என்ற ஒற்றைச் சொல் கொண்டு வர்ணிக்க முடியாது! அவள் மேல் நான் வைத்திருப்பது எல்லையில்லா அன்பு!''

''போதுமப்பா! அதிகம் சொல்லாதே! பிறகு நானே உங்களின் ப்ரெண்ட்ஷிப்மீது கண் வைத்து விடு வேன்!''

''நீ கண் வைத்தாலும் கூட எங்க ப்ரெண்ட்ஷிப் ஒன்றும் ஆகாது. ஏனென்றால் எங்கள் ப்ரெண்ட் ஷிப்பின் பேஸ்மெண்ட் ரொம்ப ரொம்ப ஸ்ட்ராங்க்... புயலே அடித்தாலும் அசையாது!''

''இப்போதைக்கு இப்படிதான் இருப்பீர்கள்! நாளைக்கு இருவருக்கும் திருமணமாகி விட்டால் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளக்கூட நேரம் கிடைக்காது!''

''எங்களின் நட்பு அப்படியெல்லாம் நடுவில் பிரியக் கூடியது அல்ல! இவ்வளவு ஏன்? எங்களுக்கு நட்பா? காதலா? என்று வந்தால்கூட நாங்கள் நிச்சயம் நட்பிற்கே துணை நிற்போம்!'' என்றவன், அதன் பிறகும் கலையமுதனிடம் தங்களின் ப்ரெண்ட் ஷிப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டே, தன் வேலையைத் தொடர்ந்தான்.

நோட்ஸ் எடுத்துக் கொண்டிருந்த மதுபால னுக்குக் கலையமுதனும் உதவி செய்து கொண்டிருந் தான்.

ஒரு லெஸனை முடித்தவன் மறு லெஸனின் நோட்ஸைக் குறிக்க முயலுகையில், ஏதோ நினைவு வந்தவனாக,

''அமுதா.. இதற்கான நோட்ஸை ஏற்கனவே ஒரு நோட்டில் குறிப்பெடுத்து வைத்துள்ளேன். என் ரூமில் உள்ள புக் ஷெல்பில் இரண்டாம் ரோவில் மரங்கொத்தி புகைப்பட அட்டையுடன் அந்த நோட் இருக்கும். என் ரூம் லெப்ட் சைடில் செகண்ட் ரூம்! நீ போய் எடுத்துக் கொண்டு வருகிறாயா?'' என்று தன் வேலையில் கவனம் செலுத்தியபடியே கேட் டான்.

''சரி'' என்ற கலையமுதன் மதுபாலன் குறிப் பிட்டுச் சொன்ன அறைக்குச் சென்றான்.

அங்கு கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த மகி ஷாவை வியப்புடன் பார்த்தான்.

பின்னர் புக் ஷெல்பில் மதுபாலன் அடையாளம் சொன்ன நோட்டைத் தேடினான். அவன் தேடும் பொழுது அவன் கைப்பட்டு டைரி ஒன்று சத்தத் துடன் கீழே விழுந்தது.

டைரி விழுந்த சத்தத்தில் மகிஷா விழித்து விட் டாளா? என அவசரமாக அவளைத் திரும்பிப் பார்த் தான். அவளோ சிறிதும் அசையாமல் உறங்கிக் கொண்டிருந்தாள்.

''கும்ப கர்ணனின் ஒரிஜினல் வாரிசு!'' என மெல்ல முணுமுணுத்தவன், கீழே விழுந்து கிடந்த டைரியை எடுத்தான்.

அவனின் கை அனிச்சையாக அதை விரித்தது. முதல் பக்கத்திலேயே மதுபாலனும், மகிஷாவும் இணைந்து நிற்கும் போட்டோ ஒன்று இருந்தது. பிறகு அதை மூடி பழைய இடத்தில் வைத்தவன் மதுபாலன் கூறிய நோட்டை எடுத்துக் கொண்டு திரும்பச் செல்ல முயன்றான்.

ஆனால் அவனது கால்கள் அவனது அனுமதி யின்றியே அவனை கட்டிலுக்கருகில் கொண்டு சென்று நிறுத்தியது. உறங்கிக் கொண்டிருந்த மகிஷாவையே விழி மூடாமல் பார்த்தபடி நின்றான்.

யாரோ தன்னை உற்று நோக்குவதை உறக்கத்தி லேயே உணர்ந்த மகிஷா சட்டெனக் கண் விழித் தாள்.

கலையமுதன் தன்னையே உற்று நோக்குவதைக் கண்டவள்,

அவசரமாக எழுந்து கட்டிலை விட்டிறங்கி நின் றாள்.

இதை அனைத்தையும் அவள் இரண்டே வினாடி களில் செய்ததால் கலையமுதனால் சட்டெனச் சுதா ரிக்க முடியவில்லை. இதன் பிறகே மெல்ல சுதாரித் தான். இருந்தும் அவளைப் பார்ப்பதை மட்டும் விடவே யில்லை.

படபடக்கும் இதயத்துடன் தலை குனிந்து நின்றவள்,

''எ... எ... என்... என்ன... வே... வேண்.. வேண்டும்?'' எனத் திணறலுடன் கேட்டாள்.

அவளின் திணறலைக் கண்டு வியந்தவன்,

''எதற்காக இப்படிப் பயப்படுகிறாய்? நான் என்ன சிங்கமா? இல்லை புலியா?'' என்றான்.

''இ... இல்லை!'' எனத் தலை குனிந்தபடியே அவசரமாகத் தலையாட்டினாள்.

''என் முகத்தைப் பார்த்துப் பேச மாட்டாயா?'' எனக் கேட்டவனின் குரலில் மெல்லிய ஏக்கம் ஒன்று கலந்திருந்தது.

5

அவள் பதில் பேசாமல் நிற்பதைக் கண்டவன்,

''நான் யார்ன்னு தெரியாமலேயே என்னிடம் அப்படிப் பேசினாய்? ம்... என்னைப் பற்றி ஏதோ ஒரு கமெண்ட் கூட அடித்தாய் என நினைக்கிறேன்! ஆனால் இப்போது என்னவென்றால் என் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டேன் என்கிறாய்!'' என்றான்.

''ஸ... ஸா... ஸாரி... நான் நீங்கன்னு தெரியாமல்... அப்படி... பேசி விட்டேன்!'' என்றவள் அழுது விடும் நிலமையில் இருந்தாள்.

''சரி... சரி! அதற்கு ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நீ சொன்னதை நான் தவறாக எடுத்துக் கொள்ள வில்லை. ஸோ பீ ரிலாக்ஸ்...''

''ம்.''

''இப்போதாவது என் முகத்தைப் பார்ப்பாயா?'' குரலில் துள்ளலுடன் கேட்டான்.

'மாட்டேன்' என தலையாட்டியவளிடம்,

''ஏன்?'' என்றான் வியப்புடன்.

''தெ... தெரியல!'' என்று சொன்னவளை அவன் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும் போதே,

''அமுதா நோட் கிடைக்கவில்லையா?'' எனக் கேட்டுக் கொண்டே அங்கு வந்தான் மதுபாலன்.

மகிஷா விழித்து விட்டதை அறிந்தவன், அவள் அருகே வந்தான்.

''மகி.. இப்போது தலைவலி பரவாயில்லையா?''

''ம்!''

அவள் இன்னும் சகஜ நிலையை அடையாததை உணர்ந்தவன்,

''ஏன் மகி ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' எனக் கவலையுடன் வினவினான்.

மதுபாலனின் கவலையை அறிந்த கலையமுதன்,

''நீ அவங்ககிட்ட என்னைப் பற்றி என்ன சொன் னாய்? அவங்க என்னைப் பார்த்துதான் இப்படி இருக்காங்க!'' என்றான்.

திகைப்பில் ஆழ்ந்த மதுபாலன்,

''உன்னைப் பார்த்து இவள் பயப்படுகிறாளா? நம்பவே முடியலயே! இவள் ரோட்டில் நடக்கும் போது பத்து பசங்க இவளை க்ராஸ் பண்ணாகூட அசால்டா அந்த பத்து பேரையும் சைட் அடிப்பாள்! அப்படிப்பட்டவள் உன்னைப் பார்த்துப் பயப்படு கிறாளா?'' எனக் கேட்டுச் சிரித்தான்.

அவனின் கையைப் பற்றி இறுக்கிய மகிஷா.

''ப்ளீஸ் மது!'' என்றாள். மெல்லிய குரலில்.

கலையமுதனுக்கோ அவளை மேலும் சீண்ட வேண்டும் என்று தோன்றியது. ''நீ சொல்வதை நம்ப மாட்டேன் பாலா. நான் வந்ததிலிருந்து அவங்க என் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை! என் முகத்தைப் பார்க்கச் சொல்லு! அப்போது நான் நீ சொல்வதை நம்புகிறேன்!'' என்றான்.

''என்ன? உன் முகத்தைப் பார்க்க என் மகி பயப் படுகிறாளா? இதை நான் நம்பவே மாட்டேன். என் மகி ஒன்றும் ஷை டைப் கிடையாது. ரொம்ப கலகலப் பான பொண்ணு! அதை விடவும் இவளுக்கு தைரியம் மிகவும் அதிகம்!'' என்றவன் மகிஷாவிடம்,

''மகி... நீ பயப்படுகிறாயா? நீதானே இவனைப் பார்த்து மார்க் போட வேண்டும் என்று சொன்னாய்... இப்போது ஏன்...'' என்றவன், மேலும் கூறும் முன் அவனது கையை மேலும் இறுக்கிய மகிஷா.

''ப்ளீஸ் மது...'' என்றாள்.

மேலும் அவளின் சூடான கண்ணீர் துளி மது பாலனின் கையில் பட்டுத் தெறித்தது. அதிர்ச்சி யடைந்த மதுபாலன், அவளது முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான்.

கலங்கியிருந்த அவளது கண்களைக் கண்டவன் திடுக்கிட்டு,

''என்ன ஆச்சு மகி? ஏன் அழற?'' என்றான்.

அவள் அழுகிறாள் எனத் தெரிந்ததும் கலை யமுதனின் மனம் ஏமாற்றமடைந்தது.

'அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லை போல!' என கவலையுடன் எண்ணியவன் அங்கிருந்து செல்ல முயன்றான்.

அப்போது மகிஷா மதுபாலனிடம்,

''அவரிடம் என்னைப் பற்றி எதுவும் தவறாகச் சொல்லாதே!'' என்றாள் மெல்லிய குரலில்.

இதைக் கேட்டதும் கலையமுதனின் மனம் குப் பென மலர்ந்தது. இனம் புரியாத மகிழ்ச்சி அவனுக் குள் உண்டானது.

சட்டென மதுபாலனின் புறம் திரும்பிய கலை யமுதன்.

''அவங்களுக்கு இன்னும் தலைவலி முழுதாகக் குணமாகவில்லை போல! அவங்க ரெஸ்ட் எடுக் கட்டும்! வா... நாம் சென்று நம் வேலையை கவ னிக்கலாம்!'' என்றான்.

''ஓ! தலைவலிக்காகத்தான் இந்த அழுகையா? சுத்த அசடு மகி நீ...! சரி நீ ரெஸ்ட் எடு. நாங்க ஸ்டடி ரூமுக்குப் போறோம்!'' என்றான்.

அவள் 'சரி' என தலையாட்டவும், அவளை அங்கேயே விட்டு விட்டு இருவரும் ஸ்டடி ரூமிற்கு வந்தனர்.

கலையமுதன் அதன் பிறகே நினைவு வந்தவ னாக,

''பாலா.. உங்க அப்பா, அம்மா எங்கே?'' என்றான்.

''என் பேரண்ட்ஸும், மகி பேரண்ட்ஸும் டூர் போயிருக்காங்க! திரும்பி வர பத்து, பதினைந்து நாட்கள் ஆகலாம்!''

''டூர்க்கு நீயும், உன் ப்ரெண்டும் போகவில் லையா?''

''மகிக்கு ரொம்ப தூரம் ட்ராவல் பண்ணா அலர்ஜி! அதனால் அவள் வருஷா வருஷம் டூர்க்கு போக மாட்டாள். அவளை இங்கே தனியே விட்டுச் செல்ல முடியாது என்பதால் வருஷா வருஷம் நானும் அவ ளுடன் இங்கேயே தங்கி விடுவேன்!''

''அப்படியென்றால் இன்னும் பத்து, பதினைந்து நாட்களுக்கு நீங்கள் மட்டும் தனியாகவா வீட்டில் இருப்பீர்கள்?''

''ஆமாம் வருஷா, வருஷம் ஸம்மர் லீவில் நாங்கள் இருவர் மட்டும்தான் தனியாக கவனித்துக் கொள்ள வேண்டும்!''

சிறு சலிப்புடன் கூறினான் மதுபாலன்.

அவனின் சலிப்பைக் கண்டு புன்னகைத்தவன், மதுபாலனிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு வீட்டிற்குப் புறப்பட்டான்.

கலையமுதன் சென்றபின் சிறிது நேரத்தில் தன் வேலையை முடக்கி வைத்தவன் மகிஷாவைத் தேடிச் சென்றான்.

''மகி ஈவினிங் ஆகிவிட்டது. டின்னருக்குச் சமைக்க வேண்டும்! வந்து ஹெல்ப் பண்ணு!'' என்றான்.

''உ.. உன் ப்ரெண்ட் போய் விட்டாரா?''

''ம். அவன் கிளம்பி ரொம்ப நேரமாச்சு!''

இதைக் கேட்ட பிறகே அவளின் இதயம் சீராகத் துடிக்கத் தொடங்கியது.

பிறகு இருவருமாகச் சேர்ந்து சமைத்து முடித்தனர். சாப்பிட்டு முடித்த பின்னர் மதுபாலனின் அறைக்கு வந்தாள் மகிஷா.

''டேய் கட்டிலை பிடிடா! இரண்டாகப் பிரிக் கலாம்!'' என்றாள்.

அவனும் மறு பேச்சில்லாமல் அந்த இரட்டைக் கட்டிலை இரண்டாகப் பிரித்துப் போட்டான்.

ஒரு கட்டிலில் ஏறி படுத்துக் கொண்டவள்,

''மது.., கதை சொல்லுடா!'' என்றாள்.

''கதையா? ம் சொல்கிறேன்! பத்து வருடத்திற்கு முன் இதே போல ஸம்மர் லீவில் என்னருகில் ஒரு பெண் உறங்கினாள். அவள் பெட்டை நனைத்து விட்டாள். அந்தப் பழியையும் தூக்கி என் மீது போட்டு விட்டாள்?'' எனக் கூறிச் சிரித்தவனின் மேல் தலையணையை விட்டெறிந்தாள் மகிஷா.

''அப்போது நான் சின்னப் பெண்! அதுவுமில் லாமல் அப்படி நான் பழியை உன் மீது போட்டு விட்டேன் என்றுதானே கட்டிலை இரண்டாகப் பிரித்துப் போட்டு உறங்கச் சொன்னாய். இப்போது எதற்கு பழைய பல்லவியையே பாடுகிறாய்? ஒரு நல்ல கதை ஒன்றைச் சொல்லு!''

''கதை சொல்ல நீ என்ன சின்னக் குழந்தையா? இப்படி நீ கதை கேட்டால் நீ தூங்கிய பிறகு உன்னைத் தூக்கிக் கொண்டு போய் தோட்டத்தில் போட்டு விடுவேன். பிறகு ரத்தக் காட்டேரி வந்து உன்னைத் தூக்கிச் சென்று விடும்!'' என்று அவன் கூறவும் கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்து விட்டாள் மகிஷா.

''நான் என்ன இன்னும் சின்னக் குழந்தையா? உன் பயமுறுத்தலைக் கேட்டு அமைதியாகப் படுத்துறங்க! எனக்கு இப்போது நீ கதை ஒன்றைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் இரண்டு கட்டிலை ஒன்றாகப் போட்டு விடுவேன்!''

''ஐயோ! வேண்டாம் மகி! கழுதை உதைத்தால் கூட மெதுவாகத்தான் உதைக்கும். ஆனால் நீயோ

அந்தக் கழுதையை விட மோசம்!'' எனக் கூறிப் பொய்யாகப் பயந்தவன், அவளுக்கு கதை ஒன்றைக் கூறி உறங்க வைத்தான்.

பிறகு அவனும் சிறிது நேரத்தில் உறங்கிப் போனான்.

* * *

காலை மணி ஒன்பதான பிறகும் மதுபாலனும், மகிஷாவும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

காலிங்பெல் அடிக்கும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான் மதுபாலன். அவசரமாக எழுந்து சென்று வீட்டின் கதவைத் திறந்தான்.

அங்கே சில புத்தகங்களுடன் நின்று கொண்டிருந்த கலையமுதனை வியப்போடு பார்த்த மதுபாலன்,

''உள்ளே வா அமுதா! என்ன விடிந்தும் விடியாததுமாக வந்துள்ளாய்?'' என்றான்.

''விடிந்தும் விடியாமலுமா? மணி ஒன்பதரை ஆயாச்சு பாலா!''

உள்ளே வந்து அமர்ந்தபடியே கூறினான் கலையமுதன்.

''ஒன்பதரையா? இந்த சோம்பேறியோட ஒரே ரூம்ல தூங்கியதால் எனக்கும் அவளோட சோம்பேறித் தனம் வந்துவிட்டது போல!''

''என்ன? கழுதை வயசாகிறது. இன்னமும் இருவரும் ஒரே அறையில் தூங்குகிறீர்களா?'' வியப்போடு கேட்டான் கலையமுதன்.

''ஆமாம் அமுதா! ஸம்மர் லீவில் மட்டும் இவளோடு இந்த டார்ச்சர்! சரி.. நீ கொஞ்ச நேரம் வெயிட் பண்ணு! நான் ப்ரெஷ் அப் ஆகி வருகிறேன்!'' என்றவன் பாத்ரூம் நோக்கி நடந்தான்.

சிறிது நேரத்தில் குளித்து விட்டு வேற்றுடையுடன் வந்தவன்,

''என்ன சாப்பிடுகிறாய் அமுதா? டீயா? காபியா?'' என்றான்.

''இப்போதுதான் சாப்பிட்டு விட்டு வந்தேன் பாலா! நானும் சில புக்ஸ்ல நோட்ஸ் எடுக்கணும்! சரி... உன்னுடனேயே சேர்ந்து செய்யலாம்ன்னு வந்தேன்!''

''ம். சரி...'' என்றவன் அவனை ஸ்டடி ரூமிற்கு அழைத்துச் சென்றான்.

''இப்போதுதானே எழுந்ததாகச் சொன்னாய் பாலா? நீ சாப்பிட வேண்டாமா?''

''ம். சாப்பிடணும்! மகி எழுந்த பிறகு அவளோடு சேர்ந்து சாப்பிட வேண்டும்!''

''ஓ... அவங்க எப்போது எழுந்துக்குவாங்க?''

''எப்படியும் மணி பத்தாவது முடிய வேண்டும்! அப்போதுதான் மகாராணி கண் விழிப்பாள். நேற்று

இரவு செய்த உணவே மீதம் உள்ளது. அவள் எழுந்த பிறகு சாப்பிட வேண்டும்!'' என்று மதுபாலன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே,

''மது..!'' என்ற மகிஷாவின் அலறல் இருவருக்கும் கேட்டது. இருவரும் பதட்டத்துடன் எழுந்து அவளைத் தேடி ஓடினர்.

அங்கே தரையில் மண்டியிட்டபடி அமர்ந்திருந்த மகிஷா, ஒரு கையால் வயிற்றை இறுக்கிக் கொண்டு இருந்தாள்.

வேகமாக அவள் அருகே சென்ற மதுபாலன்,

''என்ன ஆச்சு மகி?'' என்றான் பதற்றத்துடன்.

''வயிறு பயங்கரமா வலிக்கிறதுடா மது!'' என் றாள். வேதனையுடன். இவள் இப்படிக் கூறவும் சட் டெனக் காலண்டரைப் பார்த்த மதுபாலன்,

''எப்போது மகி?'' என்றான்.

'இவன் என்ன லூஸா? அவள் வயிற்று வலி எனக் கதறுகிறாள். இவன் என்னவென்றால் எப்போது எனக் கேள்வி கேட்கிறான்?' எனக் குழம்பினான் கலை யமுதன்.

''இப்போதுதான் மகி!'' என்றவளின் கைகள் சில்லிட்டுப் போயிருப்பதைக் கண்ட மதுபாலன்,

''சரி. நீ சென்று குளி! நான் ட்ரெஸ்ஸும், டேப் லட்டும் எடுத்துட்டு வரேன்! வீட்டுச் சாவி எங்கே?'' எனக் கேட்டான்.

''ட்ரெஸ்ஸிங் டேபிள் மேல் இருக்கு மது!''

''சரி.. எழுந்திரு'' என்றவன் அவளைக் கைப்பிடித்துத் தூக்கி விட்டு, பாத்ரூமிற்குள் கொண்டு சென்று விட்டான்.

ட்ரெஸ்ஸிங் டேபிள் மீது இருந்த மகிஷா வீட்டின் சாவியை எடுத்தவன் வேகமாக வெளியேறி னான்.

கலையமுதன் ஒன்றும் புரியாமல் மதுபாலனையே பின் தொடர்ந்தான்.

மகிஷா வீட்டின் கதவைத் திறந்த மதுபாலன், அவசரமாக அவளது அறைக்குச் சென்று அலமாரியைத் திறந்தான்.

சுடிதார் ஒரு செட்டும், அதற்குத் தேவையான இன்னர்வேர்ஸையும் எடுத்துக் கொண்டவன் கூடவே டேப்லட்ஸையும், நாப்கின்ஸையும் எடுத்துக் கொண் டான்.

அதைக் கண்ட பிறகே கலையமுதனுக்கு விசயம் புரிந்தது.

அனைத்தையும் எடுத்துக் கொண்டு திரும்பிய மது பாலன் அப்போதுதான் கலையமுதனைப் பார்த்தான்.

சட்டென தன் கையிலிருந்த பொருட்களை மறைத்தவன்,

''நீ இந்த வீட்டைப் பூட்டிவிட்டு வா அமுதா!'' எனக் கூறிவிட்டு வேகமாக அங்கிருந்து வெளியேறி னான்.

பிறகு தன் அறையிலுள்ள குளியலறைக் கதவைத் தட்டியவன்,

''மகி ட்ரெஸ் கொண்டு வந்திருக்கேன்! வாங்கிக் கொள்!'' என்றான்.

கதவை லேசாகத் திறந்து அவன் தந்ததை வாங்கிக் கொண்டவள் கதவைச் சாத்திக் கொண்டாள்.

மகிஷா வீட்டின் கதவைப் பூட்டிவிட்டு வந்த கலையமுதன், கிச்சனிலிருந்து தண்ணீர் டம்ளருடன் வரும் மதுபாலனைக் கண்டான்.

அவன் அருகே சென்று சாவியைத் தந்தவன்,

''பாலா... கேட்கிறேன் எனத் தவறாக நினைத்துக் கொள்ளாதே! நான் மனதில் படுவதைக் கேட்டு விடுவேன்... நீ... நீ... எப்படி இதையெல்லாம் கொஞ்சம் கூட முகச் சுளிப்போ, அவமானம் என்று நினைக்காமலும் செய்கிறாய்?'' எனக் கேட்டான் தயங்கியபடியே.

அவனைக் கண்டு புன்னகைத்த மதுபாலன்,

''முகச் சுளிப்பு எதற்கு? அவள் என்னுடைய தோழி! அவளுக்கு இதையெல்லாம் நான் செய்யாமல் வேறு யார் செய்வார்கள்?

அவமானம் எனக் கேட்டாயே.. அவமானம் எதற்கு? மகிக்கு ஒரு பெண் தோழி இருந்து அவள் இதைச் செய்திருந்தால் அவமானமாக உணர்ந்திருப்பாளா? நான் ஒரு ஆண் நண்பன் என்பதற்காக இதை அவமானமாக உணர்ந்தால் பிறகு நட்பு என்ற சொல்லுக்கு என்ன மரியாதை உள்ளது? உண்மை

நட்பிற்குள் ஆண், பெண் என இன வேறுபாடு கிடையாது.

உன்னைக் கண்டவுடன் நான் என் கையி லிருந்ததை மறைத்த காரணம் நீ என்னைக் கேவல மாக நினைக்கக் கூடாது என எண்ணியதால் அல்ல! என் தோழியின் நிலை உனக்குத் தெரியக்கூடாது என்பதற்காகத்தான்!'' என்றவனின் காதுகளில் குளிய லறையின் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்க தண்ணீரோடு மகிஷாவிடம் விரைந்தான்.

மகிஷாவின் இப்படிப்பட்ட ஒரு நிலமையில் அவளுக்கு முன்னால் சென்று அவளை சங்கடத்தில் ஆழ்த்த வேண்டாம் என்றுதான் நினைத்தான் கலை யமுதன். இருப்பினும் மனம் கேட்காததால் மது பாலனைத் தொடர்ந்து சென்றான்.

வயிற்றை இறுக்கிப் பிடித்தபடியே வெளியே வந்த மகிஷாவை கைத்தாங்கலாக அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்தான் மதுபாலன்.

தன் கையிலிருந்த சிறு கவரிலிருந்து மாத்திரையை எடுத்தான். அதில் ஒன்றைப் பிரித்து அவளிடம் தந்தான்.

அதை வாங்கி விழுங்கியவள்,

''தேங்கஸ் மது!'' என்றாள்.

''ம். வலி அப்படியே இருந்தால் சொல், ஹாஸ் பிட்டல் போய்விட்டு வரலாம். ஊசிக்கு பயந்து

கொண்டு வலியை பொறுத்துக் கொள்ளாதே! சரியா?'' என்றவன்,

''உனக்கு ஏதாவது சூடாக சமைத்துக் கொண்டு வருகிறேன்!'' என்றபடி கிச்சனுக்குக் கிளம்பினான்.

''நானும் வந்து ஹெல்ப் பண்றேன்!'' என்றபடி எழ முயற்சித்தாள் மகிஷா.

''வேண்டாம்... வேண்டாம்... நீ ரெஸ்ட் எடு. பாலாவுக்கு நான் ஹெல்ப் பண்றேன்!'' என கலையமுதன் கூறிய பிறகே அவன் அங்கிருப்பதைப் பார்த்தாள் மகிஷா.

அவளுக்கு சங்கடத்தால் முகம் சிவந்தது.

அதைக் கண்ட கலையமுதன் எதுவும் பேசாமல் மதுபாலனுக்கு உதவி செய்யச் சென்றான்.

கலையமுதனின் உதவியுடன் சமைத்து முடித்த மதுபாலன், சமைத்த உணவை இளஞ்சூட்டுடன் ஒரு தட்டில் பரிமாறினான். அதை எடுத்துக் கொண்டு மகிஷாவிடம் வந்தவன் அவளை எழுப்பி அமர வைத்தான்.

தட்டை வாங்க நீட்டிய மகிஷாவின் கரங்கள் நடுங்குவதைக் கண்ட மதுபாலன்,

''நானே ஊட்டி விடுகிறேன்!'' எனக் கூறி அவளுக்கு ஊட்டி விட்டான்.

அவள் சாப்பிட்டு முடித்தவுடன் அவள் வாயைத் துடைத்து விட்டு தண்ணீர் குடிப்பாட்டினான்.

''சரி. நீ ரெஸ்ட் எடு! நான் கிச்சனைக் க்ளீன் பண்ணி விட்டு வருகிறேன்!'' என்றவன், அவள் சாப்பிட்டு முடித்த தட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

வாசல் படியிலேயே நின்றபடி அவனது செய்கைகளை பார்த்துக் கொண்டிருந்த கலையமுதன் மதுபாலனைத் தொடர்ந்து சென்றான்.

6

கிச்சன் சிங்கில் இருந்த பாத்திரங்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான் மதுபாலன். அவன் அருகே சென்ற கலையமுதன்.

''பாலா.. நான் உன்னிடம் ஒரு விசயம் கேட்கட்டுமா?'' என்றான்.

தன் வேலையைக் கவனித்தபடியே மதுபாலன்.

''கேள் அமுதா!'' என்றான்.

''கிராமங்களில் பெண்களுக்கு இது போன்ற நாட்களில் அவர்களை மற்ற பெண்களே கூட தொடுவதற்கு தயங்குவார்கள். ஆனால் நீ ஒரு ஆணாக இருந்து கொண்டு மகிஷாவைத் தயக்கமின்றித் தொடுகிறாயே!'' தான் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு நண்பனின்

புறம் திரும்பினான் மதுபாலன். அவன் முகத்தில் சற்று கோபம் தெரிந்தது.

''இதில் தயங்குவதற்கு என்ன உள்ளது அமுதா? நம் நாட்டில் கடவுள்களையும், ஆறுகளையும் இந்த பூமியையும் பெண்ணாக நினைத்து வணங்கு கிறோம். அதே நம் நாட்டில்தான் பெண்களுக்கு இயற்கையாக நிகழ்கின்ற இந்த மாற்றத்தின் பொழுது அவளை வீட்டின் ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கின்றோம். அவளை மற்ற பெண்கள் கூடத் தீண்டுவது கிடையாது. கேட்டால் தீட்டு ஆகி விடுமாம்.

அவளும் நம்மைப் போலவே பத்து மாதம் தாயின் வயிற்றில் உருவாகி நம்மைப் போலவே தாயின் வலியிலும், வேதனையிலும் பிறப்பவள்தானே!

ஒரு பெண்ணிற்கு இந்த மாதிரி நாட்களில்தான் வீட்டில் உள்ளோரின் அன்பும் அரவணைப்பும் அதிகம் தேவை. நாம் அவர்களின் வலியில் பங்கு கொள்ளா விட்டாலும் பரவாயில்லை. அவர்களை ஒதுக்கி வைக்காமலாவது இருக்க வேண்டும்!

நான் ஒரு ஆண், அவளைத் தயக்கமின்றித் தொடு வதைப் பற்றிக் கேட்கிறாய். அவளை நான் தொட்ட தால் இப்போது என்ன குறைந்து போய் விட்டேன்? அவளைத் தினமும்தான் தொட்டுப் பேசுகிறேன்! இன்றைக்கு மட்டும் அவளது உடம்பில் சிறு மாற்றம் நிகழ்ந்து விட்டது என்பதற்காக அவளை விலக்கி வைத்தால் பிறகு நான் என்ன மனிதன்?

பாமர மக்களும், சில முட்டாள்களும்தான் இப்படி அறிவில்லாமல் நடந்து கொள்வார்கள். ஆனால் நான் படித்தவன் முட்டாளில்லை! பெண்களைப் பற்றி அதிகம் தெரியாவிட்டாலும், என் அம்மாவைப் பற்றியும், மகிஷாவைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளவன். அதனால் மகிஷாவைத் தொடுவதில் எனக்கு எந்தவிதத் தயக்கமும் கிடையாது!''

''ஓகே.. ஓகே கூல்! இதற்கு ஏன் இவ்வளவு கோபப்படுகிறாய்? நான் ஒரு பேச்சிற்காகத்தான் கேட்டேன். அதுவுமில்லாமல் நானும் கூட என் வீட் டில் என் அம்மாவின், என் தங்கையின் இது போன்ற நாட்களில் எப்போதும் போலவே அவர்களைத் தொட்டுப் பேசுவேன்.

ஆனாலும் ஒரு உண்மையை ஒத்துக் கொள்ள வேண்டும். தோழியின் மீதே இவ்வளவு மரியா தையையும், அன்பையும் வைத்துள்ளாயே. உனக்கு மனைவியாக வரப் போகிறவளை எந்த அளவிற்கு பாசத்துடன் பார்த்துக் கொள்வாய். உண்மையிலேயே உனக்கு மனைவியாக வரப் போகிறவள் ரொம்ப அதிர்ஷ்டசாலிதான்!''

''ஓ! அப்படியா? சரி... அந்த அதிர்ஷ்டக்காரியை சீக்கிரம் என் கண் முன் வரச் சொல்லேன்! கனவுகள் இன்றியே தூக்கம் தொடர்கிறது. எனக்கும் காதல் கனவு காண வேண்டும் என ஆசையாக உள்ளது!'' எனக் கூறிச் சிரித்தான் மதுபாலன்.

''ம். அந்த அதிர்ஷ்டக்காரி யாரென அறிந்தவுடன், உடனே உன் கண் முன் வரச் சொல்கிறேன்...'' என்றவன் மதுபாலனுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

அவன் கிளம்பிச் சென்றபின் மகிஷாவிடம் வந்த மதுபாலன், ''மகி... வலி இப்போது எப்படி இருக்கு?'' என்றான் பரிவுடன்.

அவனைக் கண்டு புன்னகைத்தவள்,

''இப்போது பரவாயில்லை. ரொம்பத் தேங்க்ஸ்டா மது! என்றாள்.

''சும்மா சும்மா தேங்க்ஸ் சொல்லாதே மகி!''

* * *

கலையமுதன் மறுநாளும் மதுபாலனின் வீட்டிற்கு வந்தான். மகிஷாதான் அவன் எதிரில் வர வெட்கப் பட்டுக் கொண்டு அறையிலேயே அடைந்து கிடந் தாள். கலையமுதனும் அவள் இருக்கும் அந்த நிலையால்தான் தன் எதிரே வர சங்கடப்படுகிறாள் என நினைத்தான்.

ஆனால் ஒரு வாரங்கள் முடிந்த பிறகும் கூட மகிஷா கலையமுதனின் எதிரே வரவில்லை.

'எதற்காக இவள் என் கண் முன்னால் வராமல் கண்ணா மூச்சு ஆடுகிறாள்?' எனக் குழம்பிப் போனான் கலையமுதன்.

* * *

அன்று பகல் பதினொன்று மணிக்கு மதுபாலனின் வீட்டிற்கு வந்தான் கலையமுதன்.

அப்போது மதுபாலனும், மகிஷாவும் நடு ஹாலில் எதிரெதிரே அமர்ந்தபடி கேரம் விளையாடிக் கொண் டிருந்தார்கள்.

கலையமுதன் வந்ததைக் கண்ட மகிஷா, 'இவர் பத்து மணி ஆன பிறகும் வரவில்லை என்பதால் தானே... இன்று இன்று வர மாட்டார் போல என் றெண்ணி மதுவுடன் கேரம் விளையாட வந்தேன்!' என யோசித்துக் கொண்டிருக்கும்போதே, கலை யமுதன்,

''ஹாய் பாலா!'' என்றபடி மகிஷாவின் அருகில் வந்து அவளை நெருங்கியபடி அமர்ந்தான்.

மகிஷாவிற்கு பழைய நடுக்கம் உடலில் உண் டானது. இதயம் படபடவென அடித்துக் கொண்டது. கலையமுதனின் அருகே தன் சிந்தனைகள் மூர்ச்சை யாவதை உணர்ந்தவள், சட்டென எழுந்து வீட்டி லிருந்து வெளியேறி தோட்டத்திற்குச் சென்று விட்டாள்.

கலையமுதன் மகிஷாவை நெருங்கி அமர்ந்த தையும், அவள் உடனே அங்கிருந்து எழுந்து சென்ற தையும் கவனித்த மதுபாலனுக்கு மனதுக்குள் சிறு சந்தேகம் துளிர் விட்டது.

ஆனால் கலையமுதனுக்கோ மகிஷா விலகிச் சென்றது மனதில் கலக்கத்தை உண்டாக்கியது.

'இவள் ஏன் விலகிச் செல்கிறாள்?' என யோசித்த கலையமுதனுக்கு அவளைப் பிடித்து நிறுத்தி காரணம் கேட்க வேண்டும் எனத் தேத்னறியது. 'இவளின் விலகலுக்கு நான் ஏன் கலங்க வேண்டும்?' என்று எண்ணமும் உண்டானது.

இரட்டை வேஷம் போடுகின்ற தன் மனதைப் புரிந்து கொள்ள முடியாத கலையமுதன் அமைதியாக மதுபாலனுடன் மகிஷா விட்டுச் சென்ற ஆட்டத்தைத் தொடர்ந்தான்.

சிறிது நேரம் சென்றவுடனேயே விளையாட்டில் கவனம் செலுத்த முடியாதபடி மகிஷாவின் நினைவுகள் கலையமுதனின் மனதை சூழ்ந்தது. அவளைப் பற்றி நினைக்க, நினைக்க தனக்குள் புது ரத்தம் தேகமெங்கும் பாய்வதை உணர்ந்தான்.

அவனின் தொண்டைக் குழிக்குள் ஒரு ஆனந்த அவஸ்தை உண்டானது, அவளிடம் எதையாவது பேசச் சொல்லி! ஆனால் மூளையிலோ சலவை செய்ததைப் போல வெறுமையும் உண்டானது.

விளையாட்டில் கலையமுதன் தோற்றான். மீண்டும் விளையாடுவதற்காக மதுபாலன் காயின்களை குவிக்க,

''விளையாடியது போதும் பாலா..! தலை பயங்கரமாக வலிக்கிறது. ஒரு கப் காபி கிடைக்குமா?'' என்றான் கலையமுதன்.

''ஐந்து நிமிடத்தில் கொண்டு வருகிறேன்!'' என்ற மதுபாலன் எழுந்து கிச்சனுக்குச் சென்றான்.

அவன் கிச்சனுக்குள் புகுந்ததும் கலையமுதன் எழுந்து தோட்டத்திற்குச் சென்றான்.

அங்கே மகிஷா வேப்ப மரத்தடியில் தலைக் குனிந்த வண்ணம் அமர்ந்திருந்தாள். அவளை நோக்கி வேகமாகச் சென்றான் அவன்.

அரவம் கேட்டுத் தலை நிமிர்ந்த மகிஷா கலையமுதன் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள்.

அவளின் இதயத் துடிப்பின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது. உடலிலும் படபடப்பு கூடிக் கொண்டே சென்றது. சட்டென எழுந்து நின்றவள் அங்கிருந்து செல்ல முயன்றாள்.

அதற்குள் அவள் அருகே வந்து விட்டவன்,

''மகிஷா ஒரு நிமிஷம் நில்லு! நான் உன்னிடம் பேச வேண்டும்!'' என்றான் அவசர அவசரமாக.

இவனிடம் பேசாமல் இனி செல்ல முடியாது என உணர்ந்தவள் அமைதியாகத் தலை கவிழ்ந்து நின்றாள்.

அவளுக்கு முன்னால் வந்து நின்றவன்;

''நீ ஏன் முன்னால் வர மாட்டேன் என்கிறாய்? உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா?'' என்றான்.

சட்டென அவனை நிமிர்ந்து பார்த்தவள், 'எப்படி இப்படி ஒரு கேளவியைக் கேட்டாய்?' என்பது போலச் சிறு கோபத்துடன் கண்களால் வினவினாள்.

அவளின் பார்வையால் அவள் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டவன், அவள் தன்னைப் பார்க்கிறாள் என்பதையும் உணர்ந்தான். அவனின் முகம் சட்டென மலர்ந்தது.

மலர்ந்த அவனது முகத்தைக் கண்டவள் நாணத்துடன் மீண்டும் தலை குனிந்தாள்.

அவள் மீண்டும் தலை குனிந்து கொண்டது அவனுக்குள் சிறு ஏமாற்றத்தை அளித்தது.

'இவள் நம்மைப் பார்க்க வேண்டும் என்றால் என்ன செய்வது?' என ஓரிரு நொடிகள் யோசனையில் ஆழ்ந்தவன்,

''ஆனால் எனக்கு உன்னைப் பிடிக்கவில்லையே!'' என்றான்.

அதிர்ச்சியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

அவள் மீண்டும் தலை குனியாத வண்ணம் அவளது முகவாயைத் தாங்கிப் பிடித்தவன்,

''நான் பொய் சொன்னால்தான் நீ என்னைப் பார்ப்பாயா?'' எனக் கேட்டு கண் சிமிட்டினான்.

வெட்கத்தில் முகம் சிவந்தவள் பார்வையை மட்டும் தாழ்த்தினாள்.

''மகிஷா!''

அவளால் அவனின் கண்களை நேராகப் பார்க்க முடியவில்லை. வார்த்தைகள் எதுவும் வாயிலிருந்து வர மறுத்தன.

''மகிஷா.. ப்ளீஸ்! ஏதாவது பேசேன்'' என்றான் கெஞ்சும் குரலில்.

அவளுக்கும் பேச வேண்டும் என்று ஆசையாகத்தான் இருந்தது. ஆனால் அவளைப் பேச விடாமல் வெட்கமும், தயக்கமும் வந்து தடுத்தது.

'இவளை எப்படிப் பேச வைப்பது?' என அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே,

''அமுதா... அமுதா...!'' என அழைத்தபடி அங்கு வந்தான் மதுபாலன்.

கலையமுதனிடமிருந்து வேகமாக விலகிய மகிஷா லேசான பயத்துடன் மதுபாலனைப் பார்த்தாள்.

ஆனால் அவனோ இவளது பயத்தை அறியாதவன் போல கலையமுதனிடம்,

''காபி கேட்டு விட்டு இங்கே என்ன செய்கிறாய்?'' எனக் கேட்டபடி அவனின் கையில் காபிக் கோப்பையைத் தந்தான்.

பின்னர் மகிஷாவின் புறம் திரும்பியவன்,

''மகி... நீ இங்கே என்ன செய்கிறாய்? உன் முகமெல்லாம் ஏன் ஒரு மாதிரியாக உள்ளது?'' என்றான்.

''இ... இ... இல்லையே. நான்.. நான்.. நன்றாகத்தானே.. இருக்கிறேன்!'' என பதற்றத்தோடு கூறினாள் மகிஷா.

அவளை ஒரு நொடி கூர்ந்து நோக்கிய மதுபாலன்,

''மகி நீ ஏன் இவ்வளவு டென்சனாக இருக்கிறாய்?'' என்றான்.

மகிஷாவின் பதட்டம் நிறைந்த முகத்தையும், மகிஷாவைப் பார்வையால் துளைத்துக் கொண்டிருந்த கலையமுதனையும் மாறி மாறிப் பார்த்த மதுபாலன் மகிஷாவிடம்,

''மகி... நீ வீட்டுக்குள் போ...'' என்றான் உத்தரவு போடும் குரலில்.

'சரி' என தலையாட்டிய மகிஷா கலையமுதனை ஓரக்கண்ணால் பார்த்து விட்டு வீட்டுக்குள் சென்றாள்.

மகிஷா வீட்டுக்குள் சென்றபின் கலையமுதனின் புறம் திரும்பிய மதுபாலன்,

''அமுதா... சொல்கிறேன் எனத் தவறாக நினைத்துக் கொள்ளாதே! இனி நமது நட்பு காலேஜில் மட்டும் தொடரட்டும்!'' என்றான்.

''ஸாரி பாலா... இனி நான் உன் வீட்டிற்கு வர மாட்டேன்!'' என முகம் கறுத்துக் கூறிய கலையமுதன் வேகமாக அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

7

சில நாட்களில் டூர் முடிந்து மதுபாலனின் பெற்றோரும், மகிஷாவின் பெற்றோரும் வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

பள்ளிகளும், கல்லூரிகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் திறக்கப்பட்டன.

விடுமுறை முடிந்து கல்லூரிக்குச் சென்றான் மதுபாலன். அவனாகவே வலியச் சென்று கலையமுதனிடம் பேசினான். ஆனால் அவனோ இவனிடம் சரியாக முகம் கொடுத்துப் பேசாமல் விலகிச் சென்றான்.

'ம்.. பார்க்கலாம். இன்னும் எத்தனை நாட்களுக்கு என்னுடன் பேசாமல் இருப்பாய் என!' என்று மனதுக்குள் கேட்டுச் சிரித்துக் கொண்ட மதுபாலன் அதன் பிறகு வந்த நாட்களில் அமைதியாக தன் வேலையை மட்டும் செய்து வந்தான்.

✱ ✱ ✱

அன்று தன் பாட வகுப்பில் மாணவர்களுக்கு பாடத்தை நடத்திக் கொண்டிருந்தான் மதுபாலன்.

மதுபாலனின் பாக்கெட்டிலிருந்த செல்போன் சத்தமின்றி வைபரேட் ஆக, 'யாரது இந்த நேரத்தில்?' எனச் சிந்தித்தவன், வகுப்பிற்கு வெளியே வந்து செல்போனை எடுத்துப் பார்த்தான்.

மாதரசிதான் அழைத்திருந்தாள்.

காலை அட்டெண்ட் செய்து செல்போனைக் காதில் வைத்தவன்,

''சொல்லுங்க ஆன்ட்டி!'' என்றான்.

எதிர்முனையில் இருந்த மாதரசி.

''மது கண்ணா... கொஞ்சம் வீட்டிற்கு வரு கிறாயா? மகிக்கு காய்ச்சல் அதிகமாக அடிக்கிறது!'' என்றாள் பதற்றத்துடன்.

''உடனே வருகிறேன் ஆன்ட்டி!'' என்றவன், காலைக் கட் செய்துவிட்டு, பர்மிசன் கேட்க பிரின் சிபல் அறை நோக்கிப் புறப்பட்டான்.

அவனுக்குப் பக்கத்து வகுப்பில் பாடம் எடுத்துக் கொண்டிருந்த கலையமுதன் அவனின் பதற்றம் நிறைந்த முகத்தைப் பாரத்துவிட்டு, தன் வகுப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டு அவனருகே வந்தான்.

''பாலா.. ஏன் டென்சனா இருக்கிறாய்? க்ளாஸ் டைமில் எங்கே போகிறாய்?'' என வினவினான்.

''மகிக்கு உடம்பு சரியில்லையாம் அமுதா!'' என்றான் மதுபாலன் பதற்றம் குறையாமலேயே.

''என்ன? மகிஷாவுக்கு என்ன ஆச்சு? ரொம்ப சீரியஸ். கண்டிஷனா? அதனால்தான் உன்னிடம் சொன்னார்களா?'' எனக் குரல் நடுங்கக் கேட்டான் கலையமுதன்.

''சீரியசெல்லாம் இல்ல அமுதா. சாதாரணக் காய்ச்சல்தான்!''

''சாதாரணக் காய்ச்சலுக்கு உன்னிடம் ஏன் சொல்ல வேண்டும்? அவளின் அம்மா வீட்டில் இல்லையா? அவர்கள் ஹாஸ்பிட்டல் அழைத்துச் செல்ல மாட் டார்களா?'' எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டான் கலையமுதன்.

''அமுதா இப்போது எதற்காக இத்தனைக் கேள்வி கேட்கின்றாய்? அவளைச் சமாளிக்க ஆன்ட்டியால் முடியாது. மூன்று மாதத்திற்கு முன் இப்படிதான் அவளுக்குக் காய்ச்சல் வந்தது அப்போது ஊசி போடுகையில் அவள் கத்திய கத்தலில் டாக்டரே பயந்து விட்டார். அவளுக்கு ஒவ்வொரு முறையும் ஊசி போடுவதற்குள் நான் படும்பாடு என்னவென்று எனக்குதான் தெரியும்'' என சலிப்புடன் கூறியவன்,

''நான் பர்மிஷன் கேட்டுவிட்டு வீட்டிற்குச் செல்ல வேண்டும்... இப்போது நீ வழியை விடு...'' என் றான்.

மதுபாலன் கூறியது அனைத்தையும் கேட்டவன்,

''பாலா.. நானும் உன்னுடன் வரட்டுமா?'' என்று கேட்டான்.

''நீ எதற்கு?''

''ப்ளீஸ் பாலா! நானும் வருகிறேன். மகிஷா அமைதியாக ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ள வேண்டுமானால் என்னையும் உன்னுடன் அழைத்துச் செல்!''

''ஆண்டவனே வந்தாலும் அவள் அமைதியாக ஊசி போட்டுக் கொள்ள மாட்டாள்! நீ வந்தால் மட்டும் அமைதியாக இருந்து விடுவாளா?''

''என்னை நம்பு பாலா ப்ளீஸ்!''

அவன் ஏன் அவ்வளவு கெஞ்சுகிறான் என முழுமை யாகப் புரியாவிட்டாலும்,

''சரி!'' என்றான் மதுபாலன்.

அதன் பிறகு இருவருமே அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு மகிஷாவின் வீட்டிற்குச் சென்றனர்.

மதுபாலனைக் கண்ட பிறகே மாதரசிக்கு நிம்மதி வந்தது.

''மது கண்ணா! எனக்கென்னவோ ரொம்ப பயமாயிருக்கு! கொஞ்ச நாளாகவே காய்ச்சல் விட்டு விட்டு அடித்துள்ளது. ஊசிக்குப் பயந்து கொண்டு நம்மிடம் சொல்லாமல் விட்டு விட்டாள். இன்று மதியம் சாப்பிடும் பொழுதும் பாதியிலேயே மயங்கி விழுந்து விட்டாள். அதன் பிறகே இவளுக்கு காய்ச்சல் வந் துள்ளது பற்றி எனக்குத் தெரிந்தது!'' என்றவள், கலையமுதனைக் கண்டு விட்டு,

''இது யார் மது கண்ணா?'' என்றாள்.

''இவன் என் ப்ரெண்ட் ஆன்ட்டி! இவனுக்கும் லேசாகக் காய்ச்சல்!

நானும் ஹாஸ்பிட்டல்தான் செல்கிறேன். நீயும் வா! எனக் கூறி அழைத்து வந்து விட்டேன்'' என்று ஒரு பொய்யைச் சொன்னான் மதுபாலன்.

''அப்படியா கண்ணா?'' என்றவள் உள்ளே சென்று காரின் சாவியைக் கொண்டு வந்து மதுபால னிடம் தந்தாள்.

''பைக்கில் மூன்று பேர் செல்ல முடியாது அல் லவா?'' என்றாள்.

அப்போது உள்ளேயிருந்து தும்மியபடியே அங்கு வந்தார் சாந்தசீலன்.

''ஆன்ட்டி.. அங்கிள் ஸ்கூல் போகவில்லையா?''

''அவருக்கு ஜலதோசம் பிடிச்சிருக்கு மது! எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் இவரையும் ஹாஸ் பிட்டல் அழைத்துச் சென்று ஒரு ஊசிப் போட்டு அழைத்து வந்தால் சரியாகயிருக்கும் எனத் தோன்று கிறது!''

மாதரசி இப்படிக் கூறியவுடன்,

''என்ன? ஊசியா?'' என பயத்துடன் கேட்ட சாந்தசீலன்,

''வீரனுக்கு ஊசி போடாமலேயே ஜலதோசம் சரியாகி விடும். நானும் வீரன்தான்! நான் இங்கேயே இருந்தால் என்னையும் ஹாஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்று விடுவீர்கள்! அதனால் என் ரூமிற்கு செல் கிறேன்!'' என்றவர் அவசர அவசரமாக சென்று தன் அறைக்குள் புகுந்து கொண்டார்.

'இவர் வீரரா? ஒரு ஊசிக்கே இந்த அளவுக்குப் பயப்படுகிறார்! இவருக்கு ஊசி போட வேண்டு மானால் சோமநாதன் அண்ணாவால்தான் முடியும்! சரிப்பா நீ மகிஷாவை அழைத்துச் சென்று வாப்பா!'' என்றாள் மாதரசி.

''சரி ஆன்ட்டி!'' என்றவன் மகிஷாவின் அறைக்குச் சென்றான்.

போர்வையைப் போர்த்தியபடி கட்டிலில் படுத்திருந்த மகிஷா மதுபாலனைக் கண்டதும், சட்டென எழுந்து கட்டிலின் மறுபுறம் இறங்கி நின்றாள்.

''மது.. ப்ளீஸ் மது! எனக்கு ஊசி வேண்டாம்!'' என்று கெஞ்சினாள்.

''மகி... நீ என்ன சின்னக் குழந்தையா? ஒவ்வொரு முறையும் உனக்கு உடம்பு சரியில்லாமல் போகும் போது உன்னோடு போராடிப் போராடியே என் தொண்டை தண்ணீர் வற்றி விடுகிறது! இப்போது மரியாதையாகச் சத்தம் போடாமல் என்னுடன் கிளம்பி ஹாஸ்பிட்டல் வா!' என்றவன் கட்டிலின் மறுபுறம் சென்றான்.

அவனுக்கு எதிர்த் திசையில் ஓடியவள்,

''அன்றைக்குப் போட்ட ஊசியே எனக்கு இன்னும் வலிக்கிறது மது! ப்ளீஸ்.. எனக்கு ஊசி வேண்டாம்! மாத்திரை மட்டும் விழுங்குகிறேன் ப்ளீ...'' என்றவள் தலைச் சுற்றி கீழே விழ முற்பட, அவளைச் சட்டெனத் தாங்கிப் பிடித்தான் மதுபாலன்.

''உன்னுடைய நோய்களை அந்த ஆண்டவன் எனக்குத் தந்தால் அந்த ஆண்டவனுக்கே புண்ணியமாகப் போகும்!'' எனச் சலிப்புடன் கூறியவன் அவளைத் தாங்கிப் பிடித்தபடி வெளியே அழைத்துச் சென்றான்.

''ப்ளீஸ் மது... ஹாஸ்பிட்டல் வேண்டாம்டா. ஊசி வேண்டாம்டா!'' எனப் புலம்பியபடியே வந்தவள்,

காரின் டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்த கலையமுதனைக் கண்டதும் பேச்சிழந்து விட்டாள்.

அவளைக் கண்டு புன்னகைத்த கலையமுதன் மதுபாலன் அறியா வண்ணம் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான். வெட்கத்தில் முகம் சிவந்த மகிஷா அமைதியாகச் சென்று பின் சீட்டில் ஏறி அமர்ந்தாள்.

அவளின் திடீர் அமைதியைக் கண்டு ஆச்சரியப்பட்ட மதுபாலன் கலையமுதனிடம் கள்ளப் பார்வை ஒன்றை உதிர்த்தான். அவனின் பார்வையைப் புரிந்து கொண்ட கலையமுதன் அவனைக் கண்டு கண் சிமிட்டி புன்னகைத்தான்.

மதுபாலனும் சிரித்துக் கொண்டே அவன் அருகே ஏறி அமர்ந்தான். கார் மருத்துவமனையை நோக்கி விரைந்தது. மதுபாலன் அடிக்கடி பின்னால திரும்பி மகிஷாவைப் பார்த்த வண்ணம் வந்தான். அவளோ குனிந்த தலை நிமிராமல் அமைதியாக அமர்ந்து வந்தாள்.

ஹாஸ்பிட்டலில் அவளைப் பரிசோதித்த மருத்துவர் ப்ளட் டெஸ்ட் எடுக்க வேண்டும் எனக் கூறினார்.

மகிஷா பயத்துடன் மதுபாலனிடம் 'முடியாது' எனத் தலையாட்டினாள். மதுபாலனின் அருகே நின்றிருந்த கலையமுதன் அவளை ஒரு பார்வை பார்க்கவும் 'முடியாது' என ஆட்டிய தலையை 'சரி' என ஆட்டினாள்.

அவளின் ரத்தத்தைப் பரிசோதித்த மருத்துவர் 'டைபாய்டு' என உறுதி செய்தார்.

'ட்ரிப்ஸ் ஏற்ற வேண்டும்' என மருத்துவர் சொல்லவும், சத்தம் போடாமல் கண்ணீரை மட்டும் சிந்தியபடி மருத்துவர் கைக் காட்டிய பெட்டில் ஏறி படுத்தாள் மகிஷா.

மருத்துவர் டிரிப்ஸ் செலுத்த ஊசியை எடுத்துக் கொண்டு வரவும் மகிஷா சத்தமின்றி தேம்பியபடி ஆரம்பித்து விட்டாள். அவளின் நிலையைக் கண்டு மதுபாலனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

தன் அருகில் நின்றிருந்த கலையமுதனிடம் மதுபாலன்,

''அமுதா... நீ சிறிது நேரம் வெளியில் நிற்கின் றாயா? அவள் ஆர்ப்பாட்டம் செய்தால்கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் இப்படிச் சத்தமின்றி தேம்பினால் என்னால்... என்னால்...'' என அரை குறையாகக் கூறி நிறுத்திய இவனும் விட்டால் அழுது விடும் நிலையில் தான் இருந்தான்.

''ம்ப்ச்... நீயெல்லாம் காலேஜில் ப்ரொபசராக இருப்பதற்கு பதிலாக நாலு கழுதைகள் வாங்கிக் கொண்டு அதை மேய்க்கப் போகலாம்!'' என்று மெல்லிய குரலில் அவனைக் கடிந்துகொண்ட கலை யமுதன் அவனின் தோளில் கைப்போட்டு மகிஷா வின் அருகில் அழைத்துச் சென்றான்.

அவள் அருகில் சென்றதும்,

''பாலா!'' என்றான் காந்தக் குரலில்.

'இவன் பக்கத்தில்தானே நான் நிற்கிறேன். எதற்காக இப்படி லவ் பீலிங்கில் என்னைக் கூப்பிடுகிறான்?' எனக் குழம்பிய மதுபாலன் மகிஷாவைப் பார்த்தான். அவள் அழுகையை நிறுத்திவிட்டு இவர்கள் என்ன பேசுகிறார்கள் எனஅறியும் ஆவலில் இவர்களை நோக்கினாள். இதைக் கண்டவன் 'அழைப்பு இவளுக் கானதா?' எனப் புரிந்து கொண்டான்.

பின்னர் கலையமுதனிடம்,

''சொல் அமுதா!'' என்றான்.

மகிஷா தன்னைத்தான் கவனிக்கிறாள் என்பதை ஓரக் கண்ணில் பார்த்து அறிந்து கொண்ட கலை யமுதன்.

''பாலா.. என் பெர்ப்யூம் வாசனை உனக்குப் பிடித்திருப்பதாக அன்றைக்குச் சொன்னாய் அல் லவா?'' என்றான் ஓரக்கண்ணில் மகிஷாவை பார்த்த படியே.

'இவன் எதற்குச் சம்பந்தமில்லாம கேள்வி கேட் கிறான்?' எனக் குழம்பிய மதுபாலனும் மகிஷாவைப் பார்த்தான்.

அவளோ மருத்துவர் டிரிப்ஸ்க்கான ஊசியைத் தன் கையில் குத்துவதைக் கூட உணராமல் வெட்கத்தில் முகம் சிவந்து கண் மூடினாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த மதுபாலன் கலையமுதனுக்கு மனதுக்குள் ஒரு சபாஷ் சொல்லிக் கொண்டே,

''ஆமாம் சொன்னேன்! அதற்கென்ன இப்போது?'' என்றான்.

''அதற்கென்ன இப்போது? ஒன்றும் இல்லை. வேலை முடிந்து விட்டது. வெளியே போகலாம் வா!'' என்றவன் மதுபாலனை அழைத்துக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியேறினான்.

அறையை விட்டு வெளியேறியதும் கலையமுதனின் முதுகில் ஒரு செல்ல அடியைத் தந்த மதுபாலன்.

''ஏன்டா துரோகி.. இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?'' என பொய்க் கோபத்துடன் வினவினான்.

''கன்ஃபார்ம் ஆனதும் சொல்லலாம் என இருந்தேன் பாலா!''

''அப்படியென்றால் அவள் இன்னும் ஓகே சொல்லவில்லையா?''

''அடப்போப்பா... நானே இன்னும் கேட்கவில்லை!'' என்றான் சிறு சலிப்புடன்.

''என்ன சொல்கிறாய் அமுதா?'' புரியாமல் கேட்டான் மதுபாலன்.

''ஆட ஆமாம் பாலா! அவள் என் கண் முன்னால் வராமலேயே கண்ணா மூச்சி ஆடிக் கொண்டிருந்தாள். அவளின் கண்ணாமூச்சி ஆட்டத்திற்கு ஒரு எண்ட் போட்டு விடலாம் என நினைத்து அன்றைக்கு

உன் வீட்டுத் தோட்டத்தில் அவளிடம் பேசிக் கொண்டு இருந்தேன். அதற்குள் நீ வந்து குட்டையையும் குழப்பிவிட்டு விட்டு, என்னையும் வீட்டிற்கு வர வேண்டாம் எனக் கூறி விட்டாய்.''

''ஐ யம் ஸோ ஸாரி அமுதா! அன்றைக்கு நீ முதன் முதலாக வீட்டிற்கு வந்தபோதும் அவள் அழுதாள். அதன் பிறகு நீ வீட்டிற்கு வரும் போதெல்லாம் அறையிலேயே வேறு அடைந்து கிடந்தாள்! இதெல்லாம் போதாதென்று அன்றைக்கு தோட்டத்திலும் பயந்து போய் நின்றிருந்தாள். அதனால்தான் அவளுக்கு நீ வீட்டிற்கு வருவது பிடிக்கவில்லையோ! என எண்ணி விட்டேன். அதனால்தான் நான் உன்னை வீட்டிற்கும் வர வேண்டாம் எனக் கூறினேன். ஸாரி அமுதா!'' என வருத்தத்தோடு கூறினான் மதுபாலன்.

''பரவாயில்லை விடு பாலா! நீ அவள் மேல் உள்ள அக்கறையாலதானே அப்படிக் கூறினாய். சரி வா! நாம் சென்று ஆளுக்கொரு காபி குடித்து விட்டு வருவோம்!''

''இல்லை! நீ சென்று அவளிடம் பேசிக் கொண்டு இரு. நான் சென்று உனக்கும் காபி வாங்கி வருகிறேன்!'' என்றவன் கேண்டினை நோக்கிச் சென்றான்.

மதுபாலன் சென்றதும் மகிஷாவின் அருகில் வந்தான் கலையமுதன்.

8

கலையமுதன் தன்னருகில் வந்தது கூடத் தெரியாமல் மகிஷா மெல்லிய விசும்பலுடன் கண்களை மூடிக் கொண்டு அழுது கொண்டிருந்தாள்.

ஒரு நாற்காலியைச் சத்தமின்றி எடுத்து அவள் அருகே போட்டு அதில் அமர்ந்தான் கலையமுதன். அவளின் இடது கையில் ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்தது. அதனால் அவளின் வலது கையை எடுத்து தன் கைகளுக்குள் வைத்து பொத்திக் கொண்டான். திடுக்கிட்டு கண் விழித்தவள் அவனை வியப்போடு பார்த்துவிட்டு பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''சாதாரண டைபாய்டு காய்ச்சலை அழுதழுது மிகப் பெரிய நோயாக மாற்றப் போகிறாய்!'' என்று அவன் சிறு கோபத்துடன் சொல்லவும்.. மகிஷா அவசர அவசரமாகத் தனது இடது கையால் கண்ணீரைத் துடைத்தாள்.

அதைப் பார்த்தபடியே காபி கப்புகளுடன் உள்ளே நுழைந்த மதுபாலன்.

''மகி உனக்கு அறிவே இல்லையா? ஏன் ட்ரிப்ஸ் ஏறிக்கொண்டு இருக்கிற கையால் கண்ணீரைத்

துடைத்தாய்? இன்னொரு கை என்ன செய்கிறது?'' என்றவன் அவளது வலது கை கலையமுதனின் கைகளுக்கு இடையே சிறையிலிருப்பதைக் கண்டான்.

மகிஷாவின் கையை தன் கைக்குள் வைத்திருப்பதை மதுபாலன் பார்த்து விட்டான் எனத் தெரிந்ததும், சட்டெனத் தன் கைகளுக்குள் இருந்த மகிஷாவின் கையை விடுவித்தான் கலையமுதன்.

''அதற்குள் காபி வாங்கிக் கொண்டு வந்து விட்டாயா பாலா?'' என்றவன், அவன் கையிலிருந்த காபி கப் ஒன்றை வாங்கிக் குடிக்க ஆரம்பித்தான்.

அவனைச் செல்லமாக முறைத்தபடி அவன் அருகிலிருந்த மற்றொரு நாற்காலியில் அமர்ந்தான் மதுபாலன்.

காபியைக் குடித்துக் கொண்டிருந்த கலையமுதன், ஏதோ நினைவு வந்தவனாக,

''மிஸ்டர் மதுபாலன் உங்க வீட்டு காபி சூப்பர்!'' எனக் கூறவும் மகிஷாவின் முகம் மீண்டும் வெட்கத்தில் சிவந்தது.

''இது எங்க வீட்டு காபி இல்லை. ஹாஸ்பிட்டலின் கேண்டின் காபி!'' என மதுபாலன் கூறவும் தன்னை மறந்து புன்னகை பூத்தாள் மகிஷா.

சிறிது நேரத்தில் ட்ரிப்ஸ் ஏறி முடிந்து விடவும், மருத்துவர் ஊசியில் மருந்தை ஏற்றியபடி மகிஷாவின் அருகில் வந்தார்.

'இனிமேல் நிச்சயம் முடியாது' என நினைத்த மகிஷா,

''மது.. ஊசி வேண்டாம்டா. நாம வீட்டிற்குப் போகலாம்டா!'' என்றாள் அழு குரலில்.

''மகி... நீ ஏன் இப்படி அடம் பிடிக்கிறாய்?'' என்று சலித்துக் கொண்டவன் கலையமுதனிடம்,

''இவளுக்கு ஊசியைப் போட வைத்து அழைத்து வா. நான் பில் கட்டிவிட்டு காருக்கு அருகில் வெயிட் பண்ணுகிறேன்'' எனக் கூறி விட்டு அங்கிருந்து சென்றான்.

மகிஷா கலையமுதனிடம் பார்வையால் கெஞ்சினாள். அதை சிறிதும் பொருட்படுத்தாதவன் அவளின் தோளில் பதிக்க தன் கையை நீட்டினான்.

''இல்லை... நானே போட்டுக் கொள்கிறேன்!'' என்றவள் பல்லைக் கடித்தபடி வலது கையில் டாக்டர் போட்ட ஊசியை வாங்கிக் கொண்டாள்.

''இன்னும் இரண்டு நாட்களுக்கு இன்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள வரவேண்டும்!'' என மருத்துவர் கூறவும் சரியெனத் தலையாட்டிய கலையமுதன் மகிஷாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

''நீ... நீங்க அன்றைக்கு என்னிடம் பேசிய பிறகு ஏன் வீட்டிற்கு வரவில்லை?''

மகிஷா கேட்ட கேள்வி கலையமுதனின் காதுகளில் மிகவும் சன்னமாகக் கேட்டது. உடனே நடப்பதை நிறுத்திவிட்டு வியப்போடு அவளைப் பார்த்தான்.

அவள் வழக்கம்போல வெட்கத்துடன் தலை குனிய, பெருமூச்சு ஒன்றை விட்டபடி நடக்க ஆரம்பித்தவன்,

''நான் வராமல் இருந்ததால்தானே நீ இன்று ஒரு கேள்விக்காகவாவது என்னிடம் பேசச் செய்தாய்!'' என்றான்.

அவள் மீண்டும் பேசா மடந்தை ஆகிவிட, கலையமுதனும் பேசாமல் அவளுடன் நடந்தான்.

மதுபாலனை நெருங்கிய பிறகு கலையமுதன்.

''பாலா... இவளோடு நீ உண்மையிலேயே ரொம்பக் கஷ்டப்படுகிறாய்! குழந்தையை விடவும் மோசமாக அடம் பிடிக்கின்றாளே! இவளை இவ்வளவு நாளாக எப்படிதான் சமாளித்தாயோ!'' என்றான் கேலியாக.

'இதற்கு மேல்தான் நீ சமாளிக்கப் போகிறாயே கண்ணா...!' என நினைத்துக் கொண்ட மதுபாலன்.

''என் கஷ்டம் உனக்காவது புரிந்தால் சரிதான் அமுதா!'' என்றான் பொய் சோகத்துடன்.

அதன் பிறகு கலையமுதன் தன் வீட்டிற்குப் புறப்பட்டுச் செல்ல, மதுபாலனும், மகிஷாவும் தங்களின் வீட்டிற்குப் புறப்பட்டனர்.

சாலையைப் பார்த்து வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த மதுபாலனை நொடிக்கொரு தரம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள் மகிஷா.

''என்னிடம் ஏதாவது பேச வேண்டுமா மகி?'

மதுபாலன் திடீரென கேட்கவும் திகைத்த மகிஷா சில வினாடிகள் மவுனத்திற்குப் பிறகு பேச ஆரம்பித்தாள்.

''மது... அ.. அவர் இருக்காருல்ல?''

அவள் முழுதாக முடிக்கும் முன் குறுக்கிட்ட மதுபாலன்,

''எவர்?'' என்றான்.

''அவர்தான்... உன் ப்ரெண்ட்... க... கலையமுதன்!''

''ஏன் மகி இது உனக்கே கொஞ்சம் ஓவராக இல்லை? என்னை மட்டும் வாடா போடா என்று இஷ்டத்திற்கும் கூப்பிடுகிறாய். ஆனால் அவன் மட்டும் உனக்கு அவர் ஆகி விட்டானா?''

''நீ இப்படிக் குறுக்கே பேசினால் நான் எப்படி உன்னிடம் பேசுவது?''

''சரி.. சரி... சொல்லு.?''

''அ... அவரைப் பார்க்கும்போது மனதுக்குள் ஏதோ பீல் ஆகுதடா!''

''ம்... அப்புறம்?''

''கிண்டல் பண்ணுகிறாயா மது?''

''இல்லை... சொல்லு!''

''அதுதான்டா! அவரைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஒரு மாதிரியா இருக்குடா! அவரோட

கண்களைப் பார்த்துப் பேசவே முடியமாட்டேங்குது! அவர் என் பக்கத்தில் வந்தாலே எனக்கு உடம்பெல்லாம் நடுங்குதுடா! அவர் பக்கத்தில் இருக்கும் போது என் மூளை கூடச் சட்டென வேலை செய்ய மாட்டேங்குது.''

''மகி... நீ ஏன் இவ்வளவு சொல்கிறாய்? சிம்பிளாக நான் அவரை லவ் பண்றேன்னு சொல்ல வேண்டியது தானே?''

''அப்படியென்றால் நான் அவரை லவ் பண்ணால் உனக்குக் கோபம் இல்லையா?''

''ச்சீ... எனக்கு எதற்குக் கோபம்? அவன் ரொம்ப நல்லவன் என் மகியை ரொம்ப நன்றாகப் பார்த்துக் கொள்வான். சரி என்னிடம் சொல்லவே இப்படி திணறுகிறாயே! அவனிடம் எப்படிச் சொல்வாய்?'' எனக் கேட்டுச் சீண்டினான்.

''எதற்குச் சொல்லணும்?''

''அப்படியென்றால்?''

''அப்படியென்றால் ஹார்ட்டும், ஹார்ட்டும் பேசிக் கொண்ட பிறகு வார்த்தைகள் எதற்குப் பேச வேண்டும் என்கிறேன்!''

''மகி... நீயா இப்படிப் பேசுகிறாய்? நம்பவே முடியவில்லை!''

''டேய்.. கலாய்க்காதடா! எல்லாம் உன்னிடம் மட்டும்தான். இப்படிப் பேசுகிறேன். அவரிடம் ஒரு

வார்த்தை பேசுவதற்குள் ஒரு ஜென்மமே முடிந்தது போல் தோன்றுகிறது.''

''பயப்படாத மகி! நீ பேசியது அனைத்தையும் அவன் கேட்டு விட்டான்!'' என்றவன் தான் முன்பே கலையமுதனின் செல்போனுக்கு அழைத்து வைத்திருந்த தன் செல்போனை எடுத்து அவளிடம் நீட்டினான்.

திகைப்புடன் செல்போனைப் பார்த்தவள் தயக்கத்துடன் அதை வாங்கிக் காதில் வைத்தாள்.

''மகிஷா'' என்று எதிர்முனையில் காந்தக் குரலில் அழைத்தான் கலையமுதன்.

வெகு நேர மௌனத்திற்குப் பிறகு,

''ம்...'' என்றாள் மகிஷா.

''மதுவிடம் மட்டும் மனம் திறந்து பேசுகிறாய்! என்னிடம் ஏன் பேச மறுக்கிறாய்?''

இவள் பதில் கூறாமல் மௌனம் மட்டும் காத்தாள்.

''நீதான் பேச மாட்டேன் என்கிறாய்! நான் பேசுவதையாவது காது கொடுத்துக் கேட்பாயா? அது வந்து.. ஐ லவ் யூ!'' என்று அவன் கூறவும் வெட்கத்தில் முகம் சிவந்தவள் செல்போனை மதுபாலனிடம் நீட்டினாள்.

அதற்குள் வீடும் வந்து விட்டிருக்க... காரிலிருந்து வெட்கத்துடன் இறங்கியவள் வேகமாகத் தன் அறைக்கு ஓடி விட்டாள்.

அவள் தந்து சென்ற செல்போனை தன் காதில் வைத்தான் மதுபாலன்.

''மகிஷா... பேசு மகிஷா...'' என எதிர்முனையில் கலையமுதனின் குரலைக் கேட்டுச் சிரித்த மதுபாலன்,

''அவள் செல்போனை என்னிடம் தந்துவிட்டு ஓடிவிட்டாள் அமுதா!'' என்றான்.

எதிர்முனையிலிருந்த கலையமுதனின் ஏமாற்றத்தை உணர்ந்த மதுபாலன் அவனைக் கலகலப்பாக மாற்ற எண்ணி,

''டேய் அமுதா! உனக்கு யார்டா விஸ்வாமித்திரன் என பெயர் வைத்தது? உன்னால் இந்த பெயருக்கே அவமானம்!'' என்றான்.

''என்ன பாலா... கலாய்க்கறதா நினைப்பா? இரு... உனக்கும் ஒருத்தி வருவாள். அப்போது நீ என்ன செய்யப் போகிறாய்ன்னு.. நானும் பார்க்கிறேன்!'' என்றவன் போனை வைத்து விட்டான்.

* * *

சிறிது நாட்களில் மகிஷாவிற்குக் காய்ச்சல் முற்றிலும் குணமானது.

அன்று விடுமுறை நாள்.

மகிஷாவின் பெற்றோரும், மதுபாலனின் பெற்றோரும் மகிஷாவின் வீட்டில் ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மகிஷாவும், மதுபாலனும்

வெகு தீவிரமாக வீடியோ கேம் விளையாடிக் கொண் டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் வாசலில் கார் வந்து நிற்கும் சத்தமும், அதைத் தொடர்ந்து வீட்டின் அழைப்பு மணி அடிக்கும் சத்தமும் கேட்டது. 'இந்த நேரத்தில் யார்?' என யோசித்தபடியே சென்று கதவைத் திறந்தாள் மாதரசி.

அங்கே புன்னகை முகத்துடன் நின்றிருந்தான் கலையமுதன். அவனுக்கு அருகில் சிலர் பழத் தட்டுகளுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

மாதரசி ஒன்றும் புரியாமல் குழம்பிப் போய் நிற்க,

''உள்ளே கூப்பிட மாட்டீர்களா?'' எனச் சிரித்த படியே கேட்டான் கலையமுதன்.

''உ.. உள்ளே வாப்பா...'' எனத் தயக்கத்துடன் அழைத்தாள் மாதரசி.

கலையமுதனைத் தொடர்ந்து உள்ளே வந்தவர்கள் பழத்தட்டுகளை ஹாலின் நடுவே வைத்தனர். அவர் களைக் கண்டு வீட்டிலிருந்த அனைவரும் தயங்கிய படி எழுந்து நின்றனர்.

கலையமுதனைக் கண்டு வெட்கப்பட்ட மகிஷா, உடன் வந்தவர்களைக் கண்டு விட்டு கேள்வியாக மதுபாலனை ஏறிட்டாள். அவனும் தனக்குத் தெரி யாது என உதட்டைப் பிதுக்கினான்.

இவர்களின் முகம் பார்த்து புன்னகைத்த கலை யமுதன் தன் அருகே நின்றிருந்த பெண்மணியைச் சுட்டிக் காட்டி,

''இவங்க என் அம்மா... மாதவி... இவர் என் அப்பா சாருகேசன்!'' என அறிமுகப்படுத்தி வைத்தான்.

''வ.. வணக்கம்...'' எனத் தயங்கியபடியே வணங் கினாள் மகிஷா.

எல்லோரும் தயக்கத்துடன் நிற்பதைக் கண்ட மாதவி,

''ஏன் எல்லோரும் ஒரு மாதிரியா இருக்கிறீர்கள்? இவன்தான் எங்க பையன் கலையமுதன். இவனுக்கு மகிஷாவைப் பொண்ணு கேட்டுதான் நாங்க வந் திருக்கோம்!'' என்றாள்.

எல்லோரும் திகைத்து நிற்க மகிஷா மட்டும் பயத்துடன் தன் பெற்றோரை ஏறிட்டாள். அவர்களும் இவளைச் சந்தேகமாகப் பார்க்க அமைதியாக தலை குனிந்தாள்.

நிலைமையினை நொடியில் புரிந்து கொண்ட ஹேமாவதி, ''எல்லோரும் உட்காருங்கள்...'' எனக் கூறி அவர்களை அமர வைத்தாள்.

பின்னர் மாதரசியின் புறம் திரும்பியவள்,

''மகிஷாவை அழைத்துச் சென்று ரெடி பண்ணி கூட்டி வா!'' என்றாள்.

மாதரசியும் தயக்கத்துடன் தலையாட்டிவிட்டு மகிஷாவை உள்ளே அழைத்துச் சென்றாள். செல்லும் முன் மதுபாலனையும் உள்ளே வரச் சொல்லி கண் களால் சைகை செய்துவிட்டுச் சென்றாள்.

மகிஷாவின் பின்னலை அவிழ்த்து விட்டு தலை வாரிய மாதரசி உள்ளே வந்த மதுபாலனிடம்,

''மது... அவன் உன் ப்ரெண்ட்தானே?'' எனக் கேட்டாள்.

''ஆமாம் ஆன்ட்டி! ஆனால்...''

''என்ன ஆனால்? உனக்குத் தெரியாமல் இங்கே எதுவும் நடந்திருக்காது!'' எனக் கோபமாக மொழிந்தவள் தன் கோபத்தை மகிஷாவின் கூந்தலின் மீதும் காட்டினாள்.

''ஆ... வலிக்குது!'' என கத்திய மகிஷாவைக் கண்டு மாதரசிக்கு மேலும் கோபம் வந்தது.

''என்னடி வலிக்குது? மௌன சாமியாரினி மாதிரி இருந்து கொண்டு என்னவெல்லாம் செய்திருக்கிறாய்? ஆம்பிள்ளை பையன் அவன்கூட தன் அப்பா, அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறான். ஆனால் நீ என்கிட்ட ஒரு கோடாவது போட்டுக் காட்டினாயா? வந்தவர்களுக்கு முன்னால ஒன்றும் தெரியாதவளாக என்னைத் திருதிருவென விழிக்க வைத்து விட்டாயே!'' எனக் கூறி நொடித்தாள்.

மாதரசியின் கோபம் எதனால் என்று மதுபாலனுக்குப் புரிந்தது.

''ஸாரி ஆன்ட்டி! நாங்க சொல்லலாம் என்றுதான் இருந்தோம். ஆனால் அமுதன் அதற்குள் முந்தி

விட்டான்!'' என்றான் மன்னிப்புக் கேட்கும் தொனியில்.

''சொல்லலாம் என்று இருந்தீர்களா? எப்போது? திருமணத்திற்கு முதல் நாளா?''

அம்மாவை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என யோசித்த மகிஷா,

''அம்மா.. உனக்கு அவரைப் பிடிக்கவில்லை என்றால் சொல்லிவிடு. நானும் பிடிக்கவில்லை எனச் சொல்லி விடுகிறேன். ஏனெனில் எனக்கு நீதான் முக்கியம்!'' என்றாள் கரகரக்கும் குரலில்.

''ச்சீ! நடிக்காதடி! உன் பசப்பல் வார்த்தையை இனிமேலும் நான் நம்ப மாட்டேன். உன்னைக் கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணி அனுப்பி விட்டு என் மது கண்ணனுக்கு மனைவியாக வரப் போகிறவளை என் பொண்ணாக தத்து எடுத்துக் கொள்ளப் போகிறேன். ஏனெனில் எனக்கு உன்னைவிட என் மதுதான் முக்கியம்!'' என்றாள் மகிஷாவின் குரலிலேயே.

இதைக் கேட்டதும் மகிஷாவிற்கும், மதுபாலனுக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. மாதரசி சமாதானம் ஆகிவிட்டது தெரிந்ததும் அங்கிருந்து ஹாலுக்குச் சென்றான் மதுபாலன்.

அங்கே சாந்தசீலனும், சோமநாதனும் கலையமுதனின் குடும்பத்தாரிடம் சகஜமாகப் பேச ஆரம்பித்திருந்தனர். சோமநாதனின் அருகில் சென்று அமர்ந்த

மதுபாலன் கலையமுதனைக் கண்டு பொய்யாக முறைத்தான். அதைப் புரிந்து கொண்ட கலையமுதன் கண்களைச் சிமிட்டிப் புன்னகைத்தான்.

சிறிது நேரத்தில் மகிஷாவை அலங்கரித்து அழைத்து வந்தாள் மாதரசி.

அவளை முதல் முறை புடவையில் பார்ப்பதால் தன்னை மறந்து ரசித்தபடி அமர்ந்திருந்தான் கலையமுதன். அவனைக் கண்டு வழக்கம் போல் வெட்கப் பட்டு தலை குனிந்தாள் மகிஷா.

9

இரு குடும்பங்களும் தங்களைப் பற்றிய விவரங்களைப் பரிமாறிக் கொண்டிருக்க, மகிஷாவோ தரையைப் பார்த்தபடி கால் கட்டை விரலால் கோலம் வரைந்து கொண்டிருந்தாள்.

ஹேமாவதி கொண்டு வந்த காபியை எடுத்துக் கொண்ட மாதவி மதுபாலனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரை மணி நேரத்திற்கு மேலான பிறகும் மகிஷா அமைதியாகவே நிற்பதைக் கண்ட மதுபாலன் எழுந்து அவளருகே வந்தான்.

''மகி... இப்போது உனக்கு இந்தப் புடவை அன்னீசியாக இல்லையா?''

அவன் கேட்ட பிறகே தான் புடவையில் இருப்பதை உணர்ந்தாள் மகிஷா.

திரும்பிப் பார்த்து அவனை முறைத்தவள்,

''இவ்வளவு நேரம் நன்றாகத் தான்டா இருந்தது. இப்போது நீ சொன்ன பிறகுதான் அன்னீசியாகத் தோன்றுகிறது. உன்னை யார் எழுந்து வரச் சொன்னார்கள்?'' என்றாள் மெல்லிய குரலில்.

''இது உனக்கே ஓவராத் தெரியலயா மகி? அவனைக் கண்டதும் புடவையில் இருப்பதைக் கூட மறந்து விட்டாயே. நாளை திருமணம் ஆன பிறகு என்னை நினைவிலாவது வைத்திருப்பாயா?'' என்றான் சீண்டலாக.

திடீரென முகம் மாறிய மகிஷா,

''உனக்குப் பிடிக்கவில்லையென்றால் சொல்... நான் இப்போதே அவரை மறந்து விடுகிறேன். ஏனெனில் எனக்கு காதலை விட நட்புதான் முக்கியம். இப்போது நான் சொன்னது அம்மாவிடம் சொல்லியது போலப் பேச்சிற்காகச் சொல்லியது அல்ல. என் மனசாட்சியின் உத்தரவுப்படி சொன்னது!'' என்றாள்.

''ஏய் மதி! நான் விளையாட்டுக்குதான் கேட்டேன்!''

''ஆனால் நான் சீரியஸாகத்தான் சொன்னேன் மது!''

''சரி சரி! இந்த டாபிக்கை விட்டு விடலாம்! நீ சென்று புடவையை மாற்றிக் கொள். பெண் பார்க்க வருகிறவர்கள் பெண்ணைச் சுடிதாரில் பார்க்க மாட்டார்களா என்ன?'' என்று அவள் எப்போதோ சொன்னதையே திருப்பிச் சொன்னான்.

மெல்லிய புன்னகையைப் பூத்தவள் அவனுக்குச் செல்லமாக ஒரு அடியைத் தந்துவிட்டுத் தன்னறைக்குக் கிளம்பினாள்.

அவள் செல்லமாக அடித்ததையும், அதை புன்முறுவலுடன் மதுபாலன் ஏற்றுக் கொண்டதையும் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மாதவி.

பத்து நிமிடத்தில் சுடிதாரில் திரும்பி வந்தாள் மகிஷா. அவள் சுடிதாருக்கு மாறியதைக் கண்டதும் கலையமுதனின் முகத்தில் மெல்லிய ஏமாற்றம் ஒன்று பரவியது. அதை மகிஷாவும் கவனித்தாள்.

''ஒரு நல்ல நாள் பார்த்துவிட்டு அன்றைக்கு நிச்சயம் செய்து கொள்ளலாம்'' எனக் கூறியவர்கள் கிளம்புவதற்கு ஆயத்தமானார்கள்.

மனமேயின்றி எழுந்த கலையமுதன் மகிஷாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். அதைக் கவனித்துவிட்ட மதுபாலன் மகிஷாவின் அருகில் வந்தான்.

''என்ன மகி... உன் ஆளுக்கு உன்னை விட்டு விட்டுச் செல்ல மனம் வரவில்லையா? உன்னையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு செல்கிறான்.

விட்டால் இன்றே கையோடு உன்னைத் தாலி கட்டி அழைத்துச் சென்று விடுவான் போல! விஸ்வாமித்திரனா இருந்தவனை காதலித்து கடைசியில் நீ மேனகாவாகி விட்டாயே'' என்றான்.

''ச்சீ... போடா!'' என்றவள் அவனை அடிக்க கை ஓங்க அவனோ கலகலவெனச் சிரித்தபடி அவளிடமிருந்து விலகி நின்றான்.

காரில் ஏறி அமர்ந்த மாதவி இவர்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அம்மாவின் பார்வையை அவள் அருகே அமர்ந்திருந்த கலையமுதனும் கண்டு கொண்டான்.

''அம்மா... அவர்கள் இருவரையும் பார்த்து விட்டுத் தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள்! அவர்கள் ட்ரூ ப்ரண்ட்ஸ்!'' என்றான் அவசர அவசரமாக.

''ச்சே! ச்சே! அது இல்லை கண்ணா. அந்தப் பையனைப் பார்த்தாயா. எப்படி துறுதுறுன்னு இருக்கான்! ஏன் இவனையே உன் தங்கச்சிக்கு பார்க்கக் கூடாது?'' என்றாள்.

''நானும் கூட அதைத்தான் யோசித்தேன் அம்மா! உங்களுக்குச் சம்மதம் என்றால் நானே தங்கச்சியிடம் பேசிச் சம்மதம் வாங்குகிறேன்!'' உற்சாக மிகுதியுடன் கூறினான் கலையமுதன்.

(ப்ரண்ட்ஸ்... இங்கேதான் விதி நம்பர் ஒன்று விளையாடி விட்டது.)

★ ★ ★

மதுபாலனின் நண்பன் ஒருவனுக்கு மும்பையில் திருமணம் அதற்காக அவன் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தான். அவனைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு இம்சித்துக் கொண்டிருந்தாள் மகிஷா.

''அவன் என்ன உனக்கு அவ்வளவு குளோஸ் ப்ரெண்டா?''

''இல்லை!''

''பிறகு ஏன் மும்பை வரை செல்ல வேண்டும்? ஒரு வாழ்த்து அட்டை வாங்கி அனுப்பினால் போதாதா?''

''இல்லை. நான் நேரில் செல்ல வேண்டும்!''

''ஏன்? அவன்தானே நீ ஸ்கூல் படிக்கும்போது அவன் செய்த தவறை உன் மீது போட்டான்? அப்படிப்பட்ட துரோகி நண்பன் திருமணத்திற்கு நேரில் செல்ல வேண்டுமா?'' கோபமாகக் கேட்டாள் மகிஷா.

''ஆமாம் மகி! அவன்தான் நட்பு என்றால் என்னவென்று புரிய வைத்தவன்.

''ஏன் மகி உனக்கு நட்பு என்றால் என்னவென்று தெரியுமா?''

''ம். தெரியும். நட்பு என்பது ஒரு புனிதமான உறவு.''

''இல்லை. நீ சொல்வது தவறு. நட்பு என்பது ஒரு சிக்கலான உறவு. நம்முடைய அப்பா, அம்மா நல்லவர்களா? கெட்டவர்களா? என்பதை சில வருடங்களில் நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் நண்பர்களில் யார் நல்லவர்கள்? யார் கெட்டவர்கள்? என்பதை யாராலும் சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாது. இந்த உலகில் நண்பர்களால் உயர்ந்தவர்கள் இரண்டு பேர் என்றால் நண்பர்களால் கெட்டவர்கள் எட்டு பேர். இந்த உலகில் நண்பர்கள் இல்லாதவர்கள் கூட இருக்கலாம். ஆனால் பொய் நண்பனால் சிறு ஏமாற்றத்தையாவது சந்திக்காதவர்கள் இருக்கவே முடியாது.

ஒருவனை அவனின் பல மெய் நண்பர்கள் சேர்ந்து உச்சி மலையில் ஏற்றி விடுவார்கள். ஆனால் ஒரே ஒரு பொய் நண்பன் அவனை அதள பாதாளத்தில் தள்ளி விட்டு விடுவான்.

இந்த உலகில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஒரு பொய்யான நண்பனைப் பற்றிய ஒரு அனுபவம் இருக்கும். எனக்கும் அப்படியொரு அனுபவத்தைத் தந்தவன் அவன். நான் அந்த ஒரு ஏமாற்றத்தைச் சந்தித்த பிறகு இதுநாள் வரை அப்படி ஒரு ஏமாற்றத்தைச் சந்திக்காமல் இருக்கக் காரணம் அன்று அவன் கற்றுத் தந்த அனுபவ பாடம்தான்!''

''அப்படியென்றால் நான் உந்தன் உண்மையான தோழியா? அல்லது பொய்யான தோழியா?''

கேட்டவளின் அருகே வந்தவன் அவளின் தலையைப் பிடித்து அவள் நெற்றியில் தன் நெற்றியை மோதினான்.

''நீ என்னுடைய ஹண்ட்ரட் பர்சண்ட் மெய் தோழி! இதைச் சொல்வது என் மனம் மட்டுமல்ல. என் மூளையும் கூடத்தான்!''

''அப்படியென்றால் கலையமுதன்?''

''நீ என்னுடைய ஹண்ட்ரட் பர்சண்ட் மெய் தோழி! உன்னிடம் பொய் சொல்லக்கூடாது. அவன் எனக்கு நைன்ட்டி பர்சண்ட் நண்பன். மீதி டென் பர்சண்ட் எப்படியென்பதை காலம்தான் சொல்ல முடியும். சரி. எனக்கு ட்ரெயினுக்கு டைம் ஆச்சு. நான் போய் விட்டு வருகிறேன்!'' என்றவன் உடனே புறப்பட்டுச் சென்று விட்டான்.

* * *

மதுபாலன் மும்பைக்குச் சென்ற பிறகு மகிஷா விற்கு நேரம் நத்தை வேகத்தில் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

இவளின் தனிமையைக் கலையமுதன் மானசீக மாக அறிந்து விட்டான் போல!

அன்று பிற்பகல் வேளையில் மகிஷாவின் வீட் டிற்கு வந்தான். அவனைக் கண்டதும் புன்னகை பூத்த மாதரசி அவனை உள்ளே அழைத்து அவனுக்கு மிகவும் பிடித்த மாதுளம் ஜூஸை தந்தாள்.

இந்த இடைப்பட்ட நாட்களில் மகிஷாவின் வீட்டில் ஒருவனாகி விட்டான் கலையமுதன். அவனை மாதரசிக்கும் மிகவும் பிடித்திருந்தது.

''என்னப்பா இந்த நேரத்தில் வந்துள்ளாய்?''

ஆச்சரியத்துடன் வினவினாள் மாதரசி.

''அது வந்து ஆன்ட்டி... அம்மா மகிஷாவைப் பார்க்க வேண்டும் போல் இருக்கு. நீ சென்று அழைத்து வருகிறாயா?' எனக் கேட்டார்கள். அதனால்தான்...'' என்று மெல்லிய தயக்கத்துடன் கூறினான்.

கலையமுதனின் வீட்டிற்கு ஏற்கனவே பெரிய வர்கள் மட்டும் சென்று பார்த்து வந்திருந்தாலும் கூட இன்றைக்கு அங்கே மகிஷாவை அனுப்புவதில் லேசாகத் தயக்கமாகவே இருந்தது மாதரசிக்கு ''கல்யாணம் முடிவதற்கு முன்பு அவள் அங்கே யெல்லாம் வருவது சரியில்லை அமுதா!''

தன் மனதிலிருந்ததை வெளிப்படையாகச் சொல்லி விட்டாள் மாதரசி.

''என்ன ஆன்ட்டி நீங்க இந்தக் காலத்தில்கூட இப்படி நினைக்கின்றீர்கள்? திருமணம் முடிந்த பிறகு அவள் எங்கள் வீட்டிற்கு வந்தால் 'ஏதோ ஒரு புது இடத்தில் மாட்டிக் கொண்டோமா?' என்றுதான் தோன்றும். ஆனால் இப்போதே எங்களின் வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருந்தால் திருமணம் முடிந்த பிறகு அவளுக்கு எங்கள் வீட்டில் இருக்க எந்தச் சங்கடமும் ஏற்படாது!''

அவன் இவ்வளவு கூறிய பிறகும் மாதரசி யோசனை யிலயே ஆழ்ந்திருந்தாள்.

''ஆன்ட்டி உங்களுக்குப் பயம் என்னை நினைத்தா? பயப்படாதீர்கள். வீட்டில் என்னுடன் அம்மா

இருக்கிறார்கள். சர்வண்ட்ஸ் இருக்கிறார்கள். உங்களுக்கு இதற்கு மேலும் என் மீது நம்பிக்கை வரவில்லையென்றால்...''

''ச்சே... ச்சே! அப்படியெல்லாம் இல்லப்பா! நீ அவளை அழைத்துக் கொண்டு போ..!'' என்றவள் உள் பக்கம் திரும்பி,

''மகிஷா...!'' என அழைத்தாள்.

கலையமுதன் வீட்டிற்கு வந்ததையும், அவனும் மாதரசியும் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்ததையும் தன் அறையிலிருந்து இவ்வளவு நேரமாக கேட்டுக் கொண்டிருந்த மகிஷா கலையமுதனின் வீட்டிற்குச் செல்லத் தயாராகியே வந்தாள்.

''இருட்டுவதற்கு முன்பு இவளைக் கூட்டி வந்து விடு அமுதா!'' என்ற மாதரசியிடம்,

''கண்டிப்பாக ஆன்ட்டி!'' என்றவன் மகிஷாவை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

* * *

கலையமுதனின் வீடு மினி பங்களா போலக் காட்சியளித்தது. வாசலில் நின்றிருந்த கூர்க்கா கலையமுதனைக் கண்டதும் சல்யூட் அடித்தான்.

அவன் பைக்கை நிறுத்தியதும் கீழிறங்கிய மகிஷா.

''உங்க அப்பா என்ன செய்றார்?'' என்றாள்.

அவள் ஏன் கேட்கிறாள் என புரிந்து கொண்டவன்,

''மார்பிள் பிஸ்னெஸ்!'' என பதிலளித்தான்.

அவனைச் சந்தேகமாகப் பார்த்தவள்,

''நீங்கள் ஏன் அவருக்கு உதவி செய்யாமல் கல்லூரியில் லெக்சரராக இருக்கிறீர்கள்?'' என்றாள்.

''மை ஆன்சர் இஸ் வெரி சிம்பிள்! டீச் பண்றது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு! மனிதர்களுக்கு முக்கியமானவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம்.. இதில் நான் மூன்றாவது இடத்தில் இருக்கிறேன். இதில் எனக்கு சந்தோஷம் மட்டுமல்ல நிம்மதியும் கூட!'' என்றவன் அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

மகிஷாவைக் கண்டதும் முகம் மலர்ந்த மாதவி அவளை அழைத்து அமர வைத்து உபசரித்தாள்.

மகிஷாவை மாதவியின் அருகில் விட்டுவிட்டு தன் அறைக்குச் சென்று விட்டான் கலையமுதன். அதன் பிறகு வெகு நேரம் ஆகியும் அவன் வெளியே வரவேயில்லை. அது மகிஷாவிற்கு சிறிது வருத்தத்தை அளித்தது.

''போரடிக்குதா மகிஷா? நீ வேண்டுமானால் இந்த வீட்டைச் சுற்றிப் பாரேன்!'' என்றாள் மாதவி.

மகிஷா தயங்கியபடியே நிற்கவும்,

''ரிலாக்ஸா இரு மகிஷா! என்றைக்கு இருந்தாலும் இந்த வீட்டின் எஜமானி ஆகப் போகிறவள் நீதான்! இங்கே உனக்கு எல்லாவித உரிமையும் உண்டு!''

என்ற மாதவி அவளை முதலில் மாடிக்கு அனுப்பி வைத்தாள்.

தயங்கியபடியே சென்ற மகிஷா அங்கிருந்த ஒவ்வொரு அறையையும் பார்த்துவிட்டு கடைசியாக இருந்த அறைக்கு வந்தாள். திறந்திருந்த கதவைத் தயங்கிய படியே தள்ளிக் கொண்டு உள்ளே சென்றாள்.

அந்த அறை இதுவரை அவள் பார்த்த எல்லா அறையையும் விட இரண்டு மடங்கு பெரிதாக இருந்தது.

சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்த மிகப் பெரிய போட்டோவில் ஒரு நவநாகரீக மங்கை கால் மேல் கால் போட்ட வண்ணம் அமர்ந்திருந்தாள். அவள் கலையமுதனின் தங்கை எனப் புரிந்து கொண்ட மகிஷா அறையைச் சுற்றி பார்வையை ஓடவிட்டாள்.

அங்கிருந்த பொருட்கள் அனைத்திலுமே அவர்கள் வீட்டின் செல்வச் செழிப்பே தெரிந்தது.

அவற்றை பிரமிப்புடன் பார்த்தவள் அந்த அறையின் கதவைச் சாத்திக் கொண்டு கீழே வந்தாள்.

10

மாதவி கிச்சனில் ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டவள் அமைதியாக அடுத்த அறையை நோக்கிச் சென்றாள்.

ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டே சென்றவள் ஓரிடத்திற்கு வந்ததும் வியப்பில் கண்களை விரித்து நின்று விட்டாள்.

மினி ஜிம்மாக இருந்த அந்தக் கூடத்தை அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அங்கு பயிற்சியில் ஈடுபட்டிருந்த கலையமுதனும் இவளைப் பார்த்து விட்டான்.

உடனே பயிற்சியை நிறுத்திவிட்டு இவளைப் பார்த்தவன்,

''உள்ளே வா மகிஷா!'' என்றான்.

அவள் அடி மீது அடி வைத்து உள்ளே சென்றாள். கலையமுதனும் பயிற்சி செய்வதை விட்டு விட்டு அங்கிருந்த இருக்கை ஒன்றில் சென்றமர்ந்தான்.

உள்ளே வந்தவளை,

''இப்படி உட்கார்..!'' எனக் கூறி எதிர் இருக்கையை கைக் காட்டியவன், தூவாலையால் முகத்திலிருந்த வியர்வையைத் துடைத்தான்.

அவன் அணிந்திருந்தது ஒரு கையில்லாத பனியன். அதுவும் வியர்வையால் நனைந்து அவன் உடம்போடு ஒட்டிக் கிடந்தது. அவனை அந்த நிலையில் பார்க்க வெட்கப்பட்ட மகிஷா, தலைகுனிந்தபடி அவன் கைக்காட்டிய இருக்கையில் அமர்ந்தாள்.

அவளின் வெட்கத்தை ரசித்தவன், அவளின் வெட்கத்திற்கான காரணம் புரிந்ததும் விஷமமாகப் புன்னகைத்தான்.

''மகிஷா... மகிஷா... கொஞ்சம் எழுந்து என் பக்கத்தில் வாயேன்!'' என்றான் அவசரக் குரலில்.

''என்னவோ?'' என்று எழுந்தவள் அவன் அருகில் சென்று,

''என்ன வேண்டும்?'' என்றாள்.

''இன்னும் கொஞ்சம் பக்கத்தில் வா! ஒரு அர்ஜென்ட்!'' என அவன் பரபரப்பு குறையாமல் கூறவும், மகிஷா ஒண்ணும் விளங்காதவளாக அவனை மேலும் நெருங்கினாள்.

தன் அருகில் வந்தவளை இடையோடு வளைத்தவன் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

''என்... என்ன... பண்றீங்க?''

அவனின் இரும்புப் பிடியிலிருந்து விடுபட முடியாமல் கேட்டாள் மகிஷா.

''ஸ்... சத்தம் போடாதே! என் கேள்வி ஒன்றிற்கு பதில் சொல்... உடனே உன்னை விட்டு விடுகிறேன்!'' என்றவன் அவளை மேலும் தன்னோடு இறுக்கினான்.

அவன் துடைக்காமல் விட்டிருந்த கழுத்திலிருந்த வியர்வை கொஞ்சம் கொஞ்சமாக மகிஷாவை நனைத்துக் கொண்டிருந்தது.

''என்ன கேட்க வேண்டும்?''

''அன்றைக்கு நீதானே சொன்னாய், உலகத்தில் சிறந்த நறுமணம் மனிதனின் வியர்வை நறுமணம் தான் என்று!''

''ஆமாம் சொன்னேன்!''

''அப்படியென்றால் இதையும் சொல். என் வியர்வையின் நறுமணம் எப்படியுள்ளது என்று?''

''நான் சொன்னது உழைக்கும் மனிதர்களின் வியர்வையைப் பற்றி! உங்களைப் போல ஜிம்மில் உழைப்பவர்களின் வியர்வையைப் பற்றி அல்ல! வியர்வைத் துளிகளை மண்ணிற்குக் காணிக்கையாக்கி உழைக்கிறானே, விவசாயி.. அவனின் வியர்வை நறுமணம் சிறந்தது!

மற்றவர்கள் குடியிருக்க வீடு கட்டுகிறானே, கொத்தனார். அவனின் வியர்வை நறுமணம் சிறந்தது! மனிதர்களின் மானம் காக்க தறியில் துணி நெய்கிறானே... அவனின் வியர்வை நறுமணம் சிறந்தது!

மழை, வெயில் பாராமல் நாட்டிற்காக உழைக்கும், இராணுவ வீரன், அவனின் வியர்வை. நறுமணம் சிறந்தது! இரவு, பகல், பாராமல் குற்றங்களைத் தடுத்து நிறுத்தும், போலீஸ்காரன். அவனின் வியர்வை நறுமணம் சிறந்தது!

ஆனால் நீங்கள் உங்கள் உடம்பிலுள்ள கொழுப்பைக் கரைக்கவோ, அல்லது உங்களின் உடம்பைக் கட்டுக் கோப்பாக வைத்துக் கொள்ளவே ஹார்ட் ஒர்க் செய்கிறீர்கள்!''

''அப்படியா?'' என்றவன் தன் கைகளைத் தளர்த்தினான். ஆனால் உடனே அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டவன்,

''நீ சொல்வதை நானும் ஒத்துக் கொள்கிறேன் ஸ்வீட்டி! ஆனால் நீ உன் லிஸ்டில் இரண்டு பேரை விட்டு விட்டாய்! பர்ஸ்ட், தன் தொண்டைத் தண்ணீர் வற்றும் அளவுக்கு மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தரும் ஆசிரியன், இரண்டாவ'து, தன் துணைக்காக மட்டும் உடலை கட்டுக் கோப்பாக வைத்துக் கொள்பவன்! இந்த இரண்டுமே.. எனக்கும் பொருந்தும்! ஸோ நீ பதில் சொல்லவில்லையென்றால் ஒரு மணி நேரம் ஆனாலும் கூட உன்னை விட மாட்டேன்!'' என்றான்.

''ச்சீ! இதெல்லாம் சீட்டிங்ப்பா! உங்க உடல் பலத்தால் என்னைச் செயலிழக்க வைத்துக் கேள்வி கேட்பது சரியில்லை!''

அவள் கூறவும் சட்டென அவளை விட்டு விட்டான் கலையமுதன்.

அவனின் வியர்வையால் நனைந்திருந்த தன் சுடிதாரைக் கண்டவள் அவனைப் பொய்யாக முறைத்து,

''இப்படியே என்னை அத்தை பார்த்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?'' என்றாள்.

''ம். என்ன நினைப்பாங்க? நீயும் ஜிம்மில் ஹார்ட் ஒர்க் செய்ததாக நினைப்பார்கள்!''

''பொய் சொன்னாலும் பொருந்தும்படிச் சொல்ல வேண்டும். முகத்தில் ஒரு பொட்டு வியர்வையில்லை! இதைப் பார்த்தாலே அவர்களுக்குப் புரியாதா? நான் போகிறேன்!'' என்றவள் வெளியே செல்ல முயல, அவள் பின்னாலயே எழுந்து வந்த கலையமுதன் நடந்து சென்றவளின் கையைப் பிடித்து இழுத்து அவளைச் சுவற்றில் சாய்த்தான்.

''என்ன பண்ணுகிறீர்கள்? விடுங்கள். நான் போகிறேன்...'' என நழுவ முயன்றவளை இருபுறமும் கைகளால் அரண் அமைத்துத் தடுத்து நிறுத்தினான்.

''இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்?''

''உனக்கு நம்முடைய பர்ஸ்ட் மீட் நினைவில் உள்ளதா?''

''ம்!''

''அன்றைக்கு நீ ஏன் பாலாவிடம் அழுதாய்?''

''அ.. அ.. அது வந்து!''

''நோ ஸ்வீட்டி! என்கிட்ட திக்கக் கூடாது. சரி சொல்லு, எனக்கு நீ எத்தனை மார்க் போடுவாய்?''

''நான் போகணும். அத்தை தேடுவாங்க!''

''ம்ப்ச்! நழுவப் பார்க்காதே! எனக்கு பதில் சொல்லிட்டுப் போ! சரி நீ கொஞ்சம் நேராக தன் கண்களைப் பார்த்துப் பேசேன்!''

'மாட்டேன்' எனத் தலையாட்டியவளின் முகத்தை நிமிர்த்தியவன்,

''ப்ளீஸ்! என் கண்களைப் பார்த்துப் பேசு!'' எனக் கெஞ்சினான்.

நாணத்தோடு அவனின் அகன்ற விழிகளை நிமிர்ந்து பார்த்தாள்.

''மகிஷா. உனக்கு ஒரு விசயம் தெரியுமா? கடந்த எட்டு வருசமாக நான் என்னையே வெறுத்தபடிதான் வாழ்ந்து கொண்டிருந்தேன். இந்த எட்டு வருசத்தில் நான் ஒரு பெண்ணைக் கூட உற்றுப் பார்த்தது கிடையாது. எந்தப் பெண்ணிடமும் தேவையில் லாமல் பேசியது கிடையாது.

உலகத்தில் என் அம்மாவையும், என் தங்கையை யும் தவிர வேறு யாரும் பெண்களே கிடையாது என்றுதான் நினைத்திருந்தேன்.

இந்த ஜிம் - என் அப்பா எனக்காக என் சிறு வயதில் உருவாக்கியது. ஆனால் இந்த எட்டு வருசமாக இந்தத் திசையைக் கூட நான் எட்டிப் பார்க்கவில்லை. அந்த அளவிற்கு எனக்கு என் மீதே வெறுப்பு! என் உடம்பின் மீது வெறுப்பு!

ஆனால் என்றைக்கு நான் உன்னைப் பார்த்தேனோ அன்றைக்கே என் நினைப்பு மாறிவிட்டது. முதல் பார்வையிலேயே என் மனதை வசீகரித்தவள் நீதான்! நீ என் வாழ்க்கையில் வந்த வசந்தம், நீ என் வாழ்க் கையில வந்த பிறகே நான் மீண்டும் என் வாழ்க் கையை ரசிக்க ஆரம்பித்தேன். நீ என் தேவதை, உன்னால்தான் என் வாழ்க்கை மீண்டும் பூ பூக்க

ஆரம்பித்தது. ஐ லவ் யூ ஸோ மச்!'' என்றவன் தன் சுண்டு விரல் கொண்டு அவளின் கன்னத்தில் கோலம் வரைய ஆரம்பித்தான்.

அவன் தீண்டலில் சிலிர்த்தவள்,

''நீங்க ரொம்ப நல்லவர்ன்னு நான் நினைத்தேன்!'' என்றாள்.

அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தவன்,

''ஹேய் ஸ்வீட்டி! ஒரு காதலி தன்னுடைய காத லனை நல்லவன் என நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால் அவர்களின் காதல் சுத்த சைவம் என்று அர்த்தம்! ஆனால் நம் காதல் அப்படியல்ல!'' என் றான்.

''இப்படியெல்லாம் பேசுகின்ற உங்களுக்கு யார் விஸ்வாமித்திரன் என பெயர் வைத்தது?''

''சரி... இனிமேல் வேண்டுமானால் ரதிதேவன் என பெயர் வைத்துக் கொள்ளலாமா?''

''ச்சீ!''

''ஸ்வீட்டி உனக்கொரு விசயம் தெரியுமா? ஒரு பெண் காதலனிடம் 'ச்சீ' சொல்லக்கூடாது. அதுவும் அதை உன்னைப் போல் வெட்கப்பட்டுக் கொண்டு சொல்லவே கூடாது. ஆனால் நீயோ வெட்கப்பட்டுக் கொண்டே 'ச்சீ' என சொல்லி விட்டாய். எனக்கு இப்போது ஏதாவது விஷமம் பண்ண வேண்டும் எனத் தோன்றுகிறது!'' என்றவன் அவளின் இதழ் நோக்கிக் குனிந்தான்.

''ச்சீ!'' என்றவள் அவனைத் தள்ளி விட்டு விட்டுச் செல்ல முயல,

''எங்கே ஓடப் பார்க்கிறாய்?'' என்றவன் அவளை இழுத்தணைத்துத் தான் செய்ய நினைத்ததைச் செய்துவிட்டுப் பிறகு அவளை விடுவித்தான்.

''ச்சீ... நீங்க ரொம்ப மோசம்!'' எனக் கூறி அழகாக வெட்கப்பட்டவளைப் பார்த்துக் கண்ணடித்த கலையமுதன் அவளின் தோளில் கைபோட்டபடி வெளியே அழைத்துச் சென்றான்.

''என்னை விடுங்க...!'' எனக் கூறி அவனிட மிருந்து விலகி நடந்தவள்,

''மேலே ஒரு ரூமில ஒரு பொண்ணோட போட்டோ பார்த்தேன். அது தான் உங்க - தங்கையா?'' எனக் கேட்டாள்.

''ஆமாம் மகிஷா! அவள் தான் என் தங்கை இளவரசி! அவள் பெயர் மட்டும் இளவரசி அல்ல, அவளை நாங்கள் கவனித்துக் கொள்வதும் இளவரசியை போலத்தான்! இதுவரையிலும் அவள் கேட்டு எதையும் நாங்கள் வாங்கித் தராமல் இருந்த தில்லை! அவள் எங்க வீட்டின் செல்ல இளவரசி!

''இப்போது அவங்க எங்கே?''

''ஹேய் மகிஷா, பரவாயில்லை, அவள் பெயர் சொல்லியே அழை! அவளுக்கும் உன் வயது தான்! அவள் ஒரு ஸாப்ட்வேர் இன்ஜினீயர்! ஒரு கான்

பரன்ஸுக்காக டெல்லிக்கு போயிருக்கிறாள். இன்னும் இரண்டொரு நாளில் வந்து விடுவாள்!''

''ஓகோ? ஆனால் அவங்க ரொம்ப அழகா இருக் காங்க!''

''மகிஷா அழகு என்ற வார்த்தைக்கான அர்த்தமே என் அகராதியில் வேறு! இந்த உலகில் முக அழகு உள்ளவர்கள் அனைவருக்குமே அகம் அழகாக இருந்து விடவில்லை. அதே போல் அக அழகு உள்ள வர்கள் அனைவருக்குமே முகம் அழகாக அமைந்து விடவில்லை. முகம், அகம் - இரண்டுமே அழகாக அமைய பெற்றவர்கள் இந்த உலகில் மிகச் சொற் பமே!''

''அப்படியென்றால் உங்களுக்கு ஏன் என்னை பிடித்துள்ளது?''

''உன் அழகுக்காகத்தான் நான் உன்னை லவ் பண்றேன்னு நீ நினைத்தால் அது உன்னுடைய தவறு! ஏனெனில் எனக்கு உன்னிடம் உள்ள பல விசயங்கள் பிடித்துள்ளது. மெயின் காரணத்தை நேரம் வரும் போது சொல்கிறேன். சில குட்டி குட்டிக் காரணங்களை இப்போது சொல்கிறேன்.

நான் யார்ன்னு தெரியாமல் என்னிடமே என்னை பற்றி கமெண்ட் செய்தாயே, அந்த தைரியம் பிடித் துள்ளது. என் பார்வை உன் கழுத்துக்கு கீழ் செல் வதைக் கண்டதும் ஓடிச் சென்று துப்பட்டா அணிந் தாயே. அந்த தற்காப்பு பிடித்துள்ளது. நான் உற்று

பார்ப்பது தெரிந்ததும் தூக்கத்திலிருந்து விழித்தெழந் தாயே, அந்த உன் உள் உணர்வில் எச்சரிக்கை பிடித்துள்ளது.

நான் உன்னைப் பற்றித் தவறாக நினைத்த விடுவேனோ என்று பாலாவிடம் அழுதாயே, அந்த பயம் பிடித்துள்ளது. ஒரு சின்ன ஊசிக்காகவே சிறு குழந்தை போல் அடம் பிடித்தாயே, அந்தக் குழந்தை தனமான செய்கை பிடித்துள்ளது.''

அவன் மேலும் அடுக்கிக் கொண்டு செல்வதைக் கண்டவள்,

''போதும், போதும், நிறுத்துங்க!'' என்றாள்.

''ஓகே! நிறுத்துக்கிறேன், நீ சொன்னதால் அல்ல! அம்மா நம்மை கவனித்து விட்டதால்!'' என மெல்லிய குரலில் கூறியவன் தன் அன்னையின் அருகே சென்றான்.

''அம்மா, உங்க மருமகளோடு பேச வேண்டிய தெல்லாம் பேசி முடித்து விடுங்கள். இன்னும் பிப்டின் மினிட்ஸ் தான் டைம். அதற்குள் நான் ரெடியாகி வந்து விடுவேன். அவளை அவளின் வீட்டில் கொண்டு சென்று விட வேண்டும்!'' என்றான்.

''டின்னர் சாப்பிட்ட பிறகு போகட்டுமே கலை!''

''வேண்டாம்மா! அவங்க அம்மா இப்போது பலமுறை தயங்கி தான். அவளை என்னோடு அனுப்பி வைத்தார்கள். சரி. நான் சென்று ரெடியாகி

வருகிறேன் அம்மா!'' என்றவன் வேகமாக தன் அறை நோக்கிச் சென்றான்.

11

சொல்லி சென்றது போலவே பதினைந்து நிமிடத்தில் ரெடியாகி வந்தான் கலையமுதன்.

மகிஷாவும் மாதவியிடம் சொல்லி விட்டு கலை யமுதனுடன் வீட்டிற்குப் புறப்பட்டாள்.

* * *

நண்பனின் திருமணத்தில் கலந்துக் கொண்ட மதுபாலன் ஊருக்குத் திரும்புவதற்காக மும்பையில் ட்ரெயின் ஏறி அமர்ந்தான்.

ட்ரெயின் புறப்பட சில நிமிடங்கள் இருக்கும் போதே ட்ரெயினில் ஏறி அமர்ந்து விட்டவன். ஏதேச்சையாக ஜன்னல் வழியாக தன் பார்வையை செலுத்திய போதுதான் அவன் கண்களில் விழுந்தாள் அவள்.

தன் தோழிகளுடன் நின்று பேசிக் கொண்டிருந்த வளை தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தான் மதுபாலன்.

வண்டி புறப்படுவதற்கான அனவ்ன்ஸ்மெண்ட் அறிவிக்கப் படவும், அவன் ஏறியிருந்த அதே பெட்டியில் ஓடி வந்து ஏறினாள் அவள்.

தன் பெர்த் நம்பரை பார்த்துக் கொண்டே வந்தவள் மதுபாலனின் எதிர் பெர்த்திலேயே அமர்ந்தாள்.

மதுபாலனை கண்டு சினேகமாக புன்னகைத் தவள்.

''சென்னையா?'' என்றாள்.

''ம்'' என தலையாட்டியவனிடம்.

''நானும் சென்னை தான்!'' என்றாள்.

அவன் அமைதியாகவே வரவும் மீண்டும் அவளே.

''சென்னையில் என்ன செய்றீங்க?'' என்றாள்.

மதுபாலன் தான் வேலை செய்யும் கல்லூரியைப் பற்றிக் கூறினான்.

''அப்படியா? ஓகே! யுவர் ஸ்வீட் நேரம் ப்ளீஸ்?''

''மதுபாலன்!''

''வாவ், பேருலயே போதையா? ஆனால் எனக்கு ஹாட் டிரிங்க்ஸ் எதுவும் பிடிக்காதே! ஸோ வாட்? ஐ வெரி லைக் யுவர் நேம்!''

பல நாள் பழகியது போல் பேசிக் கொண்டிருந் தவளை கண்டு ஒன்றும் புரியாதவனாக விழித்தான் மதுபாலன்.

பல நிமிட யோசனைகளுக்கு பிறகு கேட்டான்.

''உங்க பெயர் என்ன?''

''ஹப்பா. இப்போதாவது கேட்டீங்களே! சரி நீங் களே சொல்லுங்கள், என்னை பார்த்தால் உங்களுக்கு

எப்படித் தெரியுது? மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லுங்கள்!''

''அது வந்து, உண்மையிலேயே உங்களைப் பார்த் தால் ஒரு பிரின்ஸஸ் மாதிரி தெரியுது!''

''ஓ கிரேட்! அப்படியென்றால் என்னை அப்ப டியே கூப்பிடுங்கள்!''

''இவள் எந்த மாதிரியான பெண்?'' எனக் குழம்பி யவன்,

''நீ, நீங்க என்ன பண்றீங்க?'' என்றான்.

''ம். இதுவரையிலும் எதுவும் பண்ணல. இப்போது தான் பண்ணலாமான்னு யோசித்துக் கொண்டிருக் கிறேன். ஐ மீன் உங்களை லவ் பண்ணலாமா? வேண்டாமா?ன்னு!''

(நம்முடைய ப்ரெண்ட் மதுபாலன் இந்த இடத்தில் க்ளீன் போல்ட்ன்னு சொன்னால் நீங்க ஒத்துக் கொண்டே ஆகணும் ப்ரெண்ட்ஸ்!)

''எ. எ. என்ன. சொன்னீங்க?''

அதிர்ச்சியும், வியப்புமாகக் கேட்டான் மதுபாலன்.

''ஹேய். ஈஸிப்பா! ஏன் இவ்வளவு டென்சன்? கண்டிப்பாக ட்ரெயினை விட்டு இறங்குவதற்குள் சொல்லி விடுகிறேன். ஐ மீன் ஐ லவ் யூ எனும் வார்த் தையை!''

''நீ, நீங்க விளையாடவில்லையே?''

''ஹேய் மேன்! இதுல போய் யாராவது விளை யாடுவார்களா? எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு!

உங்களுக்கும் என்னை பிடிச்சிருக்குது. இது எப்படி தெரியும்ன்னு கேட்காதீங்க! ஏனென்றால் நான் உங்களின் கண்களை பார்த்தே கண்டு பிடித்து விட்டேன். ஸோ நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், எனக்கு வெட்டியாக டைம் வேஸ்ட் பண்ணப் பிடிக்காது! எதுவாகயிருந்தாலும் அப்போதே யோசித்து அப்போதே முடிவு செய்து விட வேண்டும்.

எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருக்கு! இருந்தாலும் அதை நீங்களே சொல்லி விட்டால் ரொம்ப சரி. பிடிக்கவில்லை யென்றாலும் சொல்லி விடுங்கள். நோ ப்ராப்ளம்! நான் உங்களை மறந்துட்டு வேற ஆளையெல்லாம் தேட மாட்டேன்! மீரா கிருஷ்ணன் மாதிரி ட்வெண்டி ஃபோர் ஹவர்ஸ் உங்களையே நினைத்துக் கொண்டு இப்படியே கிழவி ஆகிவிடுவேன்!''

''நோ. நோ. எனக்கும் உங்களை ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு!'' அவசர அவசரமா ஒப்புவித்தான் மதுபாலன்.

(ப்ரண்ட்ஸ்... இந்த இடத்தில் விளையாடிக் கொண்டிருப்பது விதி எண்! இரண்டு)

(ஒரு பெண்ணை பார்த்ததும் அவள் யார்; என்ன என்று கூட விசாரிக்காமல் வாயை விட்டு விட்ட... ஐ மீன் வார்த்தையை விட்டு விட்ட மதுபாலன் இதற்கான தண்டனை கண்டிப்பாக அடைந்தே தீருவான் என்று சொல்வது விதி அல்ல, நான் தான்.)

* * *

ட்ரெயினில் சந்தித்த தன் காதல் தேவதையை பற்றியே நினைத்துக் கொண்டு அந்த அதிகாலை வேளையில் வீட்டிற்கு வந்த மதுபாலனுக்கு வாசலி லேயே ஒரு மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

'வீடு மாறி வந்து விட்டோமா?' என யோசித் தவன்,

'இல்லையே! ஒரே காம்பவுண்ட்டிற்குள் கட்டப் பட்ட ஒரே மாதிரியான இரண்டு வீடுகள். மேலும் அடையாளத்திற்கு நானும், மகியும் சண்டை போட்டு உடைத்த பௌண்டன் கூட அப்படியே இருக் கிறதே!

அப்படியென்றால் இது யார்? இந்த அதிகாலை வேளையில் தலை குளித்து, புடவை உடுத்தி வாச லில் கோலம் போட்டுக் கொண்டிருப்பது? ஆன்ட் டியோ, அம்மாவோ இந்த நேரத்திற்கு குளிக்க மாட்டாங்களே! ஒரு வேளை வேலைக்காரி யாரை யாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா?' என சிந்தித்த படியே கோலம் போட்டுக் கொண்டிருந்த இடத்தை நெருங்கினான்.

தன் முன் வந்து நின்றவனை நிமிர்ந்து பார்த்தாள் மகிஷா.

''மகி நீயா?'' எனக் கேட்ட மதுபாலன் நெஞ்சில் கை வைத்தபடி பின்னால் சாய, அவசரமாக எழுந்த மகிஷா அவனைப் பிடித்து நிறுத்தினாள்.

''மகி, மகி, நீயா இது? உனக்கு என்னம்மா ஆச்சு? ஏதாவது பேய், பிசாசு, பிடித்து விட்டதா? அல்லது காத்து, கருப்பு அடித்து விட்டதா? இல்லை உனக்கு யாராவது பில்லி, சூனியம் வைத்து விட் டார்களா?''

''ச்சீ, ச்சீ! ஏன்டா இப்படி ஓட்டுகிறாய்?'' எனச் சலிப்புடன் கேட்டவளைப் பார்த்துச் சிரித்தவன் அப் போது தான் தரையைப் பார்த்தான்.

''ச்சே. வெறும் இரண்டு புள்ளி, இரண்டு வரி சையில் ஒரு கோலம் இதற்காகவா நான் இவ்வளவு பில்டப் கொடுத்தேன்? இப்படி ஒரு பில்டப் தந்த துக்கு வாசகர்கள் கையில் நான் கிடைத்தால் என்னை சாம்பார் வைத்து குடித்து விடுவார்கள். அதனால் நான் தூங்கச் செல்கிறேன்!'' என்றவன் அவசரமாக தன் வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

மாலை மணி நான்கு ஆன பிறகும் உறங்கிக் கொண்டிருந்த மதுபாலனை தட்டி எழுப்பினாள் மகிஷா.

''என்ன மகி?'' சோம்பலுடன் கேட்டவனிடம்.

''உன்னை பார்க்க கலையமுதன் வந்துள்ளார்! மொட்டை மாடியில் இருக்கிறார் உன்னை வரச் சொன்னார். நீ சென்று பேசிக் கொண்டிரு. நான் உங்களுக்கு காபி போட்டு எடுத்து வருகிறேன்!''

என்றவள், அங்கிருந்து மின்னல் வேகத்தில் சென்று மறைந்தாள்.

முகம் கழுவிக் கொண்டு மொட்டை மாடிக்கு வந்த மதுபாலன் சுற்று சுவரின் மீது அமர்ந்திருந்த கலை யமுதனின் அருகே சென்று அமர்ந்தான்.

''என்னடா அமுதா?''

''நான் நேராக விசயத்திற்கு வருகிறேன். உனக்கு என் தங்கையைத் தெரியுமா?''

''தெரியாது!''

''சரி. இப்போது சொல்கிறேன் கேட்டுக் கொள். அவள் பெயர்!''

''அமுதா ஒரு நிமிஷம். இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறாய்?''

''ஏனெனில் என் அம்மா உன்னை மருமகனாக்கிக் கொள்ள வேண்டுமென நினைக்கிறார்கள்!''

மதுபாலன் இப்படி ஒரு விபரீதத்தை எதிர்பார்க் கவேயில்லை.

''அமுதா. நானே உன்னிடம் சொல்லலாம் என நினைத்தேன். நான் மும்பையிலிருந்து வரும் போது ட்ரெயினில் ஒரு பெண்ணைப் பார்த்தேன். நான் அவளை லவ், லவ் பண்றேன்!''

''ட்ரெயினில் பார்க்கின்ற பெண்களை எல்லோரும் தான் லவ் பண்ணுவார்கள். நீ இதையெல்லாம் சீரியஸாக எடுத்துக் கொள்ளாதே!''

''இல்லை அமுதா! நான் அவளை நிஜமாக லவ் பண்றேன்!''

''நோ பாலா! நேரம் கடந்து விட்டது. என் தங்கை யிடம் உன்னைப் பற்றிய விசயங்கள் அனைத்தையும் சொல்லி விட்டேன். அவளும் உன் போட்டோவை பார்த்து உன்னைப் பிடித்திருப்பதாகச் சொல்லி விட் டாள்!''

''என்னிடம் கேட்காமல் இதையெல்லாம் ஏன் செய்தாய் அமுதா?''

''எல்லாம் உன் மேல் இருக்கும் நம்பிக்கையில் தான்! யாருக்குத் தெரியும். நீ இப்படி ட்ரெயினில் ஒரு பெண்ணை பார்த்ததும் காதலிப்பாய் என்று? சரி, அவளுடைய பெயர் என்ன?''

''ப்ரின்ஸஸ்!''

''இப்படியும் ஒரு பேரா?''

''நானாக வைத்த பெயர்!''

''அப்படியென்றால் உனக்கு அவளின் பெயர் கூடத் தெரியாது! பாலா நீ முதலில் உன் ட்ரீம் லைப்பி லிருந்து விழித்து ட்ரூ லைப்பை கொஞ்சம் பார். அவளுக்கு நீ வைத்த பெயர் ப்ரின்ஸஸ்... ஆனால் என் தங்கையின் நிஜ பெயரே இளவரசி! இவளின் பெயர் மட்டும் இளவரசி அல்ல! இவளே ஒரு இளவரசி தான்!

உன்னைப் பயமுறுத்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவள் ஆசைப்பட்டதை எதையும்

அடையாமல் விட்டது கிடையாது. அவளுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு! ஸோ நீ உன் மனதை மாற்றிக் கொள்வது தான் நம் அனைவருக்கும் நல்லது!''

''மனதை மாற்றிக் கொள் என்று உன் தங்கையிடம் சென்று கூறு அமுதா!'' என்று மதுபாலன் கோபமாக சொல்லிக் கொண்டிருக்கும்போதே காபி கோப்பை களுடன் மேலே வந்தாள் மகிஷா.

மகிஷாவை கண்டதும் மதுபாலனின் கோபம் அடங்கி விட்டது. ஆனால் கலையமுதனுக்கோ கோபம் எழுந்து விட்டது.

காபி கோப்பைகளை கொண்டு வந்து அவர்கள் இருவருக்கும் இடையே வைத்தவள்.

''மது, நீ ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்றாள்.

மதுபாலன் அமைதியாகவே இருக்கவும் கலை யமுதன்,

''அவன் ட்ரெயினில் ஒரு பெண்ணை மீட் பண்ணா னாம். அவளை சின்சியராக லவ்வும் பண்றானாம்!'' என்றான் வெறுப்புடன்.

அவன் சொன்ன வார்த்தைகளை மட்டும் கேட்டவள் அவன் வெறுப்புடன் கூறியதைப் பற்றி நினைக்க மறந்து விட்டாள்.

'மதுபாலன் ஒரு பெண்ணை விரும்புகிறான்' என அறிந்ததும் மகிஷாவிற்கு மகிழ்ச்சியில் தலை, கால் புரியவில்லை.

கைப்பிடி சுவரின் மீது அமர்ந்திருந்த மதுபாலனின் கழுத்தைக் கட்டிக் கொண்டவள்,

''என் மது ஒரு பொண்ணை லவ் பண்றானா? இதைக் கேட்கவே எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? டேய், மது அவள் என்னை விட அழகா? நீ லவ் பண்ணதற்காக ஒரு கிப்ட் கொடுத்தே ஆக வேண்டுமே!'' என்றவள் அவனின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டாள்.

ஏற்கனவே கோபத்தோடு அமர்ந்திருந்த கலையமுதனுக்கு மகிஷாவின் செய்கை மேலும் கோபத்தைத் தூண்டி விட்டது. கைப்பிடி சுவரிலிருந்து இறங்கியவன் மகிஷாவை வேகமாக தன்புறம் திருப்பி, அதே வேகத்தில் அவளின் கன்னத்தில் கரம் பதித்தான்.

''ஏய் அமுதா. என்ன பண்ற?''

கேட்டுக் கொண்டே அருகில் வந்த மதுபாலனை கை நீட்டி நிறுத்திய கலையமுதன்.

''எங்கள் இருவருக்கும் இடையில் நீ வராதே!'' என்றான் காட்டமாக.

கலையமுதன் எதற்காக தன்னை அறைந்தான் என்று மகிஷாவிற்கு இந்த நொடி வரையிலும் கூட சுத்தமாகப் புரியவில்லை.

அடிபட்ட கன்னத்தைத் தடவிக் கொண்டே,

''ஏன் என்னை அடித்தீர்கள்?'' என்றாள் வெகுளியாக.

''ஏன் உனக்கு நிஜமாகவே புரியவில்லையா? கட்டிக்க போகிற என் முன்னாடியே அவனை கட்டிப் பிடித்து, முத்தம் கொடுக்கிறாய். உன்னை அறையாமல் கொஞ்சச் சொல்கிறாயா?''

கலையமுதன் இதை சொன்னதுமே கோபத்தில் முகம் சிவந்த மகிஷா அவனின் சட்டைக் காலரை கொத்தாகப் பிடித்தாள்.

''என்ன சொன்னீர்கள்?'' என்றாள் ஆக்ரோஷமாக.

''மகி என்ன பண்ற? அவனை விடு!''

இடையில் புகுந்தான் மதுபாலன்.

''மது. நீ குறுக்கே வராதே! மீறி வந்தால் உன்னையும் பிச்சிடுவேன்!'' என்றவள் கலையமுதனின் புறம் திரும்பினாள்.

''உங்களின் கண்களுக்கு பசு மாட்டு பாலிற்கும், பன மரத்து கள்ளிற்குமான வித்தியாசம் தெரியவே தெரியாதா?

கட்டிப் பிடிக்கப்படும் அனைத்து இடத்திலும் காமம் தான் வாழ்கின்றது என நீங்கள் நினைத்தால் அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும். முத்தம் என்பது காம சல்லாபத்தில் தரப்படும் ஒரு விசயமாக மட்டும் நீங்கள் நினைத்தால் அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?''

''மகி, என்ன பேசுகிறாய்? முதலில் அவனை விடு!''

''மது நீ குறுக்கே வராதே!'' என்றவள் மீண்டும் கலையமுதனின் புறம் திரும்பினாள்.

''ஒரு தாய் கூடத்தான் தன் குழந்தையை கட்டிப் பிடித்து முத்தம் தருகிறாள். ஒரு தந்தை தன் மகளிற்கு முத்தம் தருகிறார். ஒரு அண்ணன் தன் தங்கைக்கு முத்தம் தருகிறான். ஒரு அக்கா தன் தம்பிக்கு முத்தம் தருகிறாள்.இந்த அனைத்து இடத்திலும் காமம் தான் உள்ளதா?

நான் என்ன செக்கிற்கும், சிவலிங்கத்திற்கும் கூட வித்தியாசம் தெரியாத முட்டாளா? நீங்க என் காதலன், ஆனால் இவன் என் நண்பன்! இவனுக்கு நான் முத்தம் தந்தாலும் சரி, கட்டிப் பிடித்தாலும் சரி. நேசத்துக்கான நம்பிக்கையைத் தவிர வேறு எந்த மாதிரியான உணர்ச்சியும் எங்களுக்குத் தோன்றாது.

இவன் என் நண்பன். இவன் எப்போதும் என் முகத்தை பார்த்து மட்டும் தான் பேசுவான். இவனுக்கு நான் தருகிற முத்தமும், இவன் எனக்கு தருகிற முத்தமும் தரையில் படாமல் மரத்தின் உச்சி கிளையிலேயே ஆவியாகி விடும் பனித்துளியை போல அவ்வளவு புனிதமானது.

சரி. நான் உங்களிடமே ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்கள் உங்களின் தங்கைக்கு முத்தம் தரும்போது உங்களின் மனதில் தோன்றுவது என்ன காமமா?

இல்லை. அவள் உங்களுக்கு முத்தம் தரும்போதும் அவளின் மனதினிலும் அப்படி ஒரு எண்ணம்தான் தோன்றுமா?''

''ஏய் மகிஷா. என்ன பேசுகிறாய்?''

கோபத்துடன் கை உயர்த்தினான் கலையமுதன்.

''இப்போது எதற்கு உங்களுக்குக் கோபம் வருகிறது? உங்களின் உறவு மட்டும் புனிதம். எங்களின் உறவு கலப்படமோ? இது எந்த ஊர் நியாயம்? உங்களுக்கும் அந்த ராகவ்விற்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது... ச்சே... உங்களை போய் காதலித்தேனே! இனி என் முகத்தில் கூட விழிக்காதீர்கள்!'' என்றவள் வேகமாக அங்கிருந்து சென்று விட்டாள்.

12

''ஸ்வீட்டி, ஐ... யம் ஸாரி!'' என கலையமுதன் கூறியது மகிஷாவின் காதுகளை சென்றடையும் முன்பே காற்றில் கரைந்து விட்டது.

வருத்தத்தில் முகம் கறுத்து நின்றிருந்த மதுபாலன் கலையமுதனின் அருகே வந்தான்.

''அமுதா. நீ எங்களைப் பற்றி இவ்வளவு கீழ்த்தரமாக நினைத்திருக்கக் கூடாது. அவள் என் தோழிடா அமுதா! அவள் என் உயிர்த் தோழி! அவள் என்னை

தொட்டால் ஒரு குழந்தை என்னைத் தொட்டது போலத்தான் எனக்கு பீல் ஆகும்டா'' என்றவனுக்கு குரலோடு சேர்ந்து கண்களும் கலங்கி விட்டது.

''ம்ப்ச்... போதும் உன் ட்ராமாவை நிறுத்து! நான் அவளை லவ் பண்றேன். அதனால் அவள் கூறியது அத்தனையையும் நம்புகிறேன். மற்றபடி நான் உன்னையும் நம்பவில்லை. உன் வார்த்தைகளையும் நம்பவில்லை!'' என்ற கலையமுதன் உடனே அங்கிருந்து புறப்பட்டும் சென்று விட்டான்.

மதுபாலனுக்கு தான் மண்டையை பிய்த்துக் கொள்ளலாமா? என்று இருந்தது.

* * *

கல்லூரியில் கலையமுதனிடம் மதுபாலனே வலிய சென்று பேசினாலும் அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றான்.

வீட்டில் மகிஷாவோ உயிரற்ற பொம்மை போல நடமாடிக் கொண்டிருந்தாள்.

அன்று மாலை வீடு திரும்பியவன் வீட்டுக்குள் மகிஷாவை காணாமல் தோட்டத்திற்கு சென்றான். புல்வெளியில் அமர்ந்தபடி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளின் அருகே சென்று அமர்ந்தான்.

அவனைக் கண்டதும் புன்னகை ஒன்றை கஷ்டப் பட்டு வரவழைத்தவள்,

''குட் ஈவினிங் மது!'' என்றாள்.

''குட் ஈவினிங்... மகி நீ ஏன் இப்படி இருக் கிறாய்?''

''எப்படி இருக்கேன்? நல்லா தானே இருக்கேன்?''

''பொய் சொல்லாதே மகி!''

''ம்ப்ச். இந்த பேச்சை விடு! சரி நீ சொல், உன் லவ்வர் என்னை விட அழகா? அவள் பெயர் என்ன? அவள் எந்த ஊர்?''

''உன் அளவுக்கு அவள் அழகு கிடையாது. ஆனாலும் அவள் கொஞ்சம் அழகுதான்! அவளைப் பற்றிய விவரம் எதுவும் எனக்குத் தெரியாது. அவ ளுக்கு நானாக வைத்த பெயர் ப்ரின்ஸஸ்.''

''கொஞ்சம் அழகு உள்ள அவள் ப்ரின்ஸஸ்! ஆனால் நான் மட்டும் ராட்சஸியா?'' எனக் கேட்டு சிரித்தவளை கண் கொட்டாமல் பார்த்தவன்,

''நீ எப்போதும் இப்படி சிரித்துக் கொண்டே இரேன்!'' என்றான்.

சட்டென முகம் மாறியவள்,

''அவர் என் மனதிற்குள் இவ்வளவு ஆசையை வளர்த்து விட்டிருக்கக் கூடாது!'' என்றாள்.

அவள் இதைக் கூறும் போது கண்களில் கண்ணீர் துளிர்க்க ஆரம்பித்து விட்டது.

''மகி!''

வேதனையுடன் அழைத்தவனின் தோளில் சாய்ந் தவள்,

''எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கு மது! அவரை நான் எந்த அளவிற்கு நம்பினேன் தெரியுமா?'' என்றவள் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

''எல்லாவற்றிற்கும் நான் தான் காரணம்!'' என மதுபாலன் கூறவும் சட்டென அழுகையை நிறுத்திக் கொண்டாள் மகிஷா.

''இப்படி சொல்லாதே மது! எனக்கு என் காதலை விடவும் நட்பு தான் முக்கியம்!'' என்றவள்,

''சரி, எழுந்திரு! வீட்டிற்கு செல்லலாம்!'' எனக் கூறிவிட்டு எழுந்து நடந்தான்.

மதுபாலனும் ஒரு முடிவோடு எழுந்து நடந்தான்.

* * *

மறுநாள் கல்லூரிக்கு சென்ற மதுபாலன் முதல் வேலையாக கலையமுதனை தேடிச் சென்றான்.

ரிஜிஸ்டர் ஒன்றில் கையெழுத்து போட்டுக்கொண்டிருந்த கலையமுதன் மதுபாலன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் அங்கிருந்து நகர முயன்றான். அதற்குள் மதுபாலன் அவனை சமீபித்து விட்டான்.

''அமுதா, நான் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்!''

கலையமுதன் பதில் பேசாமலேயே நின்றான்.

''ப்ளீஸ் அமுதா!''

மதுபாலன் கெஞ்சிக் கேட்கவும் அவனோடு மரத்தடி ஒன்றிற்கு நடந்தான் கலையமுதன்.

''நீ ஏன் இப்படி செய்தாய் அமுதா? மகி உன்னை ரொம்ப லவ் பண்றாள்! நீ பேசியதை நினைத்து தினமும் அழுகிறாள். அவளிடம் ஒரு ஸாரி கேட்டு விட்டு பழையபடி பேசு! ப்ளீஸ்!''

''பாலா, நான் இப்போதும் சொல்கிறேன் கேட்டுக் கொள். எனக்கும் மகிஷாவை ரொம்பப் பிடிக்கும் அவள் என் வாழ்க்கையில் வந்த தேவதை! என் வாழ்க்கையில் அவளைத் தவிர வேறு யாருக்கும் இடம் கிடையாது. அவளின் கால்களில் விழுந்து கூட மன்னிப்பு கேட்கத் தயாராக உள்ளேன். ஆனால் இடையில் ஒரு உறுத்தல்.''

''என்ன உறுத்தல்?''

''உன்னை நினைத்து தான் உறுத்தல்!''

இதைக் கேட்டு முகம் கறுத்த மதுபாலன்,

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' எனக் கேட்டான்.

''வெரி சிம்பிள்! என் கண்டிசன் ஒன்றிற்கு ஒத்துக் கொள்!''

''என்ன? என் மகியை விட்டு விலகிச் செல்ல வேண்டுமா? அவளுடன் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டுமா? நீ என் உயிரைக் கேட்டால்கூட என் மகிக்காக அதை என் மனமு வந்து தருகிறேன்!''

''நான் நேராகவே கேட்கிறேன் பாலா, எனக்கு உன் உயிர் தேவையில்லை. உன் காதலை மட்டும் மறந்து விடு!''

''புரியவில்லை அமுதா!''

''அதாவது நீ என் தங்கையை திருமணம் செய்துக் கொள்ள வேண்டும். நீ மறுத்தால் எனக்கும் மகிஷா வுக்கும் திருமணம் நடக்காது. ப்ளாக் மெயில் செய்வதாக நினைத்துக் கொள்ளாதே! எனக்கு வேறு வழி இல்லை. இனி முடிவு உன் கையில் தான்! என் கண்டிசனிற்கு சம்மதம் என்றால் இன்று மாலை ஐந்து மணிக்கு நான் சொல்கின்ற ரெஸ்டாரண்டிற்கு மகிஷாவை அழைத்து வா. விருப்பமில்லையென் றால் நீ மட்டும் தனியாக வா!'' என்றவன் அங்கிருந்து கிளம்பி விட்டான்.

* * *

மதுபாலனின் நிலை புயலில் சிக்கிய சிறு படகைப் போல் இருந்தது. பார்த்த நொடியில் மனதை கவர்ந்து விட்ட காதலியா? காதலனை நினைத்து அழுகின்ற உயிர்த் தோழியா?

நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை என்று சொன் னால் மீரா கிருஷ்ணனை போல வாழ்வேன் எனக் கூறிய காதலியா?

எனக்கு காதலை விட நட்பே முக்கியம் எனக் கூறிய தோழியா?

யோசித்துப் பார்த்தவன் கடைசியில் நட்பிற்கே துணை நின்றான் என்பதை நான் சொல்லி அறிய வேண்டியதில்லை.

* * *

கல்லூரி முடிந்து வீட்டிற்கு வந்த மதுபாலன் மகிஷாவிடம் ரெடியாக சொன்னான்.

'எதற்கு?' என கேட்டவளிடம் பதில் சொல்ல மறுத்து விட்டான்.

சிறிது நேரத்தில் தயாராகி வந்த மகிஷாவை அழைத்துக் கொண்டு கலையமுதன் கூறிய ரெஸ்டா ரண்டிற்கு வந்தான்.

பைக்கிலிருந்து இறங்கியவள்,

''இங்கு எதற்காக வந்துள்ளோம் மது?'' எனக் கேட்டாள்.

''சொல்கிறேன், வா!'' எனக்கூறி அவளை உள்ளே அழைத்துச் சென்றவன் ஒரு மூலையில் கலை யமுதன் அமர்ந்திருப்பதைக் கண்டு அவன் அருகே சென்றான்.

மேஜையருகே சென்ற பிறகே கலையமுதனை கண்ட மகிஷா,

''இங்கே எதற்காக என்னை அழைத்து வந்தாய் மது?'' என்றாள்.

''ஸ்ஸ்ஸ். அமைதியாக வா!'' என்றவன், அவளை அழைத்து வந்து அவனருகே இருந்த நாற்காலியில் அமர வைத்தான்.

''மது, நான் வீட்டிற்குப் போகிறேன்!'' என எழுந்த வளை அங்கேயே அமர வைத்த மதுபாலன்.

''நீ பேசிட்டு வா. நான் வெளியே பைக் அருகில் வெயிட் பண்றேன்!'' எனக் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

கோபத்தோடு பல்லைக் கடித்தபடி அமர்ந்திருந்த மகிஷாவின் கையைப் பற்றினான் கலையமுதன். வெடுக்கென்று தன் கையை உருவிக் கொண்டவள் அவனைப் பார்த்து கண்கள் சிவக்க முறைத்தாள்.

''ஸாரி மகிஷா!'' எனக் கூறி விட்டு கண்களால் கெஞ்சினான் கலையமுதன்.

''ஸாரி எதற்காக கேட்கிறீர்கள்? முன் பின் தெரியாதவர்கள் சொல்கின்ற ஸாரியையெல்லாம் நான் ஏற்றுக் கொள்வதில்லை.''

''ஸ்வீட்டி, நீ சொல்வது உனக்கே நியாயமாகப் படுகிறதா? நான் உனக்கு முன் பின் தெரியாதவனா? நான் உன் காதலன், விரைவில் உன் கணவனாகப் போகிறவன்!''

''ஹூம். காதலன், கணவன்! காதலியின் மீது நம்பிக்கையில்லாத நீங்கள் என்ன காதலர்? நீங்கள் என்னை யாரோடு சம்பந்தப்படுத்தி சந்தேகப்பட்டிருந்தாலும் நான் உங்களை மன்னித்திருப்பேன். ஆனால் நீங்கள் என்னை என் மதுவுடன் இணைத்து சந்தேகப் பட்டுவிட்டீர்கள்!'' என்று கூறும் போதே மகிஷாவின் கண்கள் கலங்க ஆரம்பித்து விட்டன.

''ப்ளீஸ் ஸ்வீட்டி, ஐ யம் ஸோ ஸாரி'' இந்த ஒரு தடவை உன் முட்டாள் காதலனை மன்னிக்கக் கூடாதா? ப்ளீஸ்மா செல்லம்! ப்ளீஸ்டா, ஸ்வீட்டி!''

''நோ!'' என்று கூறிவிட்டு எழுந்தவள்,

''நான் வீட்டிற்குப் போகிறேன்!'' எனச் சொல்லி விட்டு விடுவிடுவென்று வெளியே செல்ல நடந்தாள்.

கலையமுதனும் அவளை பின் தொடர்ந்து ஓடினான்.

கோபத்தில் கண் மண் தெரியாமல் வேகமாக நடந்த மகிஷா வேக நடையில் யார் மீதோ மோதயிருந்த சமயம். அவளை கைப் பிடித்து தன்புறம் இழுத்தான் கலையமுதன்.

ஏற்கனவே பேலன்ஸ் தவறியிருந்தவள் அவன் இழுத்த வேகத்தில் அவன் மீதே மோதி நின்றாள்.

கோபத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

''என்ன இது பப்ளிக் ப்ளேஸில்?'' எனக் கேட்டுச் சீறினாள்.

''ஓ, அப்படியென்றால் இதை நான் தனியிடத்தில் செய்திருந்தால் உனக்கு ஓகேவா?'' கண் சிமிட்டிக் கேட்டான் கலையமுதன்.

''ச்சீ, ஐ ஹேட் யூ!'' எனக் கூறியவளின் கையை இறுக்கியவன்,

''ஓ ஹேட் யூ சொன்ன இதே வாயால் ஐ லவ் யூன்னு சொல்ல வைக்கல நான் கலையமுதனே கிடையாது!

இப்போது எதற்காக இவ்வளவு கோபப்படுகிறாய்? நான் மட்டும் உன் கையை பிடித்து இழுத்திருக்காவிட்டால் நீ உன் எதிரில் வந்தவன் மேல் மோதியிருப்பாய். இதற்கு நீ எனக்கு தேங்க்ஸ் தான் சொல்லியிருக்க வேண்டும்!''

அவனை நம்பிக்கையில்லாமல் பார்த்தவள். தன் பின்னால் திரும்பி பார்த்தாள்.

அங்கே ராகவ் ரௌத்திரமான விழிகளுடன் இவர் களையே முறைத்துப் பார்த்தபடி நின்றிருந்தான்.

''ஏய், யாருடி இவன்? பொது இடத்திலேயே இப்படி கட்டிப் பிடித்துக் கொண்டு நிற்கிறீர்கள்?'' என்றுக் கேட்ட ராகவ்வின் சட்டையை பிடித்தான் கலை யமுதன்.

''டேய், யாருடா நீ? என் முன்னாடியே இவளை டி போடுற? பல்லை பேத்துடுவேன்!'' என்றான் ஆக் ரோஷமாக.

ரெஸ்டாரண்டிற்கு வெளியே தன் பைக் அருகில் நின்றுக் கொண்டிருந்த மதுபாலனுக்கு இவர்களின் விவாதம் கண்ணில் பட்டது. உடனே அங்கிருந்து இவர்கள் அருகே ஓடி வந்தான்.

''அமுதா, என்ன ஆச்சு?''

''பாலா, இவன் என் முன்னாடியே என் மகிஷாவை டி போடுறான்டா!'' எனக் கலையமுதன் கண்கள் சிவக்க கூறவும், மதுபாலன் அவன் யார் என்று திரும்பி பார்த்தான்.

''அமுதா. இவன் தான்டா ராகவ்!'' என்றான்.

ராகவ்வை பற்றி ஏற்கனவே கலையமுதன் அறிந்து வைத்திருந்ததால் உடனே அவனை அடையாளம் கண்டுக் கொண்டான்.

உடனே தன்னருகில் நின்றிருந்த மகிஷாவை இடையோடு வளைத்து தன்னருகே இழுத்தவன்,

''ஹாய் ராகவ். நான் தான் மகிஷாவின் பியான்ஸி! எங்களுக்கு கூடிய சீக்கிரத்தில் மேரேஜ் நடக்கப் போகிறது. இன்விடேசன் அனுப்பி வைக்கிறோம். மறக்காமல் வந்து விடுங்கள்!'' என்றவன் மகிஷாவை அழைத்துக் கொண்டு அங்கிருந்து நகர முயன் றான்.

''மகிஷா, ஒரு நிமிஷம்!''

ராகவ்வின் அழைப்பினால் இருவருமே நின்றனர். திரும்பி நின்று 'என்ன?' வென்பது போல் பார்த்தனர்.

''மகிஷா, நான் உன்னை அளவுக்கதிகமாக நேசிக் கிறேன். நீ இப்படி'' பேசிக் கொண்டு சென்ற ராகவ்வை இடை நிறுத்தினான் கலையமுதன்.

''தப்பாக சொல்லாதீங்க ப்ரதர்! நீங்க இவளுடைய அழகை மட்டும் தான் லவ் பண்றீங்க. ஆனால் நான் இவளையே லவ் பண்றேன். ஸோ இனி இவளோட வாழ்க்கையில் வர முயற்சிக்காதீர்கள்!'' என்றான்.

''நீங்களும் என்னைப் பற்றி தப்பா நினைக்காதீங்க ப்ரதர்! நான் இதுவரையிலும் ஆசைப்பட்ட பொருள் எதையும் அடையாமல் விட்டதில்லை!''

''ஹேய், இவள் பொருள் இல்லைப்பா. மனுசி!''

''மகிஷா, நீ என் இன்னொரு முகத்தை பார்க்க வேண்டி இருக்கும்!''

''இதோடா, வில்லன் மிரட்டுறாரு! ஹேய் இவள் என் காதலி. எங்களுக்கு கூடிய சீக்கிரத்தில் திரு மணமும் நடக்கப் போகிறது. உன்னால் முடிந்ததை நீ செய்!'' என்றவன் மகிஷாவை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

அவர்களை பின் தொடர்ந்து வந்து மதுபாலன்,

''அவள் மட்டும் மனுசியல்ல. நானும் கூடத்தான் மனுசன்!'' என்றான் மெல்லிய குரலில்.

அது அச்சு பிசகாமல் கலையமுதனின் காதில் விழுந்து விட்டது. மகிஷாவை அங்கேயே நிறுத் தியவன் மதுபாலனை அழைத்துக் கொண்டு தனியே சென்றான்.

''பாலா, நீயும் மனுசன் தான்! நான் இல்லையெனச் சொல்லவில்லை. நீ ட்ரெயினில் பார்த்து விட்டு வந்த ப்ரின்ஸஸை விடவும் என் தங்கை ஒன்றும் குறைந்தவளில்லை. என் தங்கையைப் பற்றி நானே சொல்லக் கூடாது. இருந்தாலும் சொல்கிறேன் கேள்.

அவள் கல்லூரியில் படிக்கும் போது அவளுக்கே தினம் நாலு லவ் லெட்டர்ஸ் வரும். அதையெல்லாம் நான்தான் படித்துப் பார்த்துக் கிழித்துப் போடுவேன்! அவள் வெறும் அழகு மட்டுமல்ல. செம பிரிலி யண்டும் கூட! அவளுக்கு பிடிவாத குணம் ஒன்றைத் தவிர வேறு எதுவும் மைனஸ் பாயிண்ட் கிடையாது. அவளை வாழ்க்கை துணையாக அடைய நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

அந்த ப்ரின்ஸஸோட முகம் உன்னை டிஸ்டர்ப் பண்ணுதுன்னு நினைக்கிறேன். நீ வேண்டுமானால் என் தங்கையை ஒரு முறை பார். நீயாகவே உன் மனதை மாற்றிக் கொள்வாய். என் மொபைலில் அவள் போட்டோ இருக்கு. இரு காட்டுகிறேன்!'' என்றவன் தன் பாக்கெட்டிலிருந்த செல்போனை எடுத்தான்.

''வேண்டாம், வேண்டாம்!'' என்று மதுபாலன் அவசரமாக முகத்தைத் திருப்பினான்.

''ஏன்? உன் ப்ரின்ஸஸுக்குத் துரோகம் பண்ண மனசு வரலையா? பரவாயில்லை விடு! வாழ்க்கை முழுவதும் என் தங்கச்சி கூட வாழப் போற. இப்போது போட்டோவை பார்த்தே ஆக வேண்டும் என்ற அவசியம் என்ன? சரி வா, வீட்டிற்குக் கிளம்பலாம்!'' என்றவன் தன் வீட்டிற்குப் புறப்பட, மதுபாலனும், மகிஷாவும் தங்கள் வீட்டிற்குக் கிளம்பினர்.

13



கல்லூரியில் உணவு இடைவேளை!

மதுபாலனும், கலையமுதனும் அருகருகே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் முன்பே வந்து நின்றான் பியூன்.

நிமிர்ந்து பார்வையால் வினவியவர்களிடம்,

''பாலா சாரை பார்க்க ஒரு பொண்ணு வந்திருக்கு. வெளியே மரத்தடியில் வெயிட் பண்ணிட்டு இருக்கு!'' என்றவன் தன் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டான்.

'அது தன் ப்ரின்ஸஸாக இருக்குமோ?' என நினைத்த மதுபாலனுக்கு அதற்கு மேல் உணவினை உண்ண மனம் வரவில்லை. டிபன் பாக்ஸை மூடி வைத்து விட்டுக் கை கழுவி எழுந்தான்.

அவனின் திடீர் மாற்றம் கலையமுதனுக்கு சந்தேகத்தை தந்தது. அவனும் உணவு உண்ணாமல் அத்துடன் எழுந்து கொண்டான்.

கையைக் கழுவிக் கொண்டு வேகமாக வெளியே நடந்தான் மதுபாலன். கலையமுதனும் சிறிது இடைவெளியில் அவனைப் பின் தொடர்ந்தான்.

மதுபாலன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

வந்திருந்தது அவனுடைய ப்ரின்ஸ்ஸே தான்!

தன்னருகே வந்து மதுபாலனிடம் ஓடிச் சென்று அவன் கையை பிடித்துக் கொண்டாள் அவள்.

''ஹேய் மேன் ஹவ் ஆர் யூ ப்பா? என்னை மறந்துட்டீங்களா?''

''நோ ப்ரின்ஸஸ். ஐ ஆம் பைன்!''

ஜீவன் இல்லாத குரலில் கூறினான் மதுபாலன்.

''குரலில் ஏன் இவ்வளவு சோகம்?''

கவலையுடன் வினவினாள் அவள்.

அதற்குள் அவர்களருகே வந்து விட்டான் கலையமுதன்.

''இது யார் பாலா?'' எனக் கேட்ட கலையமுதனிடம்,

''இவள் தான் ப்ரின்ஸஸ்!'' என்றான் மதுபாலன்.

இதைக் கேட்டவுடன் கலையமுதனுக்கு முகம் கறுத்து விட்டது. ஒரு முடிவோடு அவள் புறம் திரும்பினான்.

''ஹாய், ஐ யம் கலையமுதன்! மதுபாலனின் ப்ரெண்ட் நான். கூடிய சீக்கிரத்தில் என் ப்ரெண்ட் மதுபாலன் எங்க வீட்டு மாப்பிள்ளை ஆகப் போகிறார். மறக்காமல் அட்ரஸ் தந்து விட்டுப் போங்க. மேரேஜ் இன்விடேசன் அனுப்பி வைக்கிறோம்'' என்றான் சாதுவாக.

அவன் கூறியதை நம்பாமல் மதுபாலனை பார்த்தாள் அவள்.

அவனோ பதில் கூற முடியாமல் அமைதியாக நின்றான்.

''இவர், இவர் சொன்னது உண்மையா பாலா? அப்படியென்றால் நீங்கள் என்னை விரும்பவில்லையா? நான் தான் தேவையில்லாமல் மனக் கோட்டை கட்டினேனா? பதில் சொல்லுங்கள் பாலா!''

கண்கள் கலங்கக் கேட்டவளை ஊமையாகப் பார்த்து நின்றான் மதுபாலன்.

''ரயில் சினேகத்தை முற்றிலுமாக நம்பக்கூடாது என்று புரிய வைத்து விட்டீர்கள். பாலா, குட் பாய்!'' என்றவள் திரும்பி நடந்தாள்.

''ப்ரின்ஸஸ்!''

ஒற்றை அழைப்பில் அவளை நிறுத்தினான்.

கண்களில் நீருடன் திரும்பிப் பார்த்தாள் அவள்.

''ஸாரி ப்ரின்ஸஸ்!'' என்றவனுக்கு அதற்கு மேல் பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது.

வேதனையுடன் அவனைப் பார்த்தவள், அவன் கண்களிலும் கண்ணீர் திரளுவதைக் கண்டு அமைதி யாக அங்கிருந்து சென்று விட்டாள்.

மதுபாலனின் தோளில் கை வைத்த கலை யமுதன்,

''ஐ யம் ஸாரி பாலா! உனக்கு காதல் வந்தது தவறு இல்லை. ஆனால் அது தாமதமாக வந்தது தான் தவறு! நீ இவளை மறந்து விடுவது தான் நம் அனை வருக்குமே நல்லது!'' என்றவன் அங்கிருந்து சென்று விட்டான்.

'காதலுக்கும், எனக்கும் ராசியே இல்லையா?' என மனதுக்குள் கேட்டவன் அவனின் ப்ரின்ஸஸ் சென்ற திசையையே வெறித்துப் பார்த்தான்.

நீ ஏன் என் வாழ்க்கையில் வந்தாய்?

சோலை வனம் என நினைத்த காதலே

நீ ஏன் பாலை வனமானாய்?

பன்னீர் துளியென நினைத்த காதலே

நீ ஏன் கண்ணீர் துளியானாய்?

முல்லைப் பூவாக நினைத்த காதலே

நீ ஏன் முள் செடியானாய்?

நீலக் கடலாக நினைத்த காதலே

நீ ஏன் கானல் நீரானாய்?

பனித் துளியென நினைத்த காதலே

நீ ஏன் அனல் பொறியானாய்?

* * *

கலையமுதனுக்கும், மகிஷாவிற்கும் நிச்சய தேதி குறிக்கப்பட்டு விட்டது.

அடுத்த பதினைந்து நாட்களில் நிச்சயதார்த்தமும், அதன் பிறகு ஒரு வாரத்தில் சிம்பிளாக கோவிலில் திருமணமும், அன்று மாலை மண்டபத்தில் ரிசப் சனும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இவர்களுக்கு குறித்த அதே தேதியில்தான் மதுபாலனுக்கும், இளவரசிக்குமான நிச்சயமும், திருமணமும் குறிக்கப்பட்டது.

தன் பெற்றோரையும், மகிஷாவின் பெற்றோரை யும் தனியே அழைத்த மதுபாலன் 'தனக்கும்,

இளவரசிக்கும் நடக்க விருக்கும் நிச்சயம் பற்றி மகிஷாவிற்குத் தெரிய வேண்டாம். நான் அவளுக்கு சிறு சர்ப்ரைஸ் தர நினைக்கிறேன்'' எனச் சொல்லி விட்டதால் மகிஷாவிற்கு மதுபாலனுக்கும், இளவர சிக்கும் நடக்க விருக்கும் நிச்சயதார்த்தத்தைப் பற்றித் தெரியாமல் போனது.

நிச்சயத்திற்கு இன்னும் பதினைந்து நாட்களே இருந்ததால் ஹேமாவதியும், மாதரசியும் மகிஷாவை அழைத்துக் கொண்டு துணி கடை, நகை கடை என அலைந்துக் கொண்டிருந்தார்கள்.

அன்றும் அப்படி தான் ஆர்டர் தந்திருந்த நகை களை வாங்குவதற்காக மகிஷாவை அழைத்துக் கொண்டு சென்றனர்.

சாந்தசீலனுக்கும், சோமநாதனுக்கும் பள்ளியில் முக்கிய வேலைகள் இருந்ததால் பெண்கள் மூவர் மட்டும் நகை வாங்கச் சென்றனர்.

நடக்க விருக்கும் நிச்சயத்தில் மகிஷாவிற்கு முழு விருப்பம் இல்லை.

'தன்னை மதுவுடன் இணைத்து சந்தேகப்பட்டு விட்டாரே!' என நினைத்து நினைத்து கலையமுத னின் மேல் கோபமாகவே இருந்தாள். அதே சமயம் 'அவரைப் பிடிக்கவில்லை' என வீட்டில் சொல்லி விடவும் அவளுக்கு மனம் வரவில்லை. அதனால் கடமைக்காக இவர்களோடு வந்திருந்தாள்.

ஆர்டர் தந்திருந்த நகைகளை பில் போட்டு வாங்க நேரமாகும் என்பதை உணர்ந்தவள் நகை கடைக்கு எதிரிலிருக்கும் புக் ஸ்டோருக்கு செல்வதாக கூறி விட்டுக் கிளம்பினாள்.

சிறிது நேரத்தில் பில் போட்டு நகைகளை வாங்கிக் கொண்ட மாதரசியும், ஹேமாவதியும் வீட்டிற்கு புறப் படுவதற்காக மகிஷாவைத் தேடினர்.

புத்தகக் கடையில் அவள் இல்லாததால் அவளது செல்போனிற்கு அழைத்தனர். அதுவும் ஸ்விட்ச் ஆப் என வர இருவர் மனதிலும் பயம் சூழ்ந்தது.

நேரத்தை வீணடிக்கக் கூடாது என உணர்ந் தவர்கள் மதுபாலனின் செல்போனிற்கு அழைத்து அவனிடம் விசயத்தைக் கூறினார்கள்.

'இது என்ன புது சோதனை?' எனக் கவலை கொண்ட மதுபாலன் கலையமுதனிடம் விசயத்தைக் கூறினான்.

விசயத்தை கேட்டவுடன் கலையமுதனின் முகத்தில் பயம் படர்ந்தது.

இருவருக்குமே சந்தேகம் ராகவ்வின் மீது தான்.

ஆனால் மகிஷாவை எப்படிக் கண்டு பிடிப்பது என்று தான் இருவருக்குமே புரியவில்லை.

கலையமுதனுக்கு வெகு நேர யோசனைக்குப் பிறகு காவல்துறையின் உயர் மட்டத்தில் தனக்கொரு நண்பன் இருப்பது நினைவுக்கு வந்தது.

உடனே நண்பனை செல்போனில் பிடித்தான் கலையமுதன் இவர்களின் பிரச்சனையை அறிந்த அந்தக் காவல்துறை நண்பன் 'தான் உதவி செய்வ தாக' கூறினான்.

அதற்குள் இவர்களும் கல்லூரியில் விடுப் பெடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றனர். பள்ளியி லிருந்து வீடு திரும்பிவிட்ட சோமநாதனும், சாந்த சீலனும் செய்வதறியாது குழம்பிப் போய் இருந்தனர்.

மாதரசியும், ஹேமாவதியும் அளவுக்கு அதிகமா கவே பயந்து போயிருந்தனர்.

அரை மணி நேரத்திற்குப் பிறகு காவல் துறை நண்பனிடமிருந்து கலையமுதனின் செல்போனிற்கு அழைப்பு வந்தது.

மகிஷாவின் செல்போன் சிக்னல் கடைசியாக பதிவாகியிருந்த பகுதியை கூறிய காவல்துறை நண்பன் அந்த பகுதியில் சிறிது நேரத்திற்கு முன் சந்தேகப்படும் படியான ஒரு கார் சென்றதையும், மேலும் அந்த கார் சிக்னலில் நின்றிருந்த காவல் துறை ஆட்களிடமே தண்ணீர் காட்டி விட்டு சென்ற தையும் கூறினார்.

காவல்துறை நண்பன் கூறியதை அனைவரிடமும் கூறினான் கலையமுதன்.

அவன் கூறியதைக் கேட்ட மதுபாலன் அந்த பகுதி யில் ராகவ்வின் கெஸ்ட் ஹவுஸ் ஒன்று உள்ளது என தகவல் கூறினான்.

மதுபாலன் கூறியதை காவல்துறை நண்பனிடம் கூறிய கலையமுதன் மதுபாலனை மட்டும் அழைத்துக் கொண்டு அவன் குறிப்பிட்டு சொன்ன இடத்திற்கு புறப்பட்டான்.

* * *

மகிஷாவிற்கு கண்களை திறக்கவே சிரமமாக யிருந்தது. ஆனால் அவள் முகத்தில் மீது விடாமல் தண்ணீர் தெளிக்கப்பட்டுக் கொண்டிருந்ததால் சில நிமிட முயற்சிக்கு பிறகு சிரமத்துடன் கண்களை திறந்தாள்.

எதிரே மங்கலான உருவத்தில் தெரிந்த ராகவ்வை கண்டவள் அதிர்ச்சியுடன் எழுந்து அமர்ந்தாள். தான் இருக்கும் தனியறையை பார்த்தவள் திரும்பி ராகவ்வை கோபமாக முறைத்தாள்.

'தான் எப்படி இவனிடம் சிக்கினோம்?' என யோசித்தவளுக்கு பிளாஷ் பேக் கண்களின் முன் விரிந்தது.

புத்தகக் கடைக்கு செல்வதற்காக சாலையை கடக்க முயற்சித்துக் கொண்டிருந்தவளின் அருகே வந்து நின்றது கார்.

'நடப்பவர்கள் சாலையை கடக்கத்தான் இவ் வளவு பெரிது பெரிதாக வெள்ளை கோடுகளை சாலையில் போட்டுள்ளார்கள். இங்கே கொண்டு வந்து காரை நிறுத்தும் யார் இந்த புத்திசாலி?' என நினைத்தவள் காரை தாண்டிச் செல்ல முயல, காரும்

அவளோடு இணைந்து வந்து அவளை தடுத்து நிறுத்தியது.

எரிச்சலடைந்த மகிஷா அந்த காரின் கண் ணாடியை தட்ட கை ஓங்கிய நேரம். அந்த காரின் கதவு திறந்தது. உள்ளிருந்து வந்த ஒரு முரட்டுக் கை அவளின் கையைப் பற்றி உள்ளே இழுத்து தள்ளியது. தன்னைக் கைப்பற்றி இழுத்தது. யாரென அறியும் முன்பே அவளின் முகத்தில் ஸ்ப்ரே செய்யப்பட்ட மயக்க மருந்து அவளின் சுய நினைவை பறித்து விட்டது.

ராகவ் தன்னை கடத்தியிருக்கிறான் என மகிஷா விற்கு புரிந்ததும் அவளின் நெஞ்சுக்குள் புதிதாக ஒரு பயம் சூழ்ந்தது. இருப்பினும் பயத்தை மறைத்து விட்டு அவனை கண்கள் சிவக்க முறைத்தாள்.

''என்னை எதற்காக கடத்திக் கொண்டு வந்துள் ளாய்? மரியாதையாக என்னை விட்டு விடு! இல்லை யென்றால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!'' எனக் கூறி சுட்டு விரல் நீட்டி அவனை எச்சரித்தாள்.

அவளின் சிறு பிள்ளைத் தனமான எச்சரிக்கையைக் கண்டு சிரித்தவன்,

''உன்னை விடுவதற்காகவா, இவ்வளவு திட்டம் போட்டு உன்னை இங்கே கடத்திக் கொண்டு வந்தேன்? எனக்கு நீ வேண்டும். உன் அழகு தினமும் என்னை வாட்டி வதைக்கிறது. நான் இங்கே உன்னை

நினைத்து பைத்தியக்காரனாகிக் கொண்டிருக்கிறேன்! ஆனால் நீ அங்கே வேறு எவனையோ திருமணம் செய்துக் கொள்ள முடிவெடுத்துள்ளாய். நான் ஒன்றை நினைத்து அதை அடையாமல் விட்டதாகச் சரித் திரமே இல்லை!'' என்றான்.

''அ, அதற்காக என்ன செய்யப் போகிறாய்?''

மிரட்சியுடன் கேட்டவளைக் கண்டு மேலும் சிரித் தவன்,

''டெஸ்ட் பண்ணப் போறேன். நீ வெர்ஜினா எனறு நானே ப்ராக்டிகலாக டெஸ்ட் பண்ணப் போறேன். நீ வெர்ஜின் என்றால் நாளை காலை உனக்கும் எனக்கும் திருமணம். இல்லையென்றால் உன்னை ஒரே ஒரு முறை அனுபவித்ததை நினைத்து உன்னை விட்டு விடுவேன். அதன் பிறகு நீ யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்துக் கொள். நான் உன் வாழ்க்கையில் குறுக்கே வர மாட்டேன்!'' என்றவன் அவளை நெருங்கிச் சென் றான்.

''நோ!'' என தலையாட்டியபடி கட்டிலை விட்டு கீழிறங்கியவள் அந்த அறையின் கதவை நோக்கி ஓடினாள்.

''என்னிடமிருந்து நீ தப்பவே முடியாது!'' என்றவன் அவளுக்கும் முன் சென்று அவளை மறித்து நின் றான்.

''ப்ளீஸ், என்னை விட்டு விடு!''

இரு கை கூப்பி அவனிடம் கெஞ்சினாள்.

''உன்னை விட்டு விடவா இவ்வளவு ரிஸ்க் எடுத்தேன்?'' என்றவன், அவளின் சேலை தலைப்பை பற்றி இழுத்தான்.

அதே நேரத்தில் அந்த வீட்டின் காலிங்பெல்லும் ஒலித்தது. அதை பொருட்படுத்தாத ராகவ் மகிஷாவின் சேலையை பற்றி இழுத்து அதை உருவி எறிந்தான்.

* * *

ராகவ்வின் கெஸ்ட் ஹவுஸின் வெளியே பதட்டத்தோடு நின்றுக் கொண்டிருந்தனர் மதுபாலனும், கலையமுதனும்.

அந்த வீட்டின் காலிங்பெல்லை அழுத்தி பார்த்து சலித்த காவல்துறை நண்பன் தன்னோடு வந்திருந்த கான்ஸ்டபிளை அழைத்து வீட்டின் கதவை திறக்கச் சொன்னார்.

'சரி' என தலையாட்டிய கான்ஸ்டபிள் வீட்டின் கதவை திறக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

கலையமுதனை விடவும் மதுபாலன் தான் அதிக கவலையில் ஆழ்ந்திருந்தான்.

''டோன்ட் வொரி பாலா! மகிஷாவுக்கு ஒன்றும் ஆகாது!'' என அவனைச் சமாதானப்படுத்த முயற்சித்தான் கலையமுதன்.

''இல்ல அமுதா! எனக்கு ரொம்ப பயமாயிருக்கு! அவளுக்கு மட்டும் ஏதாவது ஆகிவிட்டால் பிறகு நான் உயிரோடேவே இருக்க மாட்டேன்!''

''ச்சீ, ச்சீ என்ன பேசுகிறாய்? அவள் என் மகிஷா. அவளுக்கு ஒன்றும் ஆகாது. அப்படி ஏதாவது அசம்பாவிதம் நடந்தாலும் கூட அவள் என்னவள் என்பதை யாராலும் மாற்ற முடியாது!''

அவனைக் குழப்பத்துடன் பார்த்த மதுபாலன்,

''உன்னைப் புரிந்துக் கொள்ளவே முடியவில்லை அமுதா!'' என்றான்.

''நீ என்னைப் புரிந்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்? அதற்குப் பதிலாக என் தங்கையை புரிந்துக் கொள்ள முயற்சி செய்!'' என்றவன், கான்ஸ்டபிள் கதவை திறந்து விட்டதைக் கண்டு வேகமாக உள்ளே ஓடினான்.

* * *

மகிஷாவின் புடவையை உருவி எறிந்த ராகவ் அவளை அணைக்க முற்பட்டான்.

''என் பக்கத்தில் வராதே ராகவ்!'' என்றவள் பின் அடி எடுத்து வைத்து நகர.

ஒரு புலியின் சீற்றத்தோடு அவளை வேகமாக நெருங்கியவன் அதே வேகத்தில் அவளை அணைக்க முயல.

இந்த இடத்தில் மகிஷா, மகிஷா ஸ்வரவர்த்தினி ஆக வேண்டிய நேரம் வந்து விட்டது.

14

தன்னை அணைக்க வந்த ராகவ்வை ரௌத்திரத்துடன் பார்த்த மகிஷா அவனின் அடி வயிற்றின் கீழே தன் கால் முட்டியால் தன் பலம் கொண்ட பட்டும் ஒரு எத்து எத்தினாள்.

அதை எதிர்பார்க்காதவன் வலியுடன் குனிந்தான்.

அந்த நேரத்தில் தன் கையில் அணிந்திருந்த இரும்பு வளையலை கழட்டி எடுத்த மகிஷா, மீண்டும் தன்னை நோக்கி வந்த ராகவ்வின் முகத்தில். வளையலால் பரம பதம் விளையாடினாள்.

உலகில் ஆண்களை விடவும் பெண்களுக்கு உடல் பலம் குறைவு தான். ஆனால் பெண் ரௌத்திரமானால் அவளின் முன் நிற்கும் ஆண் அதோகதி தான்.

அது தான் இங்கேயும் நடந்தது.

ராகவ்வின் முகத்தில் தன் வளையல் கொண்டு தன் இஷ்டத்திற்கும் ரத்தக் கோடுகள் கிழித்த மகிஷா, ஒரு கட்டத்தில் தன் கை ஓய்வதைக் கண்டு அவனை விட்டு விட்டு கதவை நோக்கிச் சென்றாள்.

திடீரென நின்றவள் அப்போது தான் தன் புடவையின் நினைவு வந்து திரும்பினாள்.

அங்கே முகத்தை மூடியபடி அரை மயக்க நிலையில் அமர்ந்திருந்தான்.

ராகவ் இவளின் புடவையை எடுக்க வேண்டுமானால் அவனைத் தாண்டிச் சென்றாக வேண்டும்.

'என்ன செய்வது?' என மகிஷா யோசித்துக் கொண்டிருந்த வேளையில் படீரென திறந்தது அந்த அறையின் கதவு.

சட்டென நெஞ்சின் குறுக்கே கைகளை கட்டிக் கொண்டவள் பயத்துடன் திறந்த கதவை பார்த்தாள்.

உள்ளே நுழைந்த போலீஸை புரியாமல் பார்த்தவளுக்கு அறை வாசலில் நின்றிருந்த கலையமுதனையும், மதுபாலனையும் கண்டவுடன் விசயம் புரிந்தது.

அவர்கள் இருவரையும் கண்ட பிறகு அவளுக்கு இவ்வளவு நேரமாக இருந்த தைரியம் முற்றிலுமாக வடிந்து விட்டது.

கைகளை குறுக்கே கட்டியபடியே வேகமாக அவர்களை நோக்கி ஓடினாள்.

ஓடி வருபவள் தன் நெஞ்சில் சாய்வாள் என எதிர்பார்த்தான் கலையமுதன்.

ஆனால் அவளோ ஓடிச் சென்று மதுபாலனின் தோளில் சாய்ந்தாள்.

இதயத்தில் அடிபட்டதைப் போல் உணர்ந்த கலையமுதன் தான் பேசிய வார்த்தைகள் அவளின்

இதயத்தை எந்த அளவிற்கு ரணமாக்கியுள்ளது என்பதைப் புரிந்துக் கொண்டான்.

''மது'' என்று குலுங்கி அழுதவளை தலையை வருடி ஆறுதல் படுத்த முயன்றான் மதுபாலன்.

உள்ளே சென்று அவளின் புடவையை எடுத்து வந்த கலையமுதன் அவள் மீது போர்த்திவிட்டான். திடுக்கிட்டு திரும்பியவள் அவனைக் கண்டதும் மிக அதிக வேதனையுடன் மதுபாலனின் தோளில் முகம் புதைத்தாள்.

காவல்துறை நண்பன் ராகவ்வை கைது செய்து அழைத்துச் சென்றான்.

அழுகையோடே சென்று புடவையை கட்டிக் கொண்டு வந்த மகிஷாவை மதுபாலனும், கலையமுதனும் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

* * *

வீட்டிற்கு வந்த பிறகும் மகிஷாவின் அழுகை நிற்கவில்லை.

கலையமுதன் பெண் டாக்டர் ஒருவரை அழைத்து வந்தான்.

மகிஷாவை பரிசோதித்த டாக்டர் ''அவளுக்கு ஒன்றும் ஆகவில்லை'' என கூறிய பிறகே அந்த வீட்டிலிருந்த அனைவரும் நிம்மதியை அடைந்தனர்.

ஆனால் மகிஷா ஏன் தொடர்ந்து அழுகிறாள் என்ற காரணம் மட்டும் யாருக்குமே புரியவில்லை.

அவளின் நிலைக் கண்டு பயந்து போன கலையமுதன் தன் வீட்டில் காரணமொன்றை சொல்லி விட்டு மகிஷாவின் வீட்டிலேயே தங்கிக் கொண்டான்.

''ஏன் இப்படி அழுகிறாய் மகிஷா?''

கவலையுடன் வினவினர் ஹேமாவதியும், மாதரசியும்.

'ஒன்றுமில்லை' என தலையசைத்தவள் மீண்டும் அழ,

''தூங்கி எழுந்தால் சரியாகி விடுவாள் ஆன்ட்டி!'' என்ற மதுபாலன் அவளை அவளது அறைக்கு அழைத்துச் சென்று கட்டிலில் படுக்க வைத்தான்.

இரவு வெகுநேரம் ஆகிவிட்டதால் மற்றவர்களும் உறங்கச் சென்று விட்டனர்.

மகிஷா தன்னைப் பார்த்துதான் அதிகமாக அழுகிறாள் எனப் புரிந்துக் கொண்ட கலையமுதன் ஜன்னலுக்கு வெளியே நின்றபடி அவள் அறியாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மதுபாலன் மகிஷாவின் அருகிலேயே அமர்ந்திருந்தான்.

அவள் அப்படியிருந்தும் கூட ''மது, மது!'' என பிதற்றுவதை நிறுத்தவே இல்லை.

''மகி, என்ன ஆச்சு? ஏன் இப்படி அழுகிறாய்?''

பொறுக்க முடியாமல் கேட்டான் மதுபாலன்.

''ஏ, எனக்கு பயமாயிருக்குடா மது!'' என்றவள் மீண்டும் குலுங்கி அழ அரம்பித்து விட்டாள்.

''ஒரு ரத்தக் காட்டேரி பயமாயிருக்குன்னு சொல்வதை என் வாழ்நாளிலேயே நான் இன்றைக்கே தான் கேட்கிறேன்!'' எனச் சொன்னவன் சிரிக்க ஆரம்பிக்க,

''ஏய், போடா!'' என்ற மகிஷாவும் அழுகையை மறந்து சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

அவளின் சிரிப்பைக் கண்டவன், அவளின் மனநிலையை அப்படியே இருக்க வைக்க நினைத்தான்.

''மகி, நான் நெட்டில் ஒரு பேய் கதை படித்தேன். அதில் வருகின்ற பேய் உன்னை விடவும் பயங்கரம். அந்தக் கதையைச் சொல்கிறேன். கேள்!'' என்றவன் அந்தக் கதையை மெது மெதுவாக விவரித்துச் சொன்னான்.

அந்தக் கதையை அவன் முழுவதும் முடிப்பதற்குள் மகிஷா உறங்கிப் போய் விட்டாள். அவள் உறங்கியதை உறுதி செய்துக் கொண்டவன் மெல்ல எழுந்து வெளியே வந்தான்.

அறையின் வாயிலில் கலையமுதன் நிற்பதைக் கண்டவன்,

''நீ தூங்கவில்லையா அமுதா?'' என்றான்.

''ம்பச், தூக்கம் வரவில்லை பாலா. சரி நீ சென்று தூங்கு! நான் அவளைப் பார்த்துக் கொள்கிறேன்.''

''இவள் மேல் இவ்வளவு பாசம் வைத்துள்ளாயே! பிறகு ஏன் அமுதா அன்றைக்கு இவளிடம் அப்படி நடந்துக் கொண்டாய்?''

''அதைப் பற்றி எதுவும் கேட்காதே பாலா. அமைதியா சென்று தூங்கு, போ!'' என்றவன் அவனை அனுப்பி விட்டு மகிஷாவின் அருகே வந்தான்.

நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தவளைக் கண்டவன் சற்று தள்ளி இருந்த நாற்காலியில் அமர்ந்துக் கொண்டான்.

* * *

நள்ளிரவு மணி இரண்டை தாண்டியிருக்கும்.

நாற்காலியிலேயே அசந்து தூங்கிப் போயிருந்தான் கலையமுதன்.

''வேண்டாம். ராகவ். என்னை விட்டு விடு!''

மகிஷாவின் உளறலில் திடுக்கிட்டு விழித்தான். அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மகிஷா உளறியபடி கட்டிலின் மேல் உருண்டாள்.

உளறியபடி உருண்டவள் கீழே விழ இருந்த நேரத்தில் வேகமாய் ஓடிச் சென்று அவளை தாங்கிப் பிடித்தான் கலையமுதன்.

கண்களைத் திறந்து மிரள மிரள விழித்தவள் தான் கலையமுதனின் கரங்களில் இருப்பதைக் கண்டு மேலும் விழித்தாள்.

அவளைக் கட்டிலில் படுக்க வைத்தவன், நாற்காலியை எடுத்து வந்து அவளருகே போட்டு அதில் அமர்ந்தான்.

''கனவு கண்டாயா?'' வாஞ்சையுடன் கேட்ட வனிடம்,

''ம்'' என தலையாட்டினாள்.

''சரி, அந்த ராகவ் உன்னை என்ன செய்தான்?'' எதற்காக அப்படி அழுதாய்?''

''அவன் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் மட்டும் அப்படியே நம்பி விடப் போகிறீர்களா? உயிர் நண்பனோடே என்னை இணைத்து சந்தேகப் பட்டு விட்டீர்கள். அப்படியிருக்கையில் எவனோ ஒருவனுடன் இரண்டு, மூன்று மணி நேரம் தனியாக இருந்த என்னை நம்பி விட போகிறீர்களா? ஊரில் உள்ளோரோடு சேர்ந்து நீங்களும் எனக்கு கற்பிழந் தவள் என்று பட்டம் கட்டத்தானே!''

அவள் மேலும் கூறும் முன் அவளின் கன்னத்தில் ஒரு அறை விட்டவன்,

''என்ன பேசுகிறாய் நீ? உன்னை நான் சந்தேகப் படுவேனா? இது தான் நீ என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையா? நீயும், பாலாவும் ஒரே அறை யில் படுத்து உறங்கினீர்கள் என தெரிந்தும். அன்றைக்கும் கூட நான் உங்களைச் சந்தேகப்பட வில்லை. அப்படியிருக்கையில் நீ என் முன் அவ னுக்கு ஒரு முத்தம் கொடுத்ததற்காக சந்தேகப்படு வேனா?'' என்றான்.

புரியாமல் அவனைப் பார்த்தவள்,

''நீ, நீங்க என்ன சொல்றீங்க?'' என்றாள்.

''எல்லாவற்றையும் சொல்கிறேன். கேட்டுக் கொள்! எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கக் காரணம். நான் உன்னை நேசிக்கக் காரணம், நான் உன்னை காதலிக்கும் காரணம். நீ பாலாவின் உண்மை தோழி என்பதால்தான். நீ பாலாவிற்கு மிகச் சிறந்த தோழியாக மட்டும் நடந்துக் கொள்கிறாய். உண் மையை சொல்ல வேண்டுமானால் உங்களின் நட்பைப் பார்த்து நானே பொறாமைப் பட்டுள்ளேன். அதற்கு காரணம் எட்டு வருடங்களுக்கு முன் என் வாழ்க் கையில் நடந்த ஒரு சம்பவம்.

அப்போது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந் தேன். அங்கே மாலினி என்று எனக்கொரு தோழி அறிமுகமானாள். அது வரையிலும் பெண் தோழிகள் இல்லாத எனக்கு புதிதாக ஒரு தோழி கிடைத்ததை நினைத்து மிகவும் மகிழ்ந்தேன். தினமும் மணிக்கணக் காக என்னுடன் பேசுவாள் அவள். அந்த காலேஜில் இருந்த ஜிம்மில் நான் ஒர்க் அவுட் செய்யும் போது என்னையே விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருப் பாள்.

எனக்கு அப்போது கூடத் தெரியாது. அவள் ஒரு 'ஆம்பிள்ளை பொறுக்கி என்று!''

''என்ன, ஆம்பிள்ளை பொறுக்கியா?''

''ஆமாம். பொறுக்கி பொறுக்கி மாதிரி அவள் ஒரு ஆம்பிள்ளை பொறுக்கி! ஒரு நாள் என்னிடம் வந்து பச்சையாகக் கேட்டாள். என் உடம்பு வேண்டுமென்று!

அவள் கேட்டது எனக்கு முதலில் புரியவேயில்லை. 'என்னை லவ் பண்றாளோ?' என நினைத்து அவளிடம் கேட்டேன்.

ஆனால் அவள் 'லவ்வெல்லாம் இல்லை. உன் பாடி பிட் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. வேண்டு மென்றால் இதற்கு ஒரு ரேட் பேசிக் கொள்ளலாம்' என்றாள்.

அவள் என்னை ஒரு விபச்சாரன் போல் எண்ணி விட்டாள். அவளைத் தோழியாக நினைத்து பழகிய தற்கு என் மீதே எனக்கு கோபம் வந்தது. அவளிடம் 'முடியாது' என சொல்லி விட்டு விலகி விட்டேன். ஆனால் அவள் என்னை விடவில்லை.

ஒரு நாள் வழக்கம் போல் ஜிம்மில் ஒர்க் அவுட் செய்துக் கொண்டிருந்தேன். என்னுடன் சேர்ந்து ஒர்க் அவுட் செய்பவர்கள் யாருமே அன்றைக்கு ஜிம்மில் இல்லை. நான் மட்டும் தான் அங்கே தனியாக இருக்கிறேன் எனப் புரிந்த நொடியே ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என எனக்குப் புரிந்து விட்டது.

நான் 'இங்கிருந்து சென்று விடலாம்' என நினைத்த வேளையில் அங்கு வந்தாள் மாலினி. அவளின் ஆசையை நான் நிறைவேற்றா விட்டால் நான் அவளிடம் தவறாக நடந்துக் கொண்டதாகச் சொல்லி கூச்சலிடுவதாகக் கூறினாள்.

என்னுடைய பாடி பிட் அவளை சிந்திக்க விட வில்லை என கூறிக் கொண்டு என்னை அணைக்க

வந்தாள். எனக்கு வந்த கோபத்தில் அவளது கன்னத்தில் பளீரென ஒரு அறை விட்டு விட்டேன்.

உடனே அவள் அவளின் கை விரல் நகங்களை கொண்டே அவளின் முகத்திலும், கழுத்திலும், கைகளிலும் கீறிக் கொண்டாள். அவள் போட்டிருந்த உடைகளை அவளாகவே தாறுமாறாக கிழித்துக் கொண்டு கூச்சலிட ஆரம்பித்து விட்டாள்.

சத்தம் கேட்டு அங்கு வந்தவர்களிடம் நான் அவளைக் கெடுக்க முயற்சித்ததாகக் கூறி, பொய்யாக அழுது நடித்தாள். விசயம் கல்லூரியின் மேலிடம் வரை சென்றது. அனைத்து இடத்திலும், அனைவரும் அவளுக்கே சப்போர்ட் செய்தனர்.

அவளின் உடலில் நகக் கீறல்கள். ஆனால் என் விரல்களிலோ நகமேயில்லை. இதை நான் எல்லோ ரிடமும் எடுத்துச் சொல்லியும் கூட யாரும் என்னை நம்பவில்லை.

ஆதாரம் இருந்தும் தோற்றுப் போவது 'எவ்வளவு கொடுமையான ஒரு விசயம் தெரியுமா? அந்தக் கொடுமையை நான் அன்று அனுபவித்தேன். அன் றைக்கு நான் சந்தித்த அவமானம் எவ்வளவு கொடூர மான ஒரு அவமானம் தெரியுமா?

அன்றிலிருந்து நான் பெண்களை வெறுத்தேன். எனக்கு அவமானம் தேடி தந்த என் உடம்பை வெறுத் தேன். அந்தக் கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிக்கு மாறினேன். அம்மா, தங்கை இருவரைத் தவிர வேறு

பெண்களிடம் பேசுவதையே வெறுத்தேன். அந்த ஒரு சம்பவம் என் வாழ்க்கையையே அடியோடு புரட்டிப் போட்டு விட்டது.

எட்டு வருடங்களுக்குப் பிறகு என் வாழ்க்கையில் பழைய வசந்தம் வீசக் காரணம் நீ என் வாழ்வில் வந்ததால்தான்! நீயும், பாலாவும் தொட்டுப் பேசிக் கொண்டால், கூட உங்களுக்குள் தவறான உணர்ச்சிகள் எதுவும் தோன்றுவதில்லை. அந்த அளவிற்கு உங்கள் நட்பு புனிதமானது. இருவரும் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்! ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்கிறீர்கள். ஆனால் மற்றவர்களிடம் உங்கள் நட்பை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறீர்கள். அந்த அளவிற்கு உங்கள் நட்பு அழகானது. தான் ஒரு ஆண் என்று கூட பார்க்காமல் உனக்காக எல்லா வித உதவியையும் செய்கிறான் பாலா. அந்த அளவிற்கு உங்கள் நட்பு சென்ஸிட்டிவானது.

இப்படிப்பட்ட உங்கள் நட்பையா நான் சந்தேகப் படுவேன்?

அதுவுமில்லாமல் நீ என் தேவதை. என்னுடைய போலீஸ் நண்பன் ஹாஸ்பிட்டலிலிருந்து எனக்கு போன் செய்தான். அந்த ராகவ்வை நீ புரட்டி எடுத்ததாகவும், அதற்காக அந்த ராகவ் இன்னும் ஒரு வாரத்திற்கு பெட் ரெஸ்ட் எடுக்க வேண்டும் என்றும் கூறினான்.

ஆதாரம் இருந்தும் கூட நான் வாழ்க்கையில் ஒரு முறை தோற்று விட்டேன். ஆனால் நீ என்னவள். உன்னை நான் நம்புவதற்கு எந்த ஆதாரமும் தேவையேயில்லை. ஏனெனில் நீ என் உயிரின் பிரதி பிம்பம்!''

''அப்படியென்றால் அன்றைக்கு.''

சந்தேகத்துடன் கேட்டவளை ஆழப் பார்வை பார்த்தவன்,

''ஸாரி ஸ்வீட்டி! ஒரு ப்ளாக் மெயிலுக்காக நான் அன்றைக்கு அப்படி நடித்து விட்டேன்!'' என்றான்.

15

''ப்ளாக் மெயில்? என்ன ப்ளாக் மெயில்? யாரை பிளாக் மெயில் செய்தீர்கள்?'' அச்சத்துடன் கேட்டாள் மகிஷா.

அவளை சந்தேகமாக பார்த்த கலையமுதன்,

''உனக்கு விசயம் எதுவும் தெரியாதா?'' என்றான்.

''எ, என்ன என்ன விசயம்?''

''பாலாவுக்கும், என் தங்கைக்கும் திருமணம் நடக்கப் போகிற விசயம்?''

''என்ன?''

அதிர்ச்சியுடன் கேட்டவள் எழுந்து அமர்ந்து விட்டாள்.

''சரி. நான் ஒன்று கேட்கிறேன். சொல். உனக்கும், பாலாவுக்கும் ஒரே நாளில், ஒரே மேடையில் திரு மணம் என்று தானே உங்களுக்குள் டீல்! அப்படி யிருக்கையில் நமக்கு மட்டும் திருமணம் என்கிற போது உனக்கு சந்தேகம் தோன்றவில்லையா?''

''அ, அதுவந்து, மதுவிடம் நான் இதைப் பற்றிக் கேட்டேன். அவன் தான். அவனுடைய ப்ரின்ஸஸ் ஒரு கிறிஸ்டியன் என்றும், அவளின் வீட்டில் சம்மதம் பெற பல நாட்களாகும் என்றும், நமக்கு விரைவில் திருமணம் நடத்த வேண்டுமென்று உங்களின் அப்பா, அம்மா அவசரப் படுவதாகவும், அதனால் நமக்கு திருமணம் உடனே நடந்தே ஆக வேண்டும் என்றும் கூறினான்.''

'பாலாவா இவ்வளவு பொய் சொன்னான்?' என முணுமுணுத்தவன்,

''சரி. நீ எப்படி இதற்கு ஒத்துக் கொண்டாய்?'' எனக் கேட்டான்.

''அ, அவன்தான் என்னை ப்ளாக் மெயில் செய்தான்.''

''எ, என்ன ப்ளாக் மெயில்?''

''நான் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாவிட்டால் அவன் வாழ்க்கை முழுவதும் பிரம்மச்சாரியாக வாழப் போவதாக கூறி என்னை மிரட்டினான்!''

''பளாக் மெயில் செம வித்தியாசமாக இருக்கே! அவன் இப்படி கூறி மிரட்டியதில் கூட ஆச்சரிய

மில்லை. ஆனால் அதை. நீ அப்படியே குழந்தை போல் கேட்டு நம்பியுள்ளாயே. யூ ஸோ ஸ்வீட்!'' எனக் கூறியபடி அவளின் கன்னத்தை கிள்ளினான் அவன்.

அவனின் கையை தட்டி விட்டவள்,

''இந்த கொஞ்சலுக்கு ஒன்றும் குறைச்சலில்லை. முதலில் நான் கேட்பதற்கு பதில் சொல்லுங்கள். இங்கே எனக்குத் தெரியாமல் இன்னும் என்னவெல் லாம் நடந்துக் கொண்டிருக்கிறது?'' என்றாள்.

''கூல் ஸ்வீட்டி. எல்லாவற்றையும் சொல்கிறேன். கேள். உன்னைப் பெண் பார்த்த வந்த அன்றே என் அம்மாவுக்கு பாலாவை ரொம்பப் பிடித்து விட்டது. அவனுக்கும், என் தங்கைக்கும் சம்மந்தம் பேசலாம் என அப்போதே அவர்கள் முடிவு செய்து விட்டார்கள். என் தங்கை டெல்லியிலிருந்து வந்ததும். நான் அவளிடம் மதுபாலனைப் பற்றிக் கூறினேன். அவ ளிடம் அவனின் போட்டோவையும் காட்டினேன்.

அவனை போட்டோவில் பார்த்ததும் அவள் தனக்கும் சம்மதம் என்று கூறி விட்டாள். இதை உங்களிடம் சொல்லத்தான் நான் அன்றைக்கு இங்கே வந்தேன். இங்கு வந்த பின் தான் தெரிந்தது பாலா! ட்ரெயினில் ஒரு பொண்ணைப் பார்த்ததும், பார்த்த நொடியே அவளை விரும்பியதும்!

என் தங்கையால் இப்படி ஒரு ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ளவே. முடியாது. அதனால் தான் அவனை

வழிக்கு கொண்டு வருவது எப்படி? என யோசித்துக் கொண்டிருந்தேன். அப்போது தான் நீ அங்கே வந்தாய். அவன் காதலிக்கும் விசயத்தை அறிந்ததும் மகிழ்ச்சியில் அவனுக்கு முத்தம் தந்தாய்!

நானும் வேறு வழியில்லாமல் என் தூண்டிலுக்கு உன்னை இரையாக்கி விட்டேன். ஐ, யம் ஸோ ஸாரி பேபி!''

''கொஞ்சம் புரியும்படி சொல்கிறீர்களா?'' எரிச்சலுடன் கேட்டவளை வியப்புடன் பார்த்தவன்,

''மேட்டர் இஸ் சிம்பிள் ஸ்வீட்டி! நீ அவனுக்கு முத்தம் தந்ததை காரணம் காட்டி முதலில் உன்னுடன் சண்டையிடுவதாக நடித்தேன். நீயும் அதை நம்பி விட்டாய். நான் உன்னை ஏமாற்றி விட்டதாக நினைத்து பாலாவிடம் அழுதாய். அவன் உன் கண்ணீரை துடைக்கும் பொருட்டு என்னிடம் சமாதானத்திற்கு வந்தான்.

'நீ என் தங்கையை திருமணம் செய்துக் கொண்டால் தான் நான் உன் தோழியை திருமணம் செய்துக் கொள்வேன்' என்று ஒரு சின்ன ப்ளாக் மெயில் செய்தேன்.

அவனும் நட்பு தான் முக்கியம். தோழி தான் முக்கியம் என்று தன் காதலைத் துறந்து என் தங்கையைத் திருமணம் செய்துக் கொள்ள சம்மதித்து விட்டான்!'' என்றான் வெகு சாதாரணமாக.

அவனை உறுத்து பார்த்தவள்,

''உங்களை போய் ஹீரோ என்று நினைத்தேனே! கடைசியில் நீங்கள் அல்லவா. இந்த கதைக்கே வில்லனாகி விட்டீர்கள்? துரோகி! உங்களை போய் காதலித்தேனே!'' என்றவள் தன்னருகில் இருந்த தலையணையை எடுத்து அவன் மீது வீசினாள்.

''கூல் பேபி! சத்தம் போடாதே! பிறகு தூங்கி கொண்டிருப்பவர்கள் எழுந்து வந்து விடப் போகிறார்கள்!''

''ச்சீ! என்னிடம் எதுவும் பேசாதீர்கள். முதலில் இந்தத் திருமண ஏற்பாட்டை நிறுத்துங்கள்! என் நண்பனின் காதலைக் கொன்று என் காதல் வாழ வேண்டிய அவசியமில்லை!''

சட்டென முகம் மாறியவன் எழுந்து அவளருகே வந்தான்.

''இட்ஸ் டூ லேட் ஸ்வீட்டி! திருமண பத்திரிகை அடிக்க தந்தாகி விட்டது. இன்னும் பத்து நாட்களில் நமக்கு நிச்சயதார்த்தம். அதற்காக உறவினர்களை அழைத்தாகி விட்டது. நம் இருவருக்கும் திருமணம் நடக்கவில்லையென்றால் கூடப் பரவாயில்லை. நான் உன்னை நினைத்தே வாழ்க்கை முழுவதும் வாழ்ந்து விடுவேன்.

ஆனால் என் தங்கைக்கு நடக்க விருக்கும் திருமணத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தது. பிறகு நான் மனிதனாகவே இருக்க மாட்டேன்!

என் தங்கை ஆசைப்பட்டது எதுவும் நடக்காமல் இருந்ததில்லை. இப்போது அவள் பாலாவை

போட்டோவில் பார்த்து விட்டு அவனைக் கணவனாக நினைத்துக் கற்பனையிலேயே வாழ ஆரம்பித்து விட்டாள். அவளை பாலா திருமணம் செய்து கொள்ள மறுத்தான் என்றால் பிறகு நான் உன் நண்பனை கொல்லக் கூடத் தயங்க மாட்டேன். இது என் உயிராய் நேசிக்கிற உன் மீது சத்தியம்!'' என கடுங்குரலில் பேசியவன்,

''ஏதாவது டபுள் கேம் விளையாடலாம் என நினைத்து விடாதே! அதன் பிறகு விபரீதம் முழுக்க உன் நண்பனுக்கு மட்டும் தான்!'' என மிரட்டலும் விடுத்தான்.

பயத்தில் உறைந்திருந்தவளைக் கண்டு சிறிது மனமிறங்கியவன்,

''இப்படி ஒரு சிச்சுவேஷனில் உன்னை சிக்க வைத்ததற்கு ஸாரி ஸ்வீட்டி! உனக்கு உன் நண்பன் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு எனக்கு என் தங்கை முக்கியம். அதனால் விபரீதமாக எதையும் யோசிக்காமல் அமைதியாக படுத்து தூங்கு. குட் நைட்!'' என்றவன் அங்கிருந்து வெளியேறி நடந்தான்.

வெளியே தெரிந்த காரிருளைக் கண்டவன் தன் கை கடிகாரத்தை திருப்பிப் பார்த்தான்.

மணி நான்கு முப்பது.

அதே நேரத்தில் தன் வீட்டிலிருந்து வெளியே வந்தான் மதுபாலன்.

கலையமுதன் கிளம்பிச் செல்வதைக் கண்டவன் வேகமாக அவன் அருகே சென்றான்.

''புறப்பட்டு விட்டாயா அமுதா? விடிந்த பிறகு செல்லக் கூடாதா?'' என அக்கறையுடன் வினவினான்.

''பரவாயில்லை பாலா! நான் கிளம்புகிறேன். ம், அப்புறம். உன் ப்ரெண்ட் எழுந்து விட்டாள்! அனேகமாக உன்னை தான் எதிர்பார்த்து காத்திருக்கிறாள் என நினைக்கிறேன். சென்று பார்!'' என்றவன் தன் பைக்கில் ஏறி புறப்பட்டு விட்டான்.

'ஏன் இவன் குரலில் இவ்வளவு வில்லத்தனம்?' என யோசித்த மதுபாலன் மகிஷாவின் அறைக்குச் சென்றான்.

கலையமுதன் சொல்லிச் சென்றதையே திரும்பத் திரும்ப யோசித்த படி அமர்ந்திருந்தாள் மகிஷா.

அவளின் அறைக்குள் நுழைந்த மதுபாலன்,

''மகி, ஏன் இந்த நேரத்தில் எழுந்து அமர்ந்துள்ளாய்?'' எனக் கேட்டபடியே அவளருகே வந்தான்.

அவனை வெறித்துப் பார்த்தவள்,

''ஏன்டா இப்படி செய்தாய்?'' என்றாள்.

''எப்படி?''

கேட்டுக் கொண்டே நாற்காலியில் அமர்ந்தான் அவன்.

''உன்னுடைய பிரின்ஸஸ் யார்? நான் அவளைப் பார்க்க வேண்டும்! அவள் கிறிஸ்டியன் தானா என நான் தெரிந்து கொள்ள வேண்டும்!''

''மகி!''

மென்று விழுங்கியவனை பொருட்படுத்தாதவள்,

''உனக்கு கலையமுதனின் தங்கை இளவரசியைத் தெரியுமா? தெரியாது என்று என்னிடம் பொய் சொல்லாதே! அவளுக்கும் உனக்கும் திருமணம் நடக்க விருப்பது எனக்குத் தெரியும்!'' என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

''உ, உனக்கு எப்படித் தெரியும்?''

''கலையமுதன் எல்லாவற்றையும் சொல்லி விட்டார். அவர் உன்னை ப்ளாக் மெயில் செய்தது. நீ எனக்காக தன் காதலை மறந்தது. எல்லாவற்றையும் சொல்லி விட்டார்!''

''ஹேய், லூஸு. நீயாகக் கண்டதையும் கற்பனை செய்து கொள்ளாதே! ட்ரெயினில் பார்த்த பெண்ணை எல்லோரும் தான் காதலிப்பார்கள். அதற்காக அவளையே திருமணம் செய்து கொள்ள முடியுமா? நானாகவே யோசித்து தான் இந்த முடிவை எடுத்தேன். என்னை யாரும் ப்ளாக் மெயில் பண்ணவில்லை.

ப்ரின்ஸஸெல்லாம் நமக்கு கற்பனையில் மட்டும் தான் சரியாக வருவாள். ஆனால் நிஜத்தில் இளவரசி தான் சரியாக வருவாள். நீயாக எதையாவது யோசித்து டென்சன் ஆகாதே!''

''என்னிடம் பொய் சொல்ல ட்ரை பண்ணாதே மது! இந்தக் கல்யாணம் வேண்டாம் நிறுத்தி விடலாம்! ப்ளீஸ்டா!''

''மகி இதொன்றும் விளையாட்டில்லை. வாழ்க்கை! கலையமுதன் உன்னை உயிருக்குயிராக நேசிக்கிறான். நீ ராகவ்விடம் சிறைபட்டுக் கொண்டது தெரிந்ததும் அவன் எப்படி துடித்து விட்டான். தெரியுமா? அவன் உன்னை கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொள்வான். அதனால் நீ எதையும் யோசிக்காமல் இரு!'' என்றவன் உடனே அங்கிருந்து சென்று விட்டான்.

16

மகிஷாவின் மனதில் புயல் அடித்துக் கொண்டிருந்தது.

மதுபாலனின் மனதில் இன்னமும் அவனது ப்ரின்ஸஸ் தான் இருக்கிறாள் என்பதில் மகிஷாவுக்கு எந்த வித சந்தேகமும் இல்லை.

கலையமுதனின் மனதில் தன் மீது எல்லையில்லா அன்பு இருப்பதிலும் மகிஷாவுக்கு சந்தேகம் இல்லை. ஆனால்.

மதுபாலனுக்கு ப்ரின்ஸஸை விட நட்பு முக்கியம்!

கலையமுதனுக்கு காதலை விட தங்கை முக்கியம்!

இப்படி ஒரு வித்தியாசமான பிரச்சனையை எப்படி கையாளுவது என்று மகிஷாவுக்கு சுத்தமாக புரியவில்லை.

அவள் பலவாறு யோசித்து பார்த்ததில் பிரச்சனையின் ஆரம்ப பள்ளி இளவரசி தான் என்று புரிந்தது.

இளவரசியிடம் பேசினால் தான் பிரச்சனையை ஒரு முடிவுக்கு கொண்டு வர முடியும் என உணர்ந்த மகிஷா அப்போதே வீட்டில் சொல்லிக் கொண்டு கலையமுதனின் வீட்டிற்கு புறப்பட்டாள்.

* * *

கலையமுதன் வீட்டின் காலிங் பெல்லை அழுத்தி விட்டு படபடப்போடு நின்றாள் மகிஷா.

மணி பதினொன்றுக்கும் மேலாகி விட்டது. கலையமுதன் கல்லூரி சென்றிருப்பான் என நினைத்து வந்தவளுக்கு கதவை திறந்தது கலையமுதன் என தெரிந்ததும் ஏமாற்றமே மிஞ்சியது.

''ஸ்வீட்டி, உள்ளே வா!''

முப்பத்திரண்டு பற்களையும் காட்டி சிரித்தபடி அழைத்தவனை கண்டு பல்லை கடித்தவள்,

''ஸ்வீட்டின்னு கூப்பிடாதீங்க. எனக்கு எரிச்சலாக இருக்கு!'' என்றாள். அவளை கண்களை விரித்து வியப்போடு பார்த்தவன்,

''இன்னும் பதினாறு நாட்களில் நீ எனக்கு மனைவியாக போகிறாய், உன்னை ஸ்வீட்டி, க்யூட்டி, ஹார்ட்டி இப்படி எப்படி வேண்டுமானாலும் கூப்பிட எனக்கு உரிமை உள்ளது!'' என்றான்.

''அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம்.''

''ஓ! என்னுடன் சண்டை போடுவதற்காக வந்துள்ளாயா? சரி, சரி, உள்ளே வா, உட்கார்ந்து ஆர அமர சண்டை போடலாம்!'' என்றவனை வெறுப்புடன் பார்த்து விட்டு உள்ளே நுழைந்தாள் மகிஷா.

உள்ளே வந்தவளைக் கண்ட மாதவி,

''மகிஷாவா? வா, வா இப்படி உட்கார்' என்ன சாப்பிடுகிறாய்?'' எனக் கேட்டு உபசரித்தாள்.

''இல்லை, எதுவும் வேண்டாம்!''

''உன் முகம் ஏன் ஒரு மாதிரியா இருக்கு? இவன் உன்னுடன் சண்டை ஏதும் போட்டானா?''

கலையமுதனை காட்டி கேட்டாள் மாதவி.

''இல்லை. அதெல்லாம் இல்லை!''

வலிய வரவழைத்த புன்னகையுடன் அவசரமாக கூறினாள் மகிஷா.

''சரி. நீங்கள் இருவரும் பேசிக் கொண்டு இருங்கள். நான் சென்று உனக்கு குடிக்க ஏதாவது கொண்டு வருகிறேன்!'' என்ற மாதவி கிச்சனுக்கு சென்றாள்.

மாதவி சென்றவுடன் கலையமுதன் மகிஷாவை வேண்டுமென்றே சீண்ட நினைத்து அவளை நெருங்கி அமர்ந்து அவளது தோளில் கைப் போட்டான்.

சட்டென அவனது கையை தட்டி விட்டவள்,

''நான் உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்!'' என்றாள்.

''கொஞ்சம் என்ன? நிறையவே பேசேன்!''

''நீங்கள் இன்றைக்கு காலேஜ் போக வில்லையா?''

''இது தான் பேச்சா? நான் கூட நீ ஏதோ ரொமேண்டிக்கா பேசப் போகிறாய்ன்னு நினைத்து கற்பனைக் கோட்டை கட்டி விட்டேன். சரி. நான் லீவ் எடுத்திருக்கேன்!''

''ஆனால் மது காலேஜ்க்கு போய் விட்டானே.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அவனுக்கு தான் ஒரு புது மாப்பிள்ளை என்கிற பீல் தோன்ற வில்லையோ, என்னமோ? ஆனால் எனக்கு பீல் ஆகுதே, நான் புது மாப்பிள்ளை என்று! அதனால் தான் லீவ் எடுத்துக் கொண்டேன். இதைக் கேட்கத் தான் வந்தாயா?''

''இல்லை.''

''பிறகு?''

''நா, நான் உங்கள் தங்கையுடன் பேச வேண்டும்!''

அவளைக் கூர்ந்து பார்த்தவன்,

''எதற்கு?'' என்றான்.

இவ்வளவு நேரம் கனிவு நிறைந்திருந்த அவனது குரல் இப்போது கடுமை நிறைந்ததைக் கண்டவளுக்கு மனதுக்குள் சிறு அச்சம் உருவானது.

அச்சப்பட்டால் நினைத்தது நடக்காது எனப் புரிந்து கொண்டவள்,

''நா, நான் உங்கள் தங்கையிடம் பேசிப் புரிய வைக்கிறேன்!'' என்றாள் தயக்கத்துடன்.

''எதைப் புரிய வைக்கப் போகிறாய்?''

''மது வேறு ஒரு பெண்ணை விரும்புவதை!''

''அது தானே பார்த்தேன்! நான் கூட நீ நாத்தனார் மேல் உள்ள கரிசனத்தில் பேச வந்துள்ளாயோ என நினைத்து விட்டேன்.

மகிஷா நான் ஒன்றும் அவ்வளவு முட்டாளில்லை. மது ட்ரெயினில் ஒரு பெண்ணைப் பார்த்து விரும்பியது இளவரசிக்கு தெரியும். அவளை பொறுத்த வரை இந்த ரயில் காதலெல்லாம் டைம் பாஸ் மாதிரி! வேண்டுமானால் உன் மனத் திருப்திகாக அவளிடம் பேசிப் பார். மேலே அவள் அறையில் தான் உள்ளாள். போய் பேசு'' எனக் கூறியபடியே படிகட்டுகளை கைக் காட்டினான்.

தயக்கத்துடன் எழுந்தவள் அதே தயக்கத்துடன் மேலே சென்றாள்.

இளவரசியின் அறை கதவை தட்டும் போது மகிஷாவுக்கு கால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டது.

‘அவள் என்ன சிங்கமா? புலியா? அவளும் என்னைப் போல ஒரு சாதாரண பெண் தானே? அவளிடம் பேச நான் ஏன் பயப்பட வேண்டும்? என அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே,

‘‘கம் இன்!’’ என்று உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

கதவை தள்ளிக் கொண்டு உள்ளே சென்றாள் மகிஷா. உள்ளே இளவரசி ஸோபாவில் அமர்ந்து லேப் டாப்பில் ஏதோ வேலை செய்துக் கொண்டிருந் தாள்.

அவளின் முன் சென்று நின்றாள் மகிஷா.

லேப்டாப்பிலேயே கவனமாக இருந்த இளவரசி.

‘‘ஒரு டீ கொண்டு வருவதற்கு இவ்வளவு நேரமா?’’ எனக் கேட்டுச் சீறினாள்.

‘இவள் யாரிடம் கேட்கிறாள்?’ குழம்பியபடி நின் றாள் மகிஷா.

‘‘கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தெரியாதா?’’ எரிச்சலுடன் நிமிர்ந்த இளவரசி மகிஷாவை கண் டதும் சந்தேகப் பார்வை பார்த்தாள்.

‘‘நீங்க, நீங்க மகிஷா, ரைட்?’’ கேள்வி கேட்ட இளவரசியிடம்,

‘‘ம’’ என்று தலையாட்டினாள் மகிஷா.

‘‘ஸாரி, நான் சர்வண்ட்டுன்னு நினைத்து முதலில் பேசி விட்டேன். உட்காருங்க.’’

அவள் கை காட்டிய இருக்கையில் அமர்ந்த மகிஷா இளவரசியை நேராகப் பார்த்தாள்.

போட்டோவை விடவும் நேரில் மிக அழகாக இருந்தாள். இன்னும் சொல்ல வேண்டுமானால் மதுபாலனுக்காகவே பிறந்தது போல் இருந்தாள்.

ஆனால் மதுபாலன் தான் வேறு பெண்ணை விரும்புகிறானே!

‘‘நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்!’’

‘‘ம், பேசலாமே!’’ என்ற இளவரசி லேப்டாப்பை மூடி வைத்து விட்டு மகிஷாவை நேராகப் பார்த்தாள்.

‘‘அது வந்து, மது ஏற்கனவே ஒரு பெண்ணை.’’

அவள் மேலே கூறும் முன் கை காட்டி நிறுத்தி னாள் இளவரசி.

‘‘அந்த ட்ரெயின்ல பார்த்த பெண் தானே?’’

‘‘ம்!’’

‘‘எனக்கு அந்த விசயம் தெரியும். ஸோ வேறு ஏதாவது பேசுங்க!’’

‘‘நான் சொல்ல வருவதை கொஞ்சம் முழுமையாக கேளுங்க. ப்ளீஸ் இளவரசி! அவன் அந்த பெண்ணை ரொம்ப டீப்பா லவ் பண்றான்!’’

‘‘ஸ்ஸ்ஸ், இந்த விசயத்தைப் பற்றி எதுவும் பேசாதீர்கள். பார்த்தவுடன் வருவதற்கு பெயர் லவ்

கிடையாது. இது ஜஸ்ட் இன்பாசுவேசன்! இதையும் மீறி அவரை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு! நான் என் வாழ்க்கையில் தினம் ஆயிரம் ஆண்களைப் பார்க்கிறேன். அவர்களில் யாரும் என்னை இந்த அளவிற்கு இன்ப்ரஸ் பண்ணது கிடையாது. போட்டோவில் பார்த்தே என் ஹார்ட் டேமேஜ் ஆனது அவர்கிட்ட மட்டும் தான்!

அவருடைய அமுல் பேபி பேஸ் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு!''

''ஆனால் அவனுக்கு உங்களைப் பிடிக்கவில்லையே!''

மகிஷா இதைக் கூறவும் இவளரசியின் முகம் திடீர் கோபத்தால் சிவந்தது.

''நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க! அனாவசியமாக எங்கள் இருவருக்கும் இடையில் வராதீங்க! அவரை எப்படி என் வழிக்குக் கொண்டு வருவதென்று எனக்குத் தெரியும். ஸோ. நீங்க உங்க வேலையைப் பார்த்துக் கொண்டு கிளம்புங்க!'' என்றவள் அறை வாசலை நோக்கிக் கை காட்டினாள்.

இப்படி ஒரு அவமானத்தை தன் வாழ்நாளிலேயே சந்தித்தது இல்லை மகிஷா.

முகம் கறுத்தவள் வெளியேற எழுந்து நடந்தாள்.

இரண்டடி சென்றவளை விரல் சொடுக்கி நிறுத்தினாள் இளவரசி.

உணர்ச்சிகளின்றி திரும்பிப் பார்த்தாள் மகிஷா.

''இனி மேல் அவரை மது. அவன், இவன் என்றெல்லாம் கூப்பிடாதிங்க! அது எனக்குப் பிடிக்கல. மைண்ட் இட்'' என்றவள் மீண்டும் லேப்டாப்பை திறந்து அதில் மூழ்கினாள்.

பூகம்பத்தையும், சூறாவளியையும் ஒன்றாக பார்த்தது போல் இருந்தது மகிஷாக்கு.

அந்த வீட்டில் இருக்கவே அவளுக்குக் கடினமாக இருந்தது. அதனால் வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

கீழே ஹாலில் மாதவி கொண்டு வந்து தந்த 'வேண்டாம்' என நாசூக்காக மறுத்தவள், மாதவியிடம் சொல்லிக் கொண்டு அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் அந்த வீட்டின் காம்பவுண்ட் கேட்டை நெருங்குகையில் அவளை கைத் தட்டி நிறுத்தினான் கலையமுதன்.

திரும்பிப் பார்க்காமலேயே அது கலையமுதன் தான் என அறிந்த மகிஷா கோபமாகத் திரும்பி அவனை முறைத்தாள்.

''நீ என்ன சிவ பெருமானா? நீ முறைத்து பார்த்தால் நான் பஸ்பமாகி விடுவேனா? கல்யாணப் பெண்ணிற்கு இவ்வளவு கோபம் ஆகாது பேபி!'' எனக் கூறிக் கொண்டே அவளை நெருங்கினான்.

''என்ன? என் தங்கையிடம் பேசினாயா? ரிசல்ட் பாஸிட்டிவா? நெகடிவா?''

நக்கலாகக் கேட்டவனை முறைத்துப் பார்த்தாள்.

''ம்ப்ச். பார்வையை மாத்து செல்லம். நீ சொன்னவுடன் கேட்பதற்கு என் தங்கை என்ன சுயபுத்தி இல்லாதவளா?''

''ஹூம். புத்தியாவது? சுய புத்தியாவது? உங்க அடங்காப் பிடாரி தங்கைக்கு வேறு ஆள் யாரும் கிடைக்கவில்லை போல! அதனால் தான் திட்டம் போட்டு மதுவை!''

அவள் முடிக்கும் முன்பு கலையமுதன் மகிஷாவின் கழுத்தை நோக்கி ஆவேசத்துடன் கை நீட்டினான்.

''என்ன, கொல்லப் போறீங்களா? உங்கள் தங்கையைப் பற்றிய உண்மையைச் சொன்னால் கோபம் பொத்திக் கொண்டு வருகிறதா?''

''ஏய்! நிறுத்து. என்ன, விட்டால் ரோம்ப ஓவராதான் பேசிக் கொண்டு போற? நான் உன்னை மனசார விரும்புகிறேன் தான். ஆனால் அதற்காக நீ என் தங்கையைப் பற்றி பேசுவதை பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க மாட்டேன். நினைவில் வைத்துக் கொள்'' என்றவன் கோபத்துடன் அங்கிருந்து நகர்ந்தான்.

17

தன் வீட்டிற்கு வந்த பிறகும் மகிஷாவிற்கு படபடப்பு குறையவேயில்லை.

'என் மதுவை நான் பெயர் சொல்லி அழைக்கக் கூடாதா? இனி அவனை வாடா, போடா என்று சொல்லக் கூடாதா? என் மதுவை நான் அவன், இவன் எனக் கூப்பிடக் கூடாதா? இல்லை இனி அவன் என் மது இல்லை. எவளோ ஒரு அடங்காப் பிடாரிக்கு கணவனாகப் போகிறான்.

பெயரை பார் இளவரசியாம். சரியான ராட்சஸி! ஒரு பேயிற்கு போய் பெண் வேசம் போட்டுள்ளார்கள்.

ஐயோ! அவள் கையில் என் மது சிக்கிக் கொண்டு என்னென்ன பாடு படப் போகிறானோ. தெரியவில்லையே!

இந்த ராட்சஸிக்கெல்லாம் வேறு ஆளா கிடைக்கவில்லை? பாழுங்கிணற்றில் யாராவது தெரிந்தே விழுவார்களா?

என் மது எவ்வளவு மென்மையான மனதுடையவன்! அவனுக்கா இப்படியொரு கர்வக்காரி மனைவியாக அமைய வேண்டும்?

நோ! இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது. என் காதல் கை கூட வில்லையென்றாலும் பரவாயில்லை. ஆனால் என் மதுவின் காதல் கண்டிப்பாக கை சேர்ந்தே ஆக வேண்டும்.'

ஒரு முடிவு எடுத்தவளாக தன் தந்தையைத் தேடிச் சென்றாள்.

''எ, எனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை. அதனால் இந்தத் திருமணத்தை நிறுத்தி விடுங்கள் அப்பா!''

அவளை வியப்புடன் பார்த்த சாந்தசீலன் சிரித்துக் கொண்டே,

''விளையாடாமல் அமைதியாக போம்மா!'' எனக் கூறிவிட்டார்.

அடுத்ததாக மகிஷா தேடிச் சென்றது மாதவியை.

மாதரசியோ இவள் சொல்ல வருவதை காதில் கூட வாங்கவில்லை.

சோமநாதனிடம் இதே நிலை தான்.

அதிர்ஷ்டவசமாக ஹேமாவதி மட்டும் மகிஷா சொன்னதைப் பொறுமையாக கேட்டாள்.

ஆனால் அவளும் கடைசியில்,

''திருமணத்திற்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்தாகி விட்டது. இனி திருமணத்தை நிறுத்துவ தென்பது முடியாத காரியம்!'' எனச் சொல்லிவிட்டு தன் வேலையை கவனிக்கச் சென்று விட்டாள்.

ஆக மொத்தத்தில் மகிஷாவின் கூக்குரல் அந்த வீட்டிலிருந்த யார் காதிலும் விழவேயில்லை.

எல்லோருடைய நாட்களுமே அழகாகத்தான் சென்று கொண்டிருந்தது. ஆனால் மதுபாலனுக்கும், மகிஷாவுக்கும் மட்டும் வேதனையுடன் நகர்ந்துக் கொண்டிருந்தது.

* * *

நிச்சயதார்த்த நாள்.

மண்டபம் ஒன்றில் நிச்சயத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அதிக உறவினர்களை அழைக்க வில்லையென்றாலும் கூட மண்டபத்தில் ஓரளவிற்கு கூட்டம் இருந்தது.

முதலில் கலையமுதன் மகிஷாவிற்கான நிச்சய தார்த்தம்.

நிச்சய பத்திரிகை வாசித்து முடிக்கப்பட்டதும் இருவரிடமும் மோதிரம் தரப்பட்டது.

மனம் முழுக்க வெறுப்பை மட்டும் நினைத்துக் கொண்டு கலையமுதனின் விரலில் மோதிரத்தை போட்டாள் மகிஷா.

அவளின் களையிழந்த முகத்தை கண்டதும் கலையமுதனுக்கு மனதிற்குள் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் ஒன்றும் பேசாமல் அவளுக்கு மோதிரத்தை மட்டும் அணிவித்தான்.

அடுத்தது மதுபாலன் - இளவரசிக்கான நிச்சய தார்த்தம்.

குனிந்த தலை நிமிரவில்லை மதுபாலன்.

கலையமுதனும் அவனையே கண்காணித்தபடி தான் இருந்தான்.

மனமேயில்லாமல் இளவரசி அணிவித்த மோதி ரத்தை ஏற்றுக்கொண்டான். அப்போதும் கூட அவளின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவேயில்லை.

இளவரசியும் அவனது பிடிவாதத்தை மெச்சிய படியே அவனிடம் தன் கரத்தை நீட்டினாள்.

அவனுக்கு அவளுடைய கரத்தைக் காணக் கூட இஷ்டமில்லை.

தரையை பார்த்தபடியே அவளது விரலில் மோதிரம் அணிவித்தான்.

இந்த இடத்தில் இளவரசிக்குப் பதிலாக கலை யமுதன் தன் கரத்தை நீட்டியிருந்தால் கூட அவ னுக்கும் மோதிரம் அணிவித்திருப்பான். ஏனெனில் அந்த அளவிற்கு அவனது இதயத்தில் இன்னமும் அவனது ப்ரின்ஸஸே குடியிருந்தாள்.

அவன் இளவரசியின் முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாதது மகிஷாவிற்கும் புரிந்து போனது.

மதுபாலனின் மனதில் இன்னமும் அவனது காதல் உயிரோடு தான் இருக்கிறது என அவளுக்கு புரிந்து போனது.

ஆனால்,

என்ன செய்வதென்று தான் அவளுக்குப் புரிய வில்லை.

நாட்கள் இடை நிறுத்தமின்றி நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

* * *

திருமண நாளும் வந்து விட்டது.

ஆனால் இந்த திருமணங்களை நிறுத்துவதற்கா வழி மட்டும் மகிஷாவின் மூளைக்கு எட்டவேயில்லை.

பாறாங்கல்லை சுமப்பவள் போல் மனதிற்குள் பாரத்தினைச் சுமந்து கொண்டு மணமேடையில் கலையமுதனின் அருகே அமர்ந்திருந்தாள்.

இவர்களுக்கு அருகிலேயே மதுபாலன் - இளவரசி ஜோடியும் அமர்ந்திருந்தது.

இங்கே மகிஷாவின் மனதில் புயல் அடித்துக் கொண்டிருந்தது. அங்கே மதுபாலன் மனதிலோ சுனாமியே அடித்துக் கொண்டிருந்தது.

அவனுக்கு அங்கே அமர்ந்திருப்பது முள்ளின் மேல் இருப்பது போல் தோன்றியது. அவனின் மூளைக் குள் யாரோ அபாய மணி அடிப்பதைப் போல இருந்தது.

மூச்சு விடவும் அவனுக்குச் சிரமமாக இருந்தது.

தலை குனிந்து அமர்ந்திருந்தவனின் விழிகளில் கண்ணீர் கசிந்தது.

மேற்கண்ட இரண்டு விசயங்களுக்கும் அடிப்படை காரணம் ஓம குண்டத்தில் இருந்து வரும் புகை தான் என நீங்கள் நினைக்கக் கூடாது. ஏனெனில் மற்றொரு அடிப்படை காரணம் அவனின் மனதில் நீங்கா இடம் பெற்று விட்ட பிரின்ஸஸ்தான்!

அவனின் மனநிலை அங்கிருந்த யாருக்குப் புரிந் ததோ, இல்லையோ மகிஷாவிற்குப் புரிந்தது. என்ன இருந்தாலும் உயிர்த் தோழி அல்லவா? நண்பனின் கஷ்டத்தை அறிந்தவளுக்கு வேதனையில் மனம் மரத்துப் போனது.

கடைசியாக ஒருமுறை முயற்சிக்கலாம் என எண்ணியவள், தன் அருகில் அமர்ந்திருந்த கலையமுதனை கெஞ்சுவது போல் பார்த்தாள்.

''என்ன மகிஷா?'' மெல்லிய குரலில் கேட்டவனிடம்,

''இந்தத் திருமணத்தை நிறுத்தி விடலாம். ப்ளீஸ்!'' என்றாள்.

அவளை எரிப்பதுப் போல் பார்த்தவன்,

''ஏய்! முட்டாள்! தாலி கட்டும் நேரத்தில் யாராவது திருமணத்தை நிறுத்துவார்களா? எனக்கு கோபம் ஏற்படுத்தும்படி பேசாமல் அமைதியாக இரு!'' என அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் கர்ஜித்தவன், அவளிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

மகிஷா வேதனையுடன் பார்வையைத் திருப்பி மதுபாலனை பார்த்தாள். அவனோ காதலியின் நினைவில் துளிர்த்த கண்ணீரை யாரும் அறியாமல் விரலால் சுண்டி விட்டான். ஆனால் அதை மகிஷா அறிந்ததை அவன் அறியவில்லை.

அவனது கண்ணீரைக் கண்ட மகிஷாவிற்கு மூளையில் எரிமலை பொங்கியது.

மதுபாலனுக்கும், இளவரசிக்கும் நடக்கவிருக்கிற திருமணத்தை இனிமேல் தடுக்கவே முடியாது என நினைத்தவளுக்கு இதயத்தில் பூகம்பம் வெடித்தது.

கண்களில் ததும்பி நிற்கும் கண்ணீரோடு நிமிர்ந்தவளுக்கு கோவிலுக்குள் நுழைந்த ராகவ் கண்ணில் பட்டான்.

அவளின் மூளையில் மின்னல் ஒன்று வெட்டியது.

'என் நண்பனின் காதல் வாழ்ந்தால் என் காதலும் வாழட்டும். என் நண்பனின் காதல் தோற்றால் என் காதலும் தோற்கட்டும்' என முடிவெடுத்தவள் கண்ணீரை துடைத்துக் கொண்டு கலையமுதனை பார்த்தாள்.

அவள் கையை தொடவும், அவன் திரும்பி பார்த்தான் 'என்ன?' என்று பார்வையிலேயே வினவினான்.

''இந்தத் திருமணத்தை நிறுத்த முடியுமா? முடியாதா?''

அவளது குரலில் புதிதாக சேர்ந்திருந்த வைராக்கியம் அவனை வியப்பில் ஆழ்த்தியது.

''முடியாது!'' என்றான். அவளை பார்த்து நமட்டு சிரிப்பு சிரித்தபடியே.

''அப்படியென்றால் நீங்களும் உங்கள் காதலை மறந்து விடுங்கள்!'' என்றவள் அமர்ந்திருந்த மனையிலிருந்து வேகமாக எழுந்தாள்.

எழுந்து அதே வேகத்தில் தங்களை நோக்கி வந்துக் கொண்டிருந்த ராகவ்விடம் ஓடினாள்.

''மகிஷா, என்ன பண்ற?''

அதிர்ச்சியுடன் அழைத்த பெரியவர்களை கை காட்டி நிறுத்தினான் கலையமுதன்.

பின்னர் அவனும் எழுந்து மகிஷாவை பின் தொடர்ந் தான்.

18

''ராகவ் நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்கிறீர்களா?'' என மகிஷா கேட்கவும் மொத்த பேரும் அதிர்ந்து நின்றனர்.

அதில் அதிகமாக அதிர்ந்தது ராகவ் தான்.

ஏனெனில் மகிஷாவின் திருமணத்தை நிறுத்த வேண்டும் இல்லையேல் சிறு கலாட்டாவாவது செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டு தான் அவன் இந்தத் திருமணத்திற்கே வந்திருந்தான்.

அப்படியிருக்கையில் மகிஷா கேட்டது அவனுக்கு ஆச்சரியத்தை அளித்ததில் வியப்பொன்றுமில் லையே!

''மகிஷா நீ என்ன பேசுற?''

அவளை தன்புறம் திருப்பியபடியே கேட்டான் கலையமுதன்.

அதற்குள் மதுபாலனும் எழுந்து அங்கே வந்து விட்டான்.

''மகி, நீ என்ன செய்ற?''

நடப்பது எதுவும் புரியாமல் கேட்டான் மதுபாலன்.

இவர்கள் இருவர் கேட்பதும் காதில் விழாதவளாக மகிஷா ராகவ்வை பார்த்தாள்.

''ப்ளீஸ்! சொல்லுங்க ராகவ். நீங்க என்னைத் திருமணம் செய்துக் கொள்கிறீர்களா?''

''மகிஷா, என்ன முட்டாள் தனம் இது?''

கோபமாக கேட்டான் கலையமுதன்.

மகிஷாவும் கோபமாக அவன் புறம் திரும்பினாள்.

''நான் செய்வதொன்றும் முட்டாள்தனமில்லை. நான் நன்றாக யோசித்து தான் இந்த முடிவை எடுத் துள்ளேன். என் நண்பன் எனக்காக அவன் காதலை மறந்து விட்டான். அதற்குப் பிராயசித்தமாக நானும் என் காதலை மறக்க துணிந்து விட்டேன்!''

''நீ எடுத்த முடிவு உனக்கே பைத்தியக்காரத்தன மாகத் தெரியவில்லை?''

''தெரியவில்லை. நீங்கள் உங்கள் தங்கைக்கும், மதுவிற்கும் நடக்கவிருக்கிற திருமணத்தை நிறுத் துங்கள். அப்போது நான் உங்களைத் திருமணம் செய்துக் கொள்கிறேன். இல்லையேல் நான் ராகவ்வை தான் திருமணம் செய்துக் கொள்வேன்!''

''எனக்கே செக் வைக்கிறாயா மகிஷா? நீ ஒன்றை நன்றாக புரிந்து கொள். இந்த ராகவ் ஒன்றும் உன்னை

காதலிக்கவில்லை. உன் அழகை மட்டும் தான் காதலிக்கிறான்!''

''அப்படியென்றால் நீங்கள் எப்படி? என் காதலைப் பணயமாக வைத்து என் நண்பனின் காதலை கொன்ற நீங்கள் எப்படிபட்டவர்?''

''மகி, நீ என்ன பேசுற? என்ன செய்ற? அமைதியாக சென்று மனையில் உட்கார்!''

மகிஷாவிடம் கோபமாக மொழிந்தான் மதுபாலன்.

''மது. நீ இதில் தலையிடாதே!''

''முட்டாள் மாதிரி நடந்துக் கொள்ளாதே மகி! நான் விரும்பி தான் இந்த திருமணத்திற்கு ஒத்துக் கொண்டேன்! நீயாக எதையாவது கற்பனை செய்து உன் வாழ்க்கையை அழித்துக் கொள்ளாதே!''

''என்டா மது இப்படி பொய் சொல்ற? இன்னமும் உன் மனதில் ப்ரின்ஸஸ்தான் இருக்கா!''

''ச்சே ச்சே! நீயாக எதையாவது கற்பனை செய்துக் கொள்ளாதே!''

''நீ சொல்வதை நான் நம்ப மாட்டேன். கொஞ்ச நேரத்திற்கு முன்பு கூட உன் கண்களில் கண்ணீரை பார்த்தேன் நான். எனக்காகத்தானே நீ இவ்வளவு துயரபடுகிறாய்?''

கேட்டவளை தன் புறம் திருப்பினான் கலையமுதன்.

''சரி. சொல்லு, அவன் மனதில் ப்ரின்ஸஸ் இருக்கிறாள் என்றால் உன் மனதில் நான் தானே

உள்ளேன்? என்னை மறந்தால் உனக்கு மட்டும் துயர் இல்லையா?''

''ஆமாம். என் மனதில் நீங்கள் தான் உள்ளீர்கள்! ஆனால் எனக்கு என் காதலை விட நட்பு தான் முக்கியம்!''

இதைக் கேட்டு அதிர்ந்த ராகவ் விரல் சொடுக்கி மகிஷாவை தன்புறம் திருப்பினான்.

''நீ, நீ இவனை லவ் பண்றியா?'' சந்தேகமாக கேட்டான்.

''எவன்டா இவன்? விடிய விடிய இராமாயணம் கேட்டு விடிந்து முடிந்ததும் சீதைக்கு இராமன் சித்தப்பனா என்றானாம்?'' என எரிச்சலுடன் கூறிய கலையமுதன்.

''ஆமாம் ராகவ் சார். நானும் மகிஷாவும் உயிருக் குயிரா லவ் பண்றோம். இப்போது ஒரு சின்ன மிஸ் ஸண்டர்ஸ்டேன்டிங். என்னைப் பழி வாங்குவதற்காக உங்களிடம் வந்து 'என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்' என்கிறாள். இருங்க ஒரு நிமிஷம். அன்றைக்கு ரெஸ்டாரண்டில் உங்களுக்குத் தெரிய வில்லையா. நானும், மகிஷாவும் லவ் பண்றது?'' என்றான்.

''இல்லை. அன்றைக்கு நீங்கள் இவளுக்கு பியான்ஸி என்று கூறினீர்கள் நீங்கள் தான் இவளை லவ் பண்ணுவதாக கூறினீர்கள்! ஆனால் இவள் உங்களை விரும்புவதைப் பற்றி சொல்லவேயில்லை!

மென்று விழுங்கியவனை புரியாமல் பார்த்த கலையமுதன்.

''ஸோ. நீங்க என்ன சொல்ல வரிங்க? கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்க!'' என்றான்.

''அது வந்து என்னவென்றால் நான். நான் உடம்பால் கெட்ட பெண்ணை கூட மனைவியாக ஏற்றுக் கொள்வேன். ஆ, ஆனால் மனதால் கெட்ட வளை மனைவியாக, ச்சீ, ச்சீ இதை நினைக்கவே எனக்கு கஷ்டமாக உள்ளது!''

''ஓ கிரேட்! வேண்டுமானால் உங்கள் பாலிசியை தஞ்சாவூர் கோவில் கல்வெட்டில் பதிக்கலாம். இப்போதைக்கு இங்கிருந்து கிளம்புகிறீர்களா? காற்று வரட்டும்!''

கலையமுதன் நக்கலாகக் கூறுவதைக் கூடப் பொருட்படுத்தாமல் அங்கிருந்து நகர்ந்தால் போது மென்று ஓடிவிட்டான் ராகவ்.

அவன் சென்றதும் கேலிச் சிரிப்புடன் மகிஷாவை பார்த்தான் கலையமுதன்.

''ஸ்வீட்டி, டைம் வேஸ்ட் பண்ணாமல் வா. முகூர்த்த நேரம் முடிந்து விடப் போகிறது!''

''மாட்டேன். என் நண்பன் சந்தோசத்தை இழந்து நிற்கையில் நான் மட்டும் எப்படி உங்களை சந்தோச மாகத் திருமணம் செய்துக் கொள்வேன்?''

''அதற்காக உன்னை அழவைத்தா உன் கழுத்தில் தாலி கட்ட முடியும்? சிறு பிள்ளை போல் அடம் பிடிக்காமல் வா!''

''முடியாது'' என தலையாட்டிவளிடம்,

''மகி, அமைதியாக சென்று மனையில் அமரு!'' என்றான் மதுபாலன்.

''முடியாது. உன் காதலைக் கொன்று என் காதல் வாழ வேண்டிய அவசியமில்லை!''

தீர்மானமாக கூறியவளை கண் கலங்க பார்த்தவன்,

''ஏன் மகி?'' என்றான்.

''ஏனென்றால் நான் உன் ப்ரெண்ட்டுடா!'' என்றவளுக்கும் கண்ணீர் கன்னத்தை தாண்டி ஓடியது.

''வேண்டாம் மகி, இப்படி அழுது என் மனதை கஷ்டப்படுத்தாதே! எனக்கு ஒரே ஒரு நாள் அறி முகமான பிரின்ஸஸை விடவும் என் உயிர் தோழி யான நீ தான் முக்கியம்!''

''நானும் அதையே தான் சொல்கிறேன். சில மாதங்களுக்கு முன் அறிமுகமான இவரை விட என் உயிர்த் தோழனான நீ தான் முக்கியம்!''

''மகிஷா, அப்படியென்றால் நீ நிச்சயமாக என்னைத் திருமணம் செய்துக் கொள்ள மாட்டாயா?''

வருத்தத்திற்கு பதிலாக குதூகல குரலில் கேட்ட கலையமுதனை வித்தியாசமாக பார்த்தவள்,

''மாட்டேன், என் மது ப்ரின்ஸஸை திருமணம் செய்துக் கொள்ள வில்லையென்றால் நான் நிச்சயம் உங்களைத் திருமணம் செய்துக் கொள்ள மாட்டேன்!'' என்றாள் உறுதியான குரலில்.

''ஹைய்யா! நான் ஜெயிச்சிட்டேன்! என் ஸ்வீட்டி யோட நட்பு தான் சிறந்தது!'' என மகிழ்ச்சியில் துள்ளிய கலையமுதனைப் புரியாமல் பார்த்தனர் மதுபாலனும், மகிஷாவும்.

''போ, நீ சீட் பண்ணிவிட்டாய்! இன்னும் சிறிது நேரம் பொறுத்திருந்தால் என் ஆள் அண்ணியை மூகூர்த்த மேடையில் அமர வைத்திருப்பார். அவரின் நட்பு தான் சிறந்தது என்று புரிய வைத்திருப்பார். நீ இடையில் புகுந்து கள்ள ஆட்டம் ஆடி விட்டாய்!'' என சிணுங்கிக் கொண்டே மேடையிலிருந்து இறங்கி வந்தாள் இளவரசி.

''ஜெயித்தது நான் தான். நீ ஒத்துக் கொண்டே ஆக வேண்டும் ப்ரின்ஸி!'' என கலையமுதன் கூறவும்,

திடுக்கிட்ட மதுபாலன்,

''ப்ரின்ஸி!'' என முனகிக் கொண்டே திரும்பி பார்த்தான்.

அங்கே அவனை பார்த்துப் புன்னகைத்தபடியே அவன் அருகே வந்தாள் ப்ரின்ஸி என்னும் ப்ரின்ஸஸ் என்றும் அழைக்கப்படும் இளவரசி.

''ப்ரின்ஸஸ் நீயா? நீ தானா இவளரசி? என்ன இது விளையாட்டு?'' கோபமாக கேட்டவனைப் பார்த்துக் கண்களால் கெஞ்சியவள்,

''ஸாரி டியர்! எல்லாம் இவனால் தான்'' எனக் கூறி கலையமுதனை கைக் காட்டினாள்.

''ஏய், கடைசியில் பார்த்தாயா. என்னை மட்டும் கோர்த்து விடுற! இதனால்தான் நான் உன்னிடம் எந்த விளையாட்டுக்குமே வருவது இல்லை!''

''விளையாட்டு என்றால் கடைசி வரை விளை யாட வேண்டும். நீ ஏன் குறுக்கே புகுந்து ஆட்டத்தை கலைத்தாய்? அதனால் தான் நான் உன்னை மட்டும் கைக் காட்டினேன்!''

''நான் ஒன்றும் ஆட்டத்தை கலைக்கவில்லை. இவர்கள் இருவர் நட்பில் சிறந்தது என் ஸ்வீட்டியின் நட்பு தான். ஸோ ஜெயித்தது நான் தான். அவ்வளவு தான் ரிசல்ட் தெரிந்து விட்டது. ஆட்டமும் முடிந்து விட்டது!''

''ஐயோ! இங்கே என்ன நடக்குதுன்னு கொஞ்சம் சொல்றீங்களா?'' மதுபாலனும், மகிஷாவும் ஒரே குரலில் கேட்டனர்.

''உங்க ப்ரண்ட்ஷிப்பை வைத்து ஒரு சின்ன கேம்'' என்ற கலையமுதனிடம்,

''ஆனால் இதில் ஜெயித்தது நான் தான்!'' என்றாள் இளவரசி.

''நீ சொன்னால் நான் ஒத்துக் கொள்வேனா? இரு நாம் நம் ஜட்ஜிடமே கேட்கலாம்!'' என்ற கலையமுதன் தன் பெற்றோரின் புறம் திரும்பி.

''அம்மா, அப்பா நீங்க சொல்லுங்க, ஜெயித்தது நானா? இல்லை ப்ரின்ஸியா?'' என்றான்.

''ஜெயித்தது நீங்கள் இல்லை மது, அண்ட் மகியின் பேரண்ட்ஸ் தான்!'' என்றவர்களிடம்,

''நோ இதை ஒத்துக்கவே முடியாது!'' எனக் கத்தினார்கள் கலையமுதனும், இளவரசியும்.

''இங்கே என்ன நடக்கிறதென்று கொஞ்சம் புரியும்படி சொல்ல முடியுமா?'' கேலிக் குரலில் கேட்டாள் மகிஷா.

''அண்ணி உங்களுக்கு இன்னமுமா புரியவில்லை? உங்க ப்ரண்ட்ஷிப்பை வைத்து ஒரு சின்ன கேம் விளையாடினோம். ப்ரின்ஸஸ்ஸும் இளவரசியும் ஒன்று தான் என்று இங்கிருக்கும் அனைவருக்குமே தெரியும். ஆனால் மைடியர் மதுபாலனுக்கும், உங்களுக்கும் மட்டும் தெரியவில்லை. ஸோ இப்படி ஒரு கேம்!''

''ப்ரின்ஸஸ். ஆனால் அன்றைக்கு காலேஜில் நீ'' சந்தேகமாக கேட்டான் மதுபாலன்.

''அது ஒரு சின்ன பொய் ட்ராமா டியர்!''

''ப்ரின்ஸஸ். நீ பொய் சொல்வாயா?''

''இதென்னப்பா கேள்வி? நாங்கள் என்ன அரிச்சந்திரன் பரம்பரையா? பொய் சொல்லாமல் உண்மை மட்டும் பேச?''

கேலியுடன் கேட்ட கலையமுதனின் கையை கிள்ளிய மகிஷா.

''என்னிடமும் பொய் சொல்லி விளையாடி விட்டீர்களே!'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

''ஸ்வீட்டி. நீயே உண்மையைச் சொல் 'இந்த சின்ன சஸ்பென்ஸ்' விளையாட்டில் உனக்கு உண்மையாகவே த்ரில் கிடைத்ததா? இல்லையா?''

''ஆனால் யாராவது இப்படித் திருமணத்தின் போது விளையாடுவார்களா? இவள் நட்புக்காக என்று ஏதாவது விபரீத முடிவு எடுத்திருந்தால் என்ன ஆவது?'' கோபமாகக் கேட்டான் மதுபாலன்.

''அட' இது நல்ல நியாயமா இருக்கே! நாங்கள் ஒன்றும் திருமணத்தின் போது விளையாடவில்லை! எங்களின் விளையாட்டு ஆரம்பித்து பலநாட்கள் ஆகிவிட்டது.

நீ என்றைக்கு உனக்கு காதல் கனவுகள் இன்றி தூக்கம் தொடாகிறது! என என்னிடம் டீல் பண்ணிக் கூறினாயோ அன்றைக்கே நான் பிரின்சியிடம் உன்னைப் பற்றிய அனைத்து விசயங்களையும் கூறி விட்டேன் என் மொபையிலிருந்த உன் போட்டோவையும் இவள் அன்றைக்கே பார்த்து விட்டாள். அதன் பிறகு தான் இவள் உன்னை ரயிலில் எதேச்சையாக சந்தித்தது. அன்றைக்கு நீ இவளிடம் இவளை பற்றிய விவரங்களை கேட்காமல் விட்டது உன் தவறு! எந்த மடையனாவது ஒரு பெண்ணைப் பாா்த்துப் பேசியும் அவளைப் பற்றிய விவரங்களை கேட்காமல் காதலிக்க ஆரம்பிப்பானா?

ஆனால் நீ காதலித்தாய்! நானும் பிரின்சியும் இது போல ஒரு கேம் விளையாடி எட்டு வருடங்களுக்கு மேலாகி விட்டது. அதனால் தான் இப்போது இப்படி

ஒரு கேம் விளையாடினோம். ஆனால் இதற்கு க்ளைமாக்ஸை திருமணத்தின் போது வைத்தது நீங்கள் இருவர் தான்!'' எனக் கூறிக் கொண்டிருந்த கலையமுதனை இடைமறித்தாள் இளவரசி.

''ராகவ் வரவில்லையென்றால் க்ளைமாக்ஸ் இப்போதும் கூட வந்திருக்காது. மதுபாலன் டியர் நீங்கள் பயப்படும்படி மகிஷா அண்ணி எதாவது விபரீத முடிவு எடுத்திருந்தாலும் கூட ஒன்றும் ஆகியிருக்காது. ஏனென்றால் என் அண்ணனுக்கு அண்ணியின் மீது அவ்வளவு பாசம் இதற்கு இரண்டு சாம்பிள் சொல்கிறேன் கேட்டுக் கொள்ளுங்கள்.

நண்பனின் காதலை வாழ வைக்க வேண்டும் என்று அண்ணி எதாவது செய்துக் கொள்வார்களோ என்று இவன் அண்ணியின் வீட்டிலிருந்த அனைத்து பாய்ஸன் பாட்டில்களிலும் ஹனியை மாற்றி வைத்து விட்டான். அதுவும் ஹனியின் ஸ்வீட்னெஸ் தெரியக் கூடாது என்று அதில் ஏதோ ப்ளேவரையெல்லாம் கலந்தான். இது மட்டுமா? அண்ணியின் அறையில் கட்டிலின் மேல் ஏறி நின்றாலும் கூட ஃபேனின் இறக்கைகள் கைகளுக்கு எட்டவில்லை என தெரிந்த பிறகே நிம்மதியானான்!''

''இவ்வளவு ரிஸ்க்குடன் எதற்கு விளையாட வேண்டும்? போதாக் குறைக்கு இதில் எங்களின் பேரண்ட்ஸூம் கலந்துக் கொண்டிருக்கிறார்கள்! நானும், மகியும் உங்களுக்கு என்ன விளையாட்டு

பொம்மையா?'' ஆத்திரத்துடன் கேட்டான் மதுபாலன்.

''உன் முதல் கேள்விக்கான பதிலை நான் சொல்கிறேன்!'' என்ற கலையமுதன்.

''ஒரு விளையாட்டில் எந்த அளவிற்கு ரிஸ்க் இருக்கிறதோ அதே அளவிற்கு த்ரில்லும் இருக்கும். உனக்குத் தெரியுமா? வீ ஆர் வெரி லவ் த்ரில்லிங்!'' என்றான்.

'அச்சச்சோ! சரியான த்ரில்லிங் பேய்கள்கிட்ட மாட்டிக் கொண்டோமா?' என மதுபாலன் நினைத்துக் கொண்டிடிருக்கும் போதே இளவரசி,

''உங்களுடைய செகண்ட் டவுட்டுக்கான ஆன்சரை நான் சொல்கிறேன். உங்க பேரண்ட்ஸ் கிட்ட 'லைப் இஸ் எ கேம்' என்று சொல்லி அவர்களை ப்ரைன் வாஸ் செய்தது இவன் தான்!'' என்றவள் தன் அண்ணனின் புறம் கைக் காட்டினாள்.

''ப்ரைன் வாஸ்? எதற்காக இவ்வளவு கலாட்டா?'' என மகிஷா சலிப்புடன் கேட்க,

அங்கிருந்த பெரியோர்கள் ஆறு பேரும்,

''முகூர்த்த நேரம் முடிய இன்னும் பத்து நிமிஷம் தான் இருக்காம்!'' என்றனர் ஒரே குரலில்.

''ஸ்வீட்டி, நம் சண்டையை பிறகு போடலாம். இப்போது வாம்மா!'' என்ற கலையமுதனை மகிஷாவின் கையை பிடித்து அழைத்துக் கொண்டு மணமேடைக்கு சென்றான்.

மதுபாலனும் கோபக்காரன் போலவே முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு இளவரசியின் கழுத்தில் தாலி கட்டினான்.

அவர்களுக்கு அட்சதையை தூவிக் கொண்டே மாதவி,

''இவர்கள் இப்படி ஏதாவது செய்வார்கள் என்று தான் நான் திருமணத்தை இந்த சின்ன கோவிலிலும், ரிசப்ஸனை பெரிய மண்டபத்திலும் வைக்கச் சொன்னேன்!'' என்றாள்.

''ஆமாம் சம்பந்தி! சொந்தகாரர்களை திருமணத் திற்கு அழைக்காமல் ரிசப்ஸனுக்கு அழைத்தது எவ்வளவு நல்லது. பார்த்தீர்களா?'' என்றாள் மாதரசி.

''ஆமாம் மாதரி! ஒரு வேளை சொந்தகாரர்கள் திருமணத்திற்கு வந்திருந்தால் இவர்கள் செய்த கலாட்டாவில் அவர்கள் பயந்தும் போயிருப்பார்கள்!'' என்றாள் ஹேமாவதி.

''இப்போது எதற்காக இப்படி பேசிக் கொண் டிருக்கிறீர்கள்? நான் அப்போதே சொன்னேன். சின்ன பிள்ளைகளுடன் நாமும் சேர்ந்து விளையாட வேண்டாம் என்று! ஆனால் நீங்கள் தான் கேட்க வில்லை!'' என்றார் சோமநாதன்.

''ம்ப்ச். அட விடுங்கப்பா'' ஏதோ சின்ன பிள் ளைகள் விளையாட ஆசைப்பட்டன. நாமும் சரி என் றோம். எப்படியோ. ஜெயித்தது நாம் தானே!'' என்றார் சாந்தசீலன்.

''ஆனாலும் ஒரு உண்மையை ஒத்துக் கொண்டே ஆக வேண்டும் சம்பந்தி! இன்றைக்கு என் பிள்ளை கள் இருவரும் இப்படி சந்தோஷமாக இருக்கிறார்கள் என்றால் அதற்கு முழுக் காரணமும் உங்கள் பிள்ளை கள் தான்'' என்றார் சாருகேசன்.

19

அந்த அழகான மண்டபத்தில் நடந்துக் கொண் டிருந்தது கலையமுதன் - மகிஷா, மதுபாலன் - இளவரசிக்கான ரிசப்ஸன்.

இரு ஜோடிகளுமே முகத்தில் செயற்கை புன்ன கையை பூசியபடி நின்றிருந்தனர்.

கலையமுதன் மகிஷாவிடம் ஆயிரம் ஸாரி கேட்டு விட்டான். இருந்தாலும் அவள் அவனை மன்னிக்க வில்லை.

இளவரசியோ மதுபாலனிடம் லட்சம் ஸாரியே கேட்டு விட்டாள். ஆனாலும் அவன் இவளை மன்னிக்க மனம் வைக்கவில்லை!

''ஸ்வீட்டி செல்லம்! ஸாரிடா மகிஷாம்மா!'' என்றான் கலையமுதன் மெல்லிய குரலில்.

''யார் நீங்க? என்னிடம் ஏன் ஸாரி கேட்கிறீங்க? முன்பின் தெரியாதவர்கள் சொல்லும் ஸாரியை

யெல்லாம் நான் ஏற்றுக் கொள்வதில்லை!'' மகிஷாவும் மெல்லிய குரலில் கூறினாள்.

''ஏன் ஸ்வீட்டி இது உனக்கே நியாயமாகப் படுதா? அன்றைக்காவது நான் உனக்கு வெறும் காதலன் ஆனால் இப்போதோ உன் கழுத்தில் தாலி கட்டி விட்ட கணவன்! நீ என் செல்ல ஸ்வீட்டி! உன்னிடம் நான் விளையாடாமல் யார் விளையாடுவார்கள்?''

''ஹீப், விளையாட்டு? எது விளையாட்டு? என்னையும் என் நண்பனையும் அழ வைத்ததா விளையாட்டு?''

''ஸ்வீட்டி. டேக் இட் ஈ ஸி! இது வெறும் விளை யாட்டு தான்! ஆனால் இதன் மூலம் உங்களின் நட்பு எந்த அளவிற்கு ஸ்ட்ராங் என்று எல்லோர்க்கும் புரிந்தது அல்லவா?'' என்றவனின் பார்வை ஏதேச்சை யாக மண்டப வாயிலின் புறம் திரும்பியது.

அங்கே ஹாலிவுட் மாடலின் ரேஞ்சக்கு நடந்து வந்துக் கொண்டிருந்தாள் மாலினி.

''ஸ்வீட்டி!''

மகிஷாவை அவசரமாக அழைத்த கலையமுதன் மாலினியை சுட்டிக் காட்டினான்.

''இவள் தான் மாலினி. நான் காலேஜ் படிக்கும் போது!'' அவன் முடிக்காமல் விட்டாலும் கூட அவளுக்குப் புரிந்தது.

மாலினி ரிசப்ஸன் மேடையை நோக்கி வருவதைக் கண்டவள் கலையமுதனை நெருங்கி நின்றாள்.

அவனின் கையை தன் தோள் மீது போட்டுக் கொண்டாள்.

ஆனால் ரிசப்ஸன் மேடைக்கு வந்த மாலினியோ கலையமுதனை விட்டு விட்டு மதுபாலனை பார்வை யால் விழுங்கினாள்.

மாலினி வாங்கி வந்திருந்ததோ ஒற்றை பூங்கொத்து.

அதை கலையமுதன் ஜோடிக்கு தர அவளுக்கு விருப்பமில்லை. அதனால் பூங்கொத்துடன் மதுபாலன் ஜோடியிடம் சென்றாள்.

மதுபாலனிடம் பூங்கொத்தை நீட்டியவள்,

''ஹாய் ஹேண்ட்சம்! யுவர் நேம் ப்ளீஸ்!'' என் றாள்.

அவளின் ஹேண்ட்சம் என்ற வார்த்தையைக் கேட்டு இளவரசிக்கு உள்ளுக்குள் எரிமலை வெடித்தது. இளவரசியின் பொறாமை மதுபாலனுக்கு சீண்டல் குணத்தை தூக்கி விட்டது.

மாலினியைப் பார்த்து பற்கள் தெரிய சிரித்தவன்,

''மை நேம் இஸ் மதுபாலன். உங்க ஸ்வீட் நேம் என்னன்னு தெரிந்துக் கொள்ளலாமா?'' என்றான்.

''அவளோட பெயரைக் கேட்டு என்ன செய்யப் போறீங்க?'' மதுபாலனின் கையை கிள்ளியபடி மெல்லிய குரலில் கேட்டாள் இளவரசி.

''ம், சின்ன வீடா வருவாளான்னு கேட்கத்தான்!'' என அவளிடம் மெல்லிய குரலில் கூறியவன் இவளின் புறம் திரும்பினான்.

''மை ஸ்வீட் நேம் மாலினி. பட் யுவர் நேம் இஸ் வெரி ஹாட்யா!'' எனக்கூறி இரட்டை அர்த்தத் துடன் சிரித்தவள்,

''உங்க மொபைல் நம்பர் தர முடியுமா?'' என்றாள்.

சட்டைக் காலரை தூக்கி விடாத குறையாக கெத்தாக இளவரசியை திரும்பி பார்த்தான் மது பாலன்.

கலங்கியிருந்த அவளின் விழிகளை கண்ட வனுக்கு முகம் வாடிவிட்டது.

''சாரி ப்ரின்ஸஸ்! சும்மா விளையாடினேன்'' என்றான் மெல்லிய குரலில்.

பின்னர் மாலினியின் புறம் திரும்பியவன்,

''ஹாய் மாலினி. ஷி இஸ் மை வொய்ப்! அப்புறம் ஒரு விசயம். எங்க மேரேஜ் லவ் மேரேஜ். நான் மட்டுமல்ல என் மொபைல் நம்பரும் கூட இனி இந்த ப்ரின்ஸஸ்க்கு தான் சொந்தம். ஸோ நீங்க இவகிட்ட என் மொபைல் நம்பரை வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்றவன் தன்னிடம் கிப்ட் தர வந்த நண்பனிடம் பேச ஆரம்பித்து விட்டான்.

தன் ஏமாற்றத்தை வெளிகாட்ட விரும்பாத மாலினி சிரித்த முகத்துடனேயே அங்கிருந்து நகர்ந் தாள்.

நண்பன் சென்றதும் இளவரசியின் புறம் திரும்பி னான் மதுபாலன்.

''ஸாரி மை டியர்!'' கலங்கிய குரலில் கூறினாள் இளவரசி.

''இட்ஸ் ஓகே ப்ரின்ஸஸ்!''

''ஆனாலும் உங்களுக்கு என் மீது தான் எவ்வளவு காதல்! தாலி கட்டும் நேரத்திலும் கூட காதலியை நினைத்துக் கொண்டு என் முகத்தை பார்க்காமல் கண்ணீர் சிந்தினீர்களே! எனக்கு அப்போது எப்படி இருந்தது தெரியுமா? 'நான் தான் உங்க ப்ரின்ஸஸ். என் முகத்தை பாருங்கள்!' என கத்த வேண்டும் போல் இருந்தது.''

அவளைப் பார்த்து மென்னகை புரிந்தவன்,

''ப்ரின்ஸஸ். நான் என் நட்புக்காகக் காதலை துறக்க நினைத்தது உண்மை தான். ஆனால் என் மனதுக்குள் பசுமரத்தாணி போல் பதிந்து விட்ட உன்னை மட்டும் மறக்க கூட முடியவில்லை!'' என்றான்.

''அப்படியென்ன நான் மட்டும் ஸ்பெஷல்?''

''ப்ரின்ஸஸ். நான் என் வாழ்க்கையில் எத் தனையோ பெண்களைச் சந்தித்தது உண்டு. அவர் களிடம் வராத ஒரு ஈர்ப்பு உன்னை பார்த்த நொடி யிலேயே வந்து விட்டது. உண்மையிலேயே நீ என் ப்ரின்ஸஸ் தான்! இப்படி ஒரு விளையாட்டு விளையாடாமல் நீ எனக்கு கிடைத்திருந்தால் எப்படி டீல் பண்ணி இருப்பேனோ தெரியாது! ஆனால் இவ்வளவு ரிஸ்க்குக்கு பிறகு நீ எனக்கு கிடைக்கவும் என் காதல் ஆயிரம் கோடி மடங்கு அதிகமானது போல் தெரிகிறது. ஐ லவ் யூ ப்ரின்ஸஸ்!''

அவளின் கண்கள் மீண்டும் கலங்கவும்,

''மறுபடியும் ஏன் அழுகிறாய் ப்ரின்ஸஸ்?'' எனக் கேட்டான் மதுபாலன்!

''இது ஆனந்த கண்ணீர்!''

அவள் சிரிப்புடன் சொல்லவும் மதுபாலனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

* * *

ரிசப்ஸன் முடிந்த பிறகு மகிஷாவின் அருகில் வந்த இளவரசி,

''ஐ யம் ஸாரி அண்ணி! அன்றைக்கு நீங்கள் என்னிடம் பேச வந்த போது நான் உங்களை இன்சல் செய்வது போல் பேசி விட்டேன். நான் அன்றைக்கு பேசியதையெல்லாம் மறந்து விடுங்கள்! நீங்கள் மதுபாலனை அவன், இவன், வாடா, போடா இப்படி எப்படி வேண்டுமானாலும் கூப்பிடலாம். அதற்கு முழு உரிமையும் உங்களுக்கு உள்ளது!'' என்றாள்.

''ஆமாம் என்னையும் கூட நீ வாடா, போடா என்றே அழைக்கலாம். அதற்கான ஆல் ரைட்ஸ் உனக்கு உண்டு!'' என்று கலையமுதன் தன் பங்கிற்கு கூறினான்.

அவனைப் பார்த்து உதட்டை சுழித்த மகிஷா, மதுபாலனின் புறம் திரும்பி,

''மது நீ அன்றைக்கு கூறியது ஹண்ட்ரட் பர்ஸண்ட் உண்மை! உனக்கு நான் மட்டும் தான் நூறு சதவீத உண்மைத் தோழி! மற்றவர்களெல்லாம் தொண்ணூறு

சதவீதம். தொண்ணூற்று ஐந்து சதவீதம் மட்டும் தான் உனக்கு உண்மையாக நடந்துக் கொள் கிறார்கள்!'' என்றாள்.

''ஹேய் ஸ்வீட்டி, இது என்னைக் குத்திக் காட்டவா? பாலாவுக்கு நானும் ஹண்ட்ரட் பர்ஸண்ட் உண்மைத் தோழன் தான்! ஒரு நண்பன் மற்றொரு நண்பனிடம் தான் விளையாட முடியும். நான் அன்றைக்கே கூறி னேன், என் தங்கை போட்டோவை காட்டுகிறேன் என்று! ஆனால் இவன் தான் ப்ரின்ஸஸ் பைத்தியத் தில் என் சொல்லைக் கேட்கவில்லை!'' என்றான் கலையமுதன்.

''சரிப்பா. விளையாடி தான் முடித்து விட்டீர்களே! அதன் ரிசல்ட்டை சொல்லுங்கப்பா!'' என்றான் மதுபாலன்.

''பாலா போட்டி இது தான்! என் ஸ்வீட்டியின் நட்பு தான் சிறந்தது என்று நான் கூறினேன். உன் நட்பு தான் சிறந்தது என்று ப்ரின்சி கூறினாள். உங்கள் இருவரின் நட்புமே சமம் என்று உங்கள் பேரண்ட்ஸ் கூறினார்கள்.

நீ ப்ரின்சி யாரென்றே தெரியாமல் அவள் கழுத்தில் தாலி கட்டியிருந்தால் உன் நட்பு சிறந்தது. உனக்காக மகிஷா என்னை மணக்க மறுத்தால் அவள் நட்பு சிறந்தது. ஆனால் நீங்கள் தான் இருவருமே நட்புக்கு துணை நின்றீர்களே! ஸோ உங்கள் இருவர் நட்புமே சிறந்தது. அதனால் இதில் ஜெயித்தது உங்கள்

பேரண்ட்ஸ் மட்டுமல்ல நானும், ப்ரின்சியும் தான்! நிஜமாகவே உங்க நட்பு க்ரேட் பாலா!'' என்று பெருமிதத்துடன் கூறினான் கலையமுதன்.

''நாங்கள் உங்களுக்கு ஒரு மிரட்டல் விடுத்தோம். ஆனால் இந்த மிரட்டல் செல்ல மிரட்டல் டியர்!'' என்றாள் இளவரசி.

மகிஷாவை தனியே அழைத்துச் சென்ற கலை யமுதன்,

''ஸ்வீட்டி, நீ ஒரு மூன்று வார்த்தைகள் சொன்னால் இந்த ஸ்டோரிக்கு ஒரு எண்ட் போட்டு விடலாம்!'' என்றான்.

''என்ன மூன்று வார்த்தை?''

''மறந்து விட்டாயா ஸ்வீட்டி? ஐ ஹேட் யூ சொன்னா வாயால் ஐ லவ் யூ என சொல்ல வைப்பதாக சவால் விட்டேனே! இப்போது நீ என்னிடம் ஐ லவ் யூ சொல்லவில்லையென்றால் நான் என் பெயரை மாற்றியாக வேண்டும்! பிறகு இந்த ஸ்டோரியில் என் பெயரை ஆரம்பத்தில் இருந்து மாற்றி எழுத வேண் டும்! ஸோ நீ!''

''அப்பா, அறுவை போடாதீங்க! 'ஐ லவ் யூ...' போதுமா?''

''போதும் ஸ்வீட்டி!''

.... மீண்டும் சந்திக்கலாம் தோழியே...

★